www.tamilarangam.net

THAYAGAM

22-29 · 4 · 94

உண்மைத் தேடல்42-4

[illegible]5¢

# தாயகம்

## மாத்தயா – பிரபாகரன் குழுவினருக்குள் மோதல்?

### முல்லைத்தீவில் பத்துப் புலிகள் பலி

பிலிப்பைன்ஸில் புலிகள் ஆயுதக் கொள்வனவு
பிலிப்பைன்ஸ் அரசு விசாரணை

சுவிஸிலிருந்து வெளியேற்றப்படும் தமிழ் அகதிகள்

இராணுவத்தை எதிர்கொள்ள தயாராகும் புலிகள்

புதிய சமாதான முயற்சிக்கு புலிகள் ஆர்வம்
பிரதமருக்கு தமிழ் அதிகாரி ஊடாகத் தகவல்

நகரின் மத்தியில் SENDURAN & CO
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# இராணுவத் தாக்குதலை எதிர்கொள்ள புலிகள் தயார் நிலையில்

குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்று நடக்கக் கூடும் என்று இயக்கத்தினரை உசார் நிலையில் இருக்குமாறும் அவ்வாறான தாக்குதலை முறியடிக்க வேண்டும் என்றும் பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் வானொலிச் செய்திகளை அவதானிப்பவர்கள் வழங்கிய தகவல்படி 'யாழ்ப்பாணத்தின் மீது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட தாக்குதலை நடத்தும் நோக்கில் இராணுவம் துருப்புகள், வாகனங்கள், ஆயுதங்களை குவிப்பதாகவும்' 'அரச படைகள் குடாநாட்டின் மீது ஆக்கிரமிப்பு மேற் கொண்டால் இதுவரையும் பாவிக்காத நவீன ஆயுதங்களையும் புதிய தாக்குதல் முறைகளையும் பாவித்து படையினருக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் வானொலியில் பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

சென்ற வாரங்களில் கிழக்குப் பகுதியிலிருந்து துருப்புகள் திருமலை துறைமுகத்திற்கு நகர்த்தப்பட்டிருந்தன. இந்த துருப்புகள் வடக்கே அனுப்பப்படுவதாகவே நம்பப்படுகிறது. கிழக்கில இராணுவத்திற்கு பதிலாக அதிரடிப்படையினர் பல இடங்களில் செயற்படுகின்றன.

இராணுவம் வாங்கியுள்ள ஆயுதங்கள் மே மாதம் அளவிலேயே வந்து சேரும் என்பதால் அதன் பின்பே தாக்குதல் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது. புதிய விமானங்கள், கனரக டாங்கிகள், பீரங்கிப் படகுகள் என்பவற்றை இராணுவம் கொள்வனவு செய்துள்ளது. கடற்படைக்கு யுத்தக்கப்பல் ஒன்று, இரண்டு பீரங்கிப் படகுகள், ஒரு தரையிறக்கும் கப்பல் என்பன வாங்கப்பட்டுள்ளன. விமானப்படைக்கு போக்குவரத்து ஹெலிகொப்டர்களும் இராணுவத்திற்கு டாங்கிகளும் வாங்கப்பட்டுள்ளன.

இந்த இராணுவம் வாபஸ் பெறுவதால் கிழக்கில் இராணுவத்தின் பிடி விலகலாம் என்று ஆய்வாளர்க்ள கருதுகின்றனர்.

கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருமலையில் உள்ள ஏழு காலாட்படையணியில் ஆறும் ஐந்து தொண்டர் படையணியில் மூன்றும் வாபஸ்பெறப்பட்டதுடன் இருபது சிறு முகாம்களும் மூடப்பட்டுள்ளன.

இராணுவத்தின் கமாண்டோ பிரிவும் விசேட படையணியும் வாபஸ் பெறப்பட்டுள்ளது. தற்போது அதிரடிப்படையினரே இவர்களின் பொறுப்பை ஏற்றுள்ளனர். காட்டுப்பகுதி, கரையோரப் பகுதிகளில் அதிரடிப்படையும் நகரப் பகுதிகளில் பொலிசாரும் செயற்படுவர்.

இந்த வாபஸ் பெறுதலினால் கிழக்கில் மீண்டும் புலிகளின் கை ஓங்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

புலிகள் பலாலி முகாம், காரைநகர் முகாம் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சமே இந்த படை வாபஸிற்கு காரணம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# மாத்தயா- பிரபாகரன் குழுக்களிடையே மோதல்?

மாத்தயா குழுவினருக்கும் பிரபாகரன் குழுவினருக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மோதல் ஒன்றில் பத்துப் புலிகள் கொல்லப்பட்டதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. முல்லைத்தீவுப் பகுதியில் உள்ளவர்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் வெளிவந்த இந்த செய்தியில் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் கடந்த வாரம் நடந்த தாக்குதல் ஒன்றின் போது ட்ராக்டர் ஒன்றில் சென்ற புலிகள் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டிருந்தனர். இந்த தாக்குதலை நடத்தியவர்கள் மாத்தயாவுக்கு விசுவாசமானவர்கள் என்றே புலிகள் நம்புகிறார்கள் என்று அப்பகுதியில் இருப்பவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த ஆகஸ்ட் மாதம் விசாரணைக்குள்ளான பின்னர் மாத்தயா வெளியே காணப்படவில்லை. இவர் கொல்லப்பட்டுவிட்டதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.

மாத்தயாவின் விசுவாசிகளால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்ற அச்சத்தில் பிரபாகரன் குடாநாட்டை விட்டு வெளியேறி முல்லைத்தீவுப் பகுதியில் வசிப்பதாக இராணுவ உளவுப் பிரிவு கூறி வருகிறது.

இந்த தாக்குதல் உண்மையில் மாத்தயாவின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்டதாயின் அவரது கைதுக்கு பின்னர் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும் என்றும் அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

மாத்தயாவுக்கும் பிரபாகரனுக்குமான மோதலைச் சாதகமாகவைத்து புலிகளை பலமிழக்கச் செய்ய இராணுவம் முயன்று வருகிறது.

இதற்குள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள் கூறிய செய்திப்படி யாழ்ப்பாணத்தில் பலர் மாத்தயாவைத் தண்டிக்கும் பிரபாகரனின் முடிவை ஆதரிப்பதாக ரொய்ட்டர் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

2 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐ.நா படைக்கு இலங்கைப் பொலிசார்

முதன் முறையாக இலங்கை ஐ.நா சமாதானப் படைக்கு பொலிசாரை அனுப்புகிறது. 12 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மொசாம்பிக்குக்கு செல்கிறார்கள். இவர்கள் அங்கு சமாதானப் படையில் செயற்படுவார்கள்.

இலங்கையை இராணுவத்தினரை அனுப்பும்படி கேட்டபோதும் வடக்கு யுத்தத்தில் இராணுவத்தினர் கலந்து கொள்வதால் பொலிசார் அனுப்பப்படுகின்றனர்.

## பாதுகாப்புச் சபையில் இலங்கை

ஐ.நா பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினராக தன்னை 96ம் ஆண்டு சேர்க்க வேண்டும் என்று இலங்கை கோரியிருக்கிறது. 55ம் ஆண்டு முதல் ஐ.நாவில் இலங்கை அங்கத்துவம் வகித்தாலும் 60ம் ஆண்டு மட்டுமே இலங்கை பாதுகாப்புச் சபையில் அங்கம் வகித்திருக்கிறது.

முன்பு அயல்நாடுகள் அங்கம் பெறுவதை ஆதரித்தாலும் தற்போது இலங்கை அங்கத்துவம் பெற வேண்டும் என்று வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளுக்கான ஆசனம் சுழற்சி முறையில் ஒவ்வொரு நாடுகளுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது தென் ஆசிய நாடு ஒன்று பெற வேண்டும். ஆனால் கிழக்காசிய நாடான தென் கொரியா அந்த ஆசனத்தைப் பெற முயற்சிக்கிறது.

## சிறிமா வைத்தியசாலையில்

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தற்போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். குடலிறக்க நோய் காரணமாக இவர் கடந்த வியாழன் அனுமதிக்கப்பட்டுள்ளார் என புதல்வி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

78 வயதான சிறிமாவோ எதிர்க்கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரம் தான் இவர் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார்.

# மீண்டும் புலிகள் சமாதானத்திற்கு தயார்

தாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராய் இருப்பதாக மீண்டும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். தாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக அரசுக்கு அவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் வெளிநாட்டு நிருபர்களுக்கு தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் முக்கிய அரச அதிகாரி ஒருவர் மூலமாக இந்த செய்தி கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் இது குறித்து ஜனாதிபதியுடன் தான் பேசுவதாக பிரதமர் தெரிவித்ததாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் பல தடவைகளில் இந்த விருப்பம் தெரிவிக்கப்பட்ட போதும் இரு தரப்பினரதும் நிபந்தனைகள் பேச்சுவார்த்தைகளை சாத்தியமற்றவையாக்கியிருந்தன.

இரு வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் கரிகாலனும் மற்றும் முக்கியஸ்தர்களும் சமீபத்திய சமாதான முயற்சி பற்றி தெரிவித்திருந்தனர். பேச்சுவார்த்தைக்கு அவர்கள் தயாராயிருப்பதாகவும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச தரப்பினர் முடிவு எடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றும் இவர்கள் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

## மாத்தயா...

ரொய்ட்டர் நிருபர் ரேகான் குணசேகரவின் செய்திக்குறிப்புபடி இந்த பிளவை இராணுவம் பயன்படுத்த முனைகிறது.

தாக்குதலை நடத்த இதுதான் சரியான தருணம், புலிகள் பிரிவடைந்த நிலையில் இருக்கும் போது நாங்கள் உளவியல் ரீதியாக அதை ஆழமாக்கி தாக்குதல் நடத்துவோம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த டிசம்பர் மாதமும் ஒன்பது பேர் தகவல் கொடுப்பவர்கள் என்ற பேரில் மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தார்கள். இயக்கம் எப்போதும் எதிர்ப்பை மரண தண்டனை மூலமே அடக்கியிருக்கிறது.

வடக்கைச் சேர்ந்த ஒருவரின் கருத்துப்படி மாத்தயா செல்வாக்குள்ளவராக இருந்தாலும் அவரிடம் வசீகரமோ, ஆளுமையோ இல்லை.

மாத்தயா இல்லாத போதும் புலிகளின் யுத்த திறன் குறைந்ததாக தெரியவில்லை. சமீபத்திய பூனகரி தாக்குதல் கூட இதை நிருபித்திருக்கிறது.

கடந்த வருடம் புதிதாக ஆட்சேர்த்த புலிகள் சுமார் ஐயாயிரம் பேரைச் சேர்த்ததாக கூறியுள்ளனர். 'மாத்தயா உயிரோடு இருக்கும்வரை பிரபாகரனுக்கு பிரச்சனை தான், புலிகளின் பெரும்பகுதி மாத்தயாவுக்கு விசுவாசமானது' என்று இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறு ரெகான் குணசேகர தெரிவித்திருக்கிறார்.

## புலிகள் பிலிப்பைன்சில் ஆயுதக் கொள்வனவு

புலிகள் பிலிப்பைன்ஸில் ஆயுதம் வாங்குவதற்கு முயற்சிப்பதாக செய்திகள் கூறுகின்றன. புலிகளின் ஏஜண்டுகள் பிலிப்பைன்ஸிற்குள் ஆயுதம் வாங்குவதற்காக நுழைந்திருப்பதாக வந்த உளவு பிரிவுத் தகவல்கள் குறித்து பிலிப்பைன்ஸின் பிரதான குற்றத்தடுப்பு பிரிவு விசாரணை செய்கிறது.

ஜனாதிபதியின் குற்றத்தடுப்பு கமிஷனின் அலுவலர் ஒருவர் தெரிவித்த தகவல்படி புலிகள் உல்லாசப் பயணிகள் போன்று நாட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் இவர்கள் மத்திய விசாயாப் பகுதி, தென்பகுதியில் உள்ள மின்டனுவோப் பகுதிக்குள் ஆயுதம் வாங்க சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அவர்களுக்கு இலங்கையில் நல்ல ஆயுதங்கள் உள்ளன, ஏன் இங்கே வந்தார்கள் என்பது மர்மமாக உள்ளது என்று அந்த அலுவலர் தெரிவித்திருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்ட உல்லாசப் பயணத்துறை

இனரீதியான யுத்தம் ஆரம்பித்ததால் பாதிக்கப்பட்டிருந்த உல்லாசப் பயணத்துறை தற்போதைய குண்டுவெடிப்பாலும் பயங்கரவாதப் பயமுறுத்தலாலும் மீண்டும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. முன்பு கேள்விப்பட்டிராத எல்லாளன் படை இதற்கு உரிமை கோரியுள்ளதுடன் 'எதிர்காலத்தில் இலங்கையின் எல்லாப் பாகத்திலும் முதலீட்டாளர்களும் பயணிகளும் தாக்கப்படுவார்கள், தங்கள் பிரஜைகளை இலங்கைக்கு அனுப்பும் வெளிநாட்டு அரசுகளே இதற்கு பொறுப்பேற்க வேண்டும்' என்றும் அறிவித்துள்ளது. இந்தக் கடிதம் புலிகளின் செயற்பாடு என்று உளவுத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உல்லாசப்பயணத்துறை அதிகாரிகள் இந்த மிரட்டலை ஒதுக்கினாலும் ஐரோப்பிய பயணிகள் இந்த பயமுறுத்தல் குறித்து அக்கறை கொண்டுள்ளனர்.

சில ஜப்பானிய, பிரிட்டிஸ் பயண முகவர்கள் இலங்கைக்கான பயணங்களை ரத்துச் செய்துள்ளனர். ஜேர்மனியிலும் தொடர்பு சாதனங்கள் இந்த குண்டுவெடிப்பு பற்றி அதிகமாக தகவல் தருகின்றன. ஜேர்மனியில் அதிகமானவர்கள் இலங்கைக்கே செல்கிறார்கள். பல பயண முகவர் நிறுவனங்கள் எதிர்காலத்தில் பயணிகளுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று தங்களின் இலங்கைத் தொடர்பாளர்களைக் கேட்டுள்ளன.

கடந்த வருடம் இலங்கை 20 கோடி டொலர்களை உல்லாசப் பயணத்துறை மூலம் பெற்றுக் கொண்டது. இது தேயிலை, புடைவை ஏற்றுமதிக்கு அடுத்ததாக மூன்றாம் இடத்தைக் கொண்டுள்ளது. மொத்தம் 65 ஆயிரம் பேர் உல்லாசப் பயணத்துறையில் வேலை செய்கிறார்கள். கடந்த வருடம் ஜேர்மானியர்களே அதிகமாக வந்திருந்தார்கள். அடுத்து பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்கன்டினேவியா, நெதர்லாந்து, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்தவர்களே அடுத்து அதிகளவில் வந்தார்கள்.

தற்போது உல்லாசப் பயணிகளுக்கு நம்பிக்கையூட்ட, ஹோட்டல்களுக்கு வெளியே இராணுவ சோதனை நடைபெறுகிறது. தற்போது உத்தியோகபற்றற்ற முறையில் ஐரோப்பிய தூதுவர்கள் சமீபத்தில் சந்தித்து தங்கள் நாட்டு அரசுகளுக்கு இலங்கையின் நிலைமை பற்றி அறிவிப்பதாக முடிவு செய்துள்ளனர்.

சமீபத்திய குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வருவாய் பாதிப்பை அறிந்து கொள்ள காலம் பிடிக்கும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டமைச்சர் ஹமீது கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், ஒல்லாந்து, பின்லாந்து, நோர்வே, சுவிஸ், ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து வெளிநாட்டு முதலீட்டாளர்களும் உல்லாசப் பயணிகளும் பயப்படத்தேவையில்லை என்று கூறியுள்ளார்.

# சுவிஸிலிருந்து வெளியேற்றப்படும் தமிழ் அகதிகள்! தமிழ் கட்சிகள் கண்டனம்

சுவிஸில் உள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று தமிழ் கட்சிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் அமைதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலை உருவாகவில்லை என்று கடந்த வெள்ளிக்கிழமை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த புதன்கிழமை சுவிஸ் அரசு இலங்கைத் தமிழர்களுக்கு மனித உரிமை மீறல் பிரச்சனைகள் இல்லாததால் அவர்கள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தது.

கூட்டணியைச் சேர்ந்த ஜோசப் பரராஜசிங்கம் கருத்து தெரிவித்த போது முன்பு தானும் மற்றக் கட்சிகளும் கேட்டுக் கொண்ட போதும் சுவிஸ் அரசு அனுப்பும் திட்டத்தை கைவிடாதது குறித்து வருத்தம் கொள்வதாகக் கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃபைச் சேர்ந்த பேச்சாளர் கருத்துக் கூறும் போது யுத்தத்திற்கு பயந்து கொழும்பு வந்த போது, பொலிசாரால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

சுவிஸ் அகதி அமைப்புகளும் தேவாலயக் குழுக்களும் இந்த முடிவைக் கண்டித்துள்ளன. தற்போதைய இலங்கையின் நிலைமை திருப்பி அனுப்பக் கூடியதாக இல்லை என்று இவை தெரிவித்துள்ளன.

முன்பு இரண்டாம் உலக யுத்தத்தின் போது யூத அகதிகளை நாட்டுக்குள் விடாமல் எல்லைகளை சுவிஸ் மூடியிருந்தது.

கடந்த தை மாதம் இலங்கை அரசுடன் இந்த அகதிகள் வெளியேற்றம் பற்றி ஒப்பந்தம் ஒன்றை சுவிஸ் செய்திருந்தது. ஐரோப்பிய நாடுகளில் சுவிஸே இலங்கையர்களை திருப்பி அனுப்பும் முதலாவது நாடாகும். அடுத்த இரண்டு வருட காலத்திற்குள் பல நூற்றுக்கணக்கானவர்கள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவார்கள். ஒப்பந்தப்படி இவர்கள் கொழும்பில் விசேட முகாம்களில் வைக்கப்படுவார்கள்.

94ல் மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்ட 300 பேரும் அடுத்த வருடம் 300 பேரும் அனுப்பப்படுவர். சுவிஸில் சுமார் 12 ஆயிரம் பேர் முடிவுகளையும் விசாரணைகளையும் எதிர்பாத்து உள்ளனர். இவர்களில் கோரிக்கை நிராகரிக்கப்படுபவர்கள் திருப்பி அனுப்பப்படுவர்.

ஆனால் நான்கு வருடங்களுக்கு மேலாக வசிக்கும் ஆறாயிரம் பேர் தொடர்ந்தும் வசிக்க அனுமதிக்கப்படுவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறந்த சந்தை முறை தொடரும்

## உலகவங்கிக்கு சுதந்திரக் கட்சி உறுதிமொழி

தான் ஆட்சிக்கு வந்தால் திறந்த சந்தைப் பொருளாதார முறை தொடரும் என்று சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கிறது. உலகவங்கியின் தென்னாசிய பிரிவின் இயக்குனர் பவுல் ஐசன்மானுடன் நடத்திய பேச்சவார்த்தையின் போது சிறிமாவோ பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வருடம் இறுதியில் ஜனாதிபதி தேர்தலும் அடுத்த வருட ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற உள்ளன. சந்தைப் பொருளாதாரச் சீர்திருத்தத்தினால் கிடைக்கும் பயன்களை சமனாக யாவரும் பெற சுதந்திரக் கட்சி உழைக்கும் என்றும் லாபகரமான அரச நிறுவனங்களை அரசாங்கம் தனது கையாட்களுக்கு மலிவான விலைக்கு விற்றதை தாம் எதிர்ப்பதாகவும் சிறிமாவோ தெரிவித்தார்.

தாம் ஆட்சிக்கு வந்தால் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த தனியார் துறைக்கு சலுகைகள் வழங்கும் என்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் என்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெறப்படும்என்றும்சிறிமாவோ உலக வங்கி அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

# வீடு எரித்த இராணுவத்தினர் கைது

பனிச்சம் கேணியில் பொதுமகன் ஒருவரைக் கொன்று 56 வீடுகளை எரித்த குற்றச்சாட்டில் இராணுவத்தினர் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் திங்கட்கிழமை இராணுவ வண்டித் தொடர் ஒன்று தாக்கப்பட்டதை அடுத்து இராணு வத்தினர் வெறியாட்டத்தில் ஈடுபட்ட னர். இந்த தாக்குதலில் ஏழு பேர் காயமுற்றதாக கூட்டணி எம்.பி பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வண்டித்தொடரில் இறுதியாக வந்த பஸ் வண்டி கண்ணிவெடி க்குள்ளானதில் பதினைந்து இராணுவத்தினர் காயமடைந்தனர்.

# மன்னாரில் குண்டுவீச்சு

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமம் ஒன்றின் மீது நடந்த குண்டுவீச்சில் இருவர் கொல்லப்பட்டு எண்மர் காயமடைந்தனர். கடந்த புதன்கிழமை நடந்த குண்டுவீச்சில் ஆறு குண்டுகள் அகதி முகாம் ஒன்றுக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள கிராமம் ஒன்றின் மீது வீசப்பட்டன.

கிராமத்தில் உள்ள புலிகளின் அலுவலகத்திற்கு அருகில் இந்தக் குண்டுகள் விழுந்து வெடித்த போதும் எந்த சேதமும் அலுவலகத்திற்கு ஏற்படவில்லை.

# புதிய ஏவுகணை உற்பத்தி

இந்தியா தற்போது ஆளில்லா விமானம் ஒன்றை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. விமானி இல்லாமல் தானாகவே இயங்கும் இந்த விமானம் மூலம் தாக்குதல்களையும் வேவு பார்த்தலையும் நடத்தலாம். அத்துடன் ரேடார் கருவிகளை ஏமாற்றி இந்த விமானங்கள் தாக்குதல் நடத்தும் வல்லமை பெற்றன.

பரீட்சார்த்த பறப்புகள் வெற்றியளித்ததை அடுத்து வர்த்தக ரீதியாக இந்த விமானம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. லக்சய என்ற இந்த விமானம் 200 கிலோ குண்டுகளை 300 மைல் தூரத்திற்கு கொண்டுசென்றுவீசக்கூடியன. கடல் மட்டத்திலிருந்து நான்கு மைல் உயரத்தில் 300 மைல் வேகத்தில் இவை பறக்கக் கூடியன.

இரண்டு வருடத்தில் இவை விமானப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படும். வருடாந்தம் முப்பது விமானங்கள் உற்பத்தி செய்யப்படும். இந்த விமானங்கள் இரண்டு கோடி ரூபா பெறுமதியானவை.

இந்த லக்சய ரக விமானங்கள் உலகில் விமானியின்றி இயங்கும் ஐந்தாவது ரகத்தைச் சேர்ந்தன.

இந்தியாவின் ஏவு கணைப்பரிசோதனைகளை நிறுத்தும்படி அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது.

# வாஷிங்டன் வரும் ராவ்

அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று நரசிம்மராவ் மே மாதம் 19ம் திகதி வாஷிங்டன் வருகிறார். இவர் ஜனாதிபதி பில் கிளின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இதுவே நரசிம்மராவ் பிரதமரான பின்னரான முதல் அமெரிக்க விஜயமாகும். இவர்கள் இருவரும் முக்கிய சர்வதேச விவகாரங்கள் பற்றியும் இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவது பற்றியும் ஆராய்வார்கள்.

சமீபத்தில் இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்த அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் ஸ்ட்ரோப் ரல்பொட் இந்தியா சென்றிருந்தார். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு சார்பாக உள்ளதுஎன்ற இந்தியாவின் பயத்தை குறைப்பதே இவரது நோக்கமாக இருந்தது.

இவரது விஜயத்தின் பின்னர் லண்டனில் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற இரகசிய மாநாடு ஒன்றில் தென் ஆசியாவில் பெரும் ஆயுதங்களை ஒழிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இந்த மாநாடு மர்மமானது என்றும் இது பற்றி பாராளுமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரியிருந்தன.

இந்த பேச்சுவார்த்தைகளின் பின்பே அமெரிக்கா நரசிம்மராவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. ஐ.நா பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள், ஜப்பான், ஜேர்மனி, இந்தியா, பாகிஸ்தான் அனைத்தும் சேர்ந்து தென்னாசியாவில் அணு ஆயுதங்களைக் குறைப்பது பற்றி இருவரும் ஆராய்வார்கள்.

இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் ரீதியாக மோதல் இருந்தாலும் வர்த்தக ரீதியான தொடர்பு அதிகரிக்கிறது. தற்போது இந்தியாவுடனான மிகப் பெரிய வர்த்தகத் தொடர்புகளை அமெரிக்காவே கொண்டுள்ளது. முன்பு ரஷ்யா இந்த இடத்தை வகித்திருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இத்தாலியில் இந்திய அகதிகள்

இத்தாலியில் கப்பல் மூலம் வந்த நூறு இந்திய அகதிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் ஜேர்மனியின் வடபகுதியில் வந்திருப்பதாக கருதிக் கொண்டதாக தெரிவித்தனர். இத்தாலியின் தென்பகுதிக் கடற்கரையில் கப்பலில் இருந்து வள்ளங்களில் இறக்கப்பட்ட இவர்கள் ரஷ்யாவில் வைத்து கப்பல் ஒன்றில் மூவாயிரம் டொலர்கள் கொடுத்து ஜேர்மனிக்கு பயணமாகினர். ஆனால் இவர்கள் இத்தாலிக் கரையில் இறக்கி விடப்பட்டனர். இவர்கள் காற்றடிக்கப்பட்ட படகுகளில் கரையொதுங்கிய போது கைது செய்யப்பட்டனர்.

கரையில் மற்றவர்கள் கைது செய்யப்படுவதைக் கண்ட கப்பல் ஊழியர்கள் சிலரை கடலில் வீசினர். மூவர் சிறுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்று பொலிசார் தெரிவித்தனர்.

## ஆந்திர மாவோயிஸ்ட் விடுதலை

ஆந்திராவின் மக்கள் யுத்தக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரான மாவோயிஸ்ட் கொண்டபள்ளி சீதாராமையா மீதான குற்றச்சாட்டு மூன்றில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். 73 வயதான இவர் இருபது வருடங்களாக தேடப்பட்டு கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது செங்குந்தராபாத் சதி முயற்சி குற்றசாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இதில் இவரது தொடர்பு நிருபிக்கப்படாததால் இவர் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

இவர் மீது இன்னும் மூன்று குற்றச்சாட்டுக்கள் உள்ளதால் அவை முடியும் வரை இவர் விடுவிக்கப்பட மாட்டார். சிறையிலிருந்து தப்பியது, சதி முயற்சி என்பன இதில் அடங்கும்.

இவரும் 41 பேரும் ஆந்திர அரசைக் கவிழ்க்க முயன்றதாக 74ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது.

## விவசாயிகளின் கடன்கள் மன்னிப்பு

### தற்கொலையில் எதிரொலி

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை ரத்துச் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் 14 விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்திருந்தனர்.

விவசாய அமைச்சர் தர்மதாச பண்டா தெரிவித்த செய்தியை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்தது. எண்பது வீதமான விவசாயிகள் கடனை அடைத்த போதிலும் மீதியாய் உள்ளவர்களில் நியாயமான கடன்களை ரத்துச் செய்ய அரசு தயாராய் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பொலனறுவையில் 14 விவசாயிகள் கடும் மழை காரணமாக பயிர்கள் அழிந்ததால் தற்கொலை செய்திருந்தனர். அங்குள்ள அறுபதாயிரம் விவசாயக்குடும்பங்கள் எந்த வருமானமும் இன்றி வாடுகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த விவசாயிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அரிசியின் விலையைக் கூட்ட வேண்டும், உரமான்யம் வழங்கப்பட வேண்டும், விவசாயிகளுக்கான வரியைக் குறைக்க வேண்டும், அரிசி இறக்குமதியை நிறுத்த வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முன்பு இந்தக் கடன்களை நீண்ட காலத்திற்கு திருப்பிக் கொடுக்கவும் குறைந்த வட்டி விகிதத்தை கோரியும் அரசு உதவியது என்றும் வானொலி தெரிவித்தது.

## கான்ஸ் போட்டியில் இந்தியப்படம்

கான்ஸில் மே 12 முதல் 23 வரை நடைபெறும் திரைப்பட விழாவில் இந்தியப்படம் ஒன்றும் தங்க இலை விருதுக்காக போட்டியில் கலந்து கொள்கிறது. ஸ்வேகம் என்ற ஷாஜி கருண் இயக்கிய இந்தப் படம் 22 படங்களுடன் போட்டியிடுகிறது.


அன்ரனி பிறதர்ஸ் நிறுவனத்தின்

2ம் ஆண்டு நிறைவையொட்டி மே 15 வரை

மாபெரும் மலிவு விற்பனை

அரிசி வகைகள், அரிசி மா வகைகள், பருப்பு வகைகள், பருப்பு வகைகள், கடல் உணவு, இறைச்சி வகைகள், பாலுணவுப் பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

1472, Queen St W

Tel:516 3903




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிஷ்டம் தரும் தீவு;
## இலங்கையின் பொருளாதார வளர்ச்சி
## அசோசியேட்டட் பிரஸ் நிருபர் செய்தி

செரண்டிப் என்று பெயர் பெற்ற இலங்கை பற்றி அசோசியேட்டட் பிரஸ் நிருபர் ஆதர் மாக்ஸ் ஒரு செய்திக்கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இதில் இலங்கையின் தற்போதைய நிலை பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது.

செரண்டிப்பில் தற்போது நல்ல நேரம் திரும்பிக் கொண்டிருக்கிறது. இலங்கையின் பழைய பெயரான செரண்டிப் என்பதிலிருந்து தான் ஆங்கிலத்தில் அதிட்டம் என்ற கருத்துள்ள செரண்டிப்பிற்றி என்ற சொல் பிறந்தது. கொழும்பில் சூரிய மறைவின் போதான வெளிச்சத்தின் பின்னணியில் பாரம் தூக்கிகள் நிலை கொண்டுள்ளன.

கொழும்பில் நடைபெறும் இந்த முன்னேற்றத்தை பார்க்கும் போது சில நூறு மைல்களுக்கு அப்பால் நடைபெறும் யுத்தம் மறக்கப்பட்டு விடும். தொடர்ந்து வரும் தலையிடி போல, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் யுத்தம் தலையிடி தரும், ஆனால் வாழ்வின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

கொழும்பில் ஹோட்டல்களில் நடைபெற்ற குண்டுவெடிப்பு கூட வழமையான வியாபாரத்தை குழப்பவில்லை. இலங்கையின் பங்கு சந்தையில் கூட இந்த குண்டுவெடிப்புகள் எந்த பாதிப்பையும் பாரதூரமாக ஏற்படுத்தவில்லை. தாங்கள் பாரிய சரிவை எதிர்பார்த்ததாகவும் ஆனால் சிறிய சரிவே ஏற்பட்டதாகவும் ரவி ரட்ணசபாபதி என்ற பங்கு முகவர் தெரிவித்தார்.

பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் நடைபெற்ற விடயங்கள் தர்க்க நியாயங்களுக்கு அப்பாற்பட்டது. கொழும்பில் கலவரங்கள் எதுவும் இன்றி அமைதியாக இருந்தது. ஜனாதிபதி கொல்லப்பட்ட பின்னர் விஜேதுங்க பதவியேற்றது சுமுகமாக நடைபெற்றது. இந்த வன்முறைகள் பார்வையாளர்களையோ, முதலீட்டாளர்களையோ பயமுறுத்தவில்லை. உல்லாசப் பயணத்துறை யுத்தத்திற்கு முந்திய நிலையை அடைந்தது. பங்கு சந்தை ஆசிய நாடுகளில் முதன்மையாக உயர்ந்தது.

செரண்டிப் என்ற பெயர் கிரேக்க யாத்திரிகர்களால் வைக்கப்பட்டது. செரண்டிப்பின் மூன்று ராஜகுமாரர்கள் என்ற பாரசீகக் கதை இலங்கை பற்றிய பிரசித்தமான கதை.

வடக்கு கிழக்கு பிரச்சனையை மற்ற பகுதியுடனான தொடர்பிலிருந்து விடுவித்திருக்கிறோம், இதனால் மற்ற பொருளாதாரத்தில் இது பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்கிறார் பிரதமர். மக்கள் இலங்கை என்றவுடன் பிரச்சனை என்று நினைக்கிறார்கள், ஆனால் இங்கே வந்தவுடன் தங்களுக்கு அதனால் பாதிப்பில்லை என்பதை உணர்கிறார்கள் என்கிறார் அவர்.

பொருளாதார நிலைமை வளர்ந்ததால் அரசியல் பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காணவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள் முடியும்வரை எந்த தீர்வும் வராது என்றே பலரும் கருதுகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம் 5.7 வீதத்தால் அதிகரித்திருக்கிறது. வெளிநாட்டு செலாவணியான இருநூறு கோடி டொலர்கள் ஆறு மாத இறக்குமதிக்கு போதுமானது. வேலையில்லாமை 15 வீதமாகவும் பணவீக்கம் 12 வீதமாகவும் இருந்தாலும் அவை நிலையாக உள்ளன.

கடைகளில் பொருட்களும் வாடிக்கையாளர்களும் நிறைந்துள்ளனர். மேல்நாடுகளில் 35 டொலருக்கு கிடைக்கும் ஆடம்பரப் பொருட்கள் இங்கே ஐந்து டொலர்களுக்கு கிடைக்கின்றன. கல்வியறிவு 90 வீதமானது. இது ஆசியாவில் அதிகமானது. இந்த சனத்தொகை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வேலையாட்களை வழங்க சாதகமானது.

ஆடைத்தொழிற்சாலையில் மாதம் நாற்பது டொலர்களுக்கு அறுபது மணி நேரம் வேலை செய்ய பெண்கள் உள்ளனர். இந்தப் பெண்கள் ஆறு முதல் பத்து வருடங்கள் படித்ததுடன் விளக்கங்களை ஆங்கிலத்தில் வாசிக்கக் கூடியவர்கள் என்கிறார் முன்னாள் அமெரிக்கத் தூதுவரும் தற்போது வியாபார ஆலோசகருமான ஜேம்ஸ் ஸ்பெய்ன்.

கொலைகளைப் புரிந்த மரணப்படையினர் பிரேமதாசாவின் மரணத்துடன் மறைந்து விட்டனர்.

87 முதல் 90 வரை நாற்பதாயிரம் பேர் வரை காணாமல் போயினர். ஆனால் கடந்த வருடம் நூறு பேர் மட்டுமே காணாமல் போயினர்.

பயச்சூழ்நிலை போய்விட்டாலும், அந்த இயந்திர அமைப்பு செயற்பாட்டில் உள்ளது, இது மீண்டும் நடக்கலாம் என்கிறார் குமுதினி சாமுவேல். இவர் இன்போர்ம் என்ற மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்.

பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் 15 ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டு ஓரிரு நாட்களில் விடுவிக்கப்பட்டனர்.

விஜேதுங்க பிரச்சனை பயங்கரவாதப் பிரச்சனை, இதற்கு அரசியல் தீர்வல்ல, இராணுவத் தீர்வே முடிவு என்கிறார்.

சட்டமா அதிபர் திலக் மாரப்பனையின் கருத்துப்படி 'சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் விட்டுக் கொடுப்பிற்கான எதிர்ப்புணர்வுக்கு எதிராக அரசு செயற்படுவது கஷ்டம்' என்கிறார். 'உள்ளூர் அரசியலே அரசின் தலைவிதியை நிர்ணயிக்கிறது. தெற்கில் உள்ள மக்களின் சம்மதம் இன்றி எந்த அரசுமே தீர்வு வழங்க முடியாது' என்கிறார் அவர்.

---

***வானமெங்கும்***
***பரிதியின் சோதி***
***மலைகள் மீதும்***
***பரிதியின் சோதி***
***தானை நீர் கடல்***
***மீதிலும் ஆங்கே***
***தரையின் மீதும்***
***தருக்கள் மீதும்***
***கானகத்திலும்***
***பற்பல ஆற்றின்***
***கரைகள் மீதும்***
***பரிதியின் சோதி***
***மானவன்றன்***
***உள்ளத்தில் மட்டும்***
***வந்து நிற்கும்***
***இருளிது வென்னே...***



**'தாயகம்' மொனிக்காவின்**
**அன்புத் தந்தையின்**
**ஆத்மா சாந்தியடையட்டும்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் குழந்தையை
# புகைத்தலில் இருந்து
# உங்களால்
# நிறுத்த முடியாது.

உண்மையில, நண்பர்களுடன் சேர்ந்து கொள்வதற்கான அழுத்தங்களும் இயற்கையான ஆர்வ குணமும் உறுதியான மன நிலையுடைய குழந்தைகளைக் கூட புகைக்க முயற்சிப்பதற்கு வற்புறுத்தலாம். ஆனால் ஒரு தரம் முயற்சி செய்வது என்பது ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் முயற்சி செய்வது போன்றதல்ல. அத்துடன், அங்கு தான் உங்கள் பங்களிப்பு தேவைப்படுகிறது.




அவர்களது முதலாவது சிகரெட் அவர்களை எங்கு கொண்டு செல்லும் என்பதை உங்கள் குழந்தைகள் உணர்ந்து கொள்ள உதவுங்கள். விஞ்ஞானத்தில அறியப்பட்ட மோசமான போதைப் பொருட்களில் நிக்கொட்டினும் ஒன்று என்பதை சுட்டிக் காட்டுங்கள். இந்தப் பழக்கம் ஹெரோயின், கொக்கெய்ன் போன்றவற்றின் பழக்கங்களை விடுவதை விட கஷ்டமானது. அத்துடன் தங்களால் கைவிட முடியுமாயின் பெரும்பாலான சிகரெட் புகைப்பவர்கள் நாளையே தங்கள் பழக்கத்தை விட்டு விடுவார்கள் என்பதும் உண்மை.

இந்த எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இது தான் சரியான தருணம். ஏனெனில் இப்போது தான், உங்கள் குழந்தைகள் மாநிலம் தழுவிய புகைத்தலுக்கு எதிரான பிரசாரம் பற்றி கண்டும் கேட்டும் வருகிறார்கள். ஆனால் அவர்கள் பெறும் எல்லா தகவல்களையும் விட, நீங்கள் வழங்கும் தகவல் போன்று எதுவும் பாதிப்பை ஏற்படுத்த மாட்டா. நீங்கள் புகைப்பவராக இருந்தால் கூட.

பிள்ளைகளுடன் பேசுவதற்கு தயார்படுத்த, இந்தப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் புகைத்தலில் இருந்து தங்களை நிறுத்திக் கொள்வதற்கான உற்சாகத்தை உங்கள் குழந்தைகளுக்கு கொடுங்கள். எல்லாமே கால தாமதமாவதற்கு முன்னர்.

**தொடர்புகளுக்கு 1-800-268-1154**
**ரொறன்ரோவில்; 314-5518**
**TDD 1-800-387-5559**




Ministry of Health
Ontario



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல்கலாசார நிகழ்ச்சியில் பரவசம் செய்த பரதம்



கனடிய மண் அற்புதமானதொன்று. பல்வேறு கலை, கலாசாரப் பின்னணிகளில வாழ்ந்த மககள் புதிய வாழ்வைத் தேடி வந்த பின்பும் தங்கள் பாரம்பரியங்களை தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதற்கான சரியான விளைநிலம் அது. இந்த மண் வந்தாரை வரவேற்று, அவர்களது பண்பாடுகளுக்கும் கலாசாரங்களுக்கும் ஊக்கம் கொடுக்கும் பாரம்பரியங்கள் கொண்டது. வந்த தலைமுறை தன் பாரம்பரியங்களை மனதில் சுமந்து கொண்டிருக்க, இங்கே வாழும் இளைய தலைமுறை மேற்கத்திய சூழல்களுக்கும் மத்தியில் தங்களது கலாசாரச் சிறப்புகளை வளர்ப்பதற்கு இங்குள்ள பாடசாலைகள் களம் அமைத்துக் கொடுக்கின்றன. அந்த வகையில் மடோனா கத்தோலிக்க உயர்நிலைப் பாடசாலை கடந்த 22ம் திகதி 'இயங்கும் பாரம்பரியங்கள்' என்ற நிகழ்ச்சியை நடத்தியிருந்தது. இந்தப் பாடசாலையில் பயிலும் மாணவியர் பல்வேறு நாடுகள், மொழிகளின் பின்னணியில் வந்தவர்கள். இவர்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் விழாவாக இது அமைந்தது.

போலந்து, தென்னமெரிக்க, பஞ்சாபிய, இந்திய, பாகிஸ்தான், லெபனன், ஸ்பானிய, தமிழ், மேற்கு ஆபிரிக்க, மேற்கிந்திய என்று பலதரப்பட்ட கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் பல்வேறு சுவையான நிகழ்ச்சிகள் அரங்கேறியிருந்தன. நடனங்கள், நாடகங்கள், பாடல்கள் என்று ஆர்ப்பாட்டமான உற்சாகங்களுடன் மாணவியர் தங்கள் கலாசாரப் பின்னணிகளை எடுத்துக் காட்டியிருந்தனர். பஞ்சாபிய பாம்பு நடனம், போலந்தின் வசந்தகால நடனம் என்பவற்றுடன் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் பரத நாட்டியமும் அரங்கேறியது. விழாவின் இறுதியில் அதன் முத்தாய்ப்பாக அமைந்தது செல்வி றெஜினா பிலிப்பபிள்ளை அவர்கள் நடராஜருக்கு வேண்டுதல் செய்யும் வகையில் ஆடிய நடனம். மிகுந்த ஆர்வத்துடனும் மேடையில் அவர் ஆடிய போது பல்வேறு இனத்தவரும் மெய்மறந்து ரசித்தனர். அவர் அஷ்டமியில் கழுத்தை அசைத்ததைக் கண்டு அவரது பாடசாலை மாணவிகள் அனைவருமே உணர்ச்சிப் பிளம்பாகி பெரும் ஆச்சரியத்துடன் கூச்சல் போட்டதே அவரது திறமைக்கு சரியான சான்றாக கூறக் கூடியது. பரத நடனத்தின் அற்புதங்கள் மொழியையும் பண்பாட்டையும் கடந்தன. அது சொல்கின்ற செய்திகள் கூட மனித மனத்தை ஊடறுத்து எல்லைகளை உடைத்துச் செல்கின்ற ஒன்று. தமிழர் பண்பாட்டின் அம்சமே அன்று அனைவரையும் கவர்ந்தது என்றால் மிகையாகாது.

இந்த விழாவின் வெற்றியில் கல்லூரி நிர்வாகிகள் Mrs.Bilyk, Mrs.Bauer, Ms.Girardi ஆகியோரும் மேலாளர் Mr.Tom Donovan, இயக்குனர் Pina Losiggio ஆகியோர் முக்கிய பங்காற்றினர். இங்க நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக இந்த பல்கலாசார நிகழ்ச்சியை ஏழு மாதங்களுக்கு மேலாக பயிற்றுவித்த ஆசிரியை Mrs.Tocano இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு மூலகாரணமாய் இருந்தவர் என்றால் மிகையாகாது.

உலகெலாம் தமிழோசை பரவும் வகை செய்தல் வேண்டும், தமிழின் பெருமையும் பண்பாட்டின் பெருமையும் பரவச் செய்வதற்கு எங்கள் தமிழ் மாணவர்கள் சரியான பங்களிப்பு செய்ய வேண்டும்.

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான
தலைச்சோடனை, அலங்காரப்
பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாலி 796 2672
பூங்கொத்துக்கள் நீங்கள்
விரும்பிய வடிவங்களில்
பெற்றுக் கொள்ளலாம்
Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பாவுக்காக...

தேசத்தை தொலேத்து வந்து பின்பு
தேதிகள் கூட இங்கே மாறிக்கொள்கின்றன
பிஞ்சு உள்ளத்தில் அம்மா எத்தனே பொய்களே
சொல்லியிருக்கின்ருள்.....

வானத்து விண்மீன்களே பறித்து தருவதாக..
உறங்கா விட்டால் பூதம் பிடித்து போகும் என..
நீங்கள் ஒருபோதுமே இந்த பொய்களே
எனக்கு சொல்லியதில்லேயே அப்பா.....

நள்ளிரவில் நாங்கள் உறங்கிய பின்பும்
அம்மா வாசற்படியில் உங்களுக்காக
காத்திருப்பாள்.... மறந்து போனீர்களோ
எப்படி உங்களால் முடிந்தது?

உறக்கத்திலிருக்கும் எங்கள்
போர்வைகளே சரிசெய்து கழுத்து வரை
இழுத்து விட்டு முத்தமிட்டு செல்வீர்கள்
நாங்கள் உறங்குவது போல் நடிப்போம்.....

கல்லூரி செல்வதற்கு
அம்மாவிடம் பணம் வாங்கி
அம்மாவுக்கு தெரியாமல்
உங்களிடமும் பணம் வாங்குவது
உங்களுக்கு தெரியும்.
அப்போதும் அம்மாவுக்கு தெரியாமல்
பணம் தருவீர்கள்....
ஏன் நேசிப்பு அதிகம் என்பதளுலா?

உங்கள் இதயம்
இரும்பைப் போன்றது என அறிவேன்
ஆனல் ஒரு நாளும்
துருப்பிடித்து போனது கிடையாது
இரும்பு இளகிப் போகாதே அப்பா

ஆனல் என்னைப் பார்க்க வேண்டும்
என நீங்கள் எழுதும் கடிதங்களில்
உங்கள் இதயம் இழகிப்போயிருக்கும்
அப்போது என் மனம்
மௌனமாய் அழுதுக்கொள்ளும்
பிரிவுகள் வாழ்வில் நிலேப்பதில்லே
ஒரு நாள் சந்திப்பேன் என
கரைந்து போகும் இரவுகளில் நானும்
கண்ணீர் வடித்திருக்கின்றேன்....

அப்போது எனக்கு பதினறு வயது
கண்டி பெரஹரா காலம்
பேரூந்துகள் ஒன்றும் தளதா மாளிகையை
கடக்க முடியாது

நானே நோய்வாய்ப்பட்டிருந்தேன்...
என் கால்கள் சோர்ந்து போயிருந்தன...
என்னுல் நடக்க முடியவில்லே
இடையிலே காரை நிறுத்தி
என்னே தூக்கி தோளிலே போட்டுக்கொண்டு
ஐந்து மைல் தூரம் நடந்து சென்றீர்கள்....

அப்போது உங்கள் மகளே காப்பாற்றிவிட
வேண்டும் என உறுதி கொண்டு சுமந்து சென்றீர்கள்
ஆனல் உங்களே நானில்லாத நேரத்தில்
சுமந்து சென்று மண்ணுக்குள் புதைத்து விட்டார்கள்....

உங்களே எப்படி இந்த மனிதர்கள்
மண்ணுக்குள் புதைத்திருக்க முடியும்.................
எனக்கு இப்போதைக்கு
கூரிய நகங்களும் இறக்கைகளும் வேண்டும்.....
பறந்து சென்று உங்கள் கல்லறையை தோண்டி
உங்களே வெளியே எடுத்து நான் முத்தமிட்டு
கதறி அழ வேண்டும்....

**என் தந்தையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசியில் தொடர்பு கொண்டும் என் துயரங்களில் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் சார்பிலும் என் குடும்பத்தினர் சார்பிலும் மனப்பூர்வமான நன்றிகள்.**

**ஜீவிதத்தில் நேசித்தவர்களே**
**மரணத்தில் மறக்காதிருப்போம்.**

அன்புடன்
மோனிக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**1.7.1926**

**மறைவு**
**27.4.1994**

# கந்தையா சோதிலிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலம் சென்ற கந்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் (சந்திரோதயா வித்தியாலயம், உரும்பிராய்) கந்தையா சோதிலிங்கம் அவர்கள் 27.4.1994 புதன்கிழமை ஸ்காபரோவில் காலமானார்.

இவர் கோண்டாவிலைச்சேர்ந்த காலம் சென்ற தம்பையா ராசம்மா தம்பதிகளின் புதல்வி பரிபூரணத்தின் அன்புக்கணவரும் மஞ்சுளா, சியாமளா, நந்தகுமார், செந்தில்குமார், நர்த்தனகுமார், ஊர்மிளா ஆகியோரின் அன்புத்தந்தையும்
சண்முகராஜன், சந்திரசேகரன், சுஜேதா, யாழினி, சுகந்தி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புமாமனாரும்
கனகலிங்கம், பஞ்சலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும்
கணேசபிள்ளை, சிவநேசம், சிவசுப்பிரமணியம் (ராமு) அன்னபூரணம், செல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும்
நாகேஸ்வரி, முருகையா ஆகியோரின் சகலனும்
காயத்ரி, நிரோசன், நிசாந்தன், துர்க்கா, ஆரதி, விதுரன், பிரகாஷ், ஹரிஸ், சாகரி, சாகரன், சயனன் இவர்களின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வியாழக்கிழமை 28.4.1994 மாலை 7.00 மணியில் இருந்து 9.00 மணி வரையும் வெள்ளிக்கிழமை 29.4.94 மாலை 5.00 மணியில் இருந்து 9.00 மணி வரையும் Ogden Funeral Home, 4146 Sheppard Ave E, (Midland/Sheppard) Tel:293 5211 பார்வைக்காக வைக்கப்படும்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:


(905) 940 6744
(416) 497 1330
754 9520



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலாச்சாரத்துக்காய் கட்டப்படும் கல்லறை



"ஹலோ மை டியர் அம்மா, இந்த நாட்டிலை இது சர்வசாதாரணம். சும்மா அலட்டிக்காதீங்க"

புருஷன் தனது தாயாரை சமாதானப்படுத்த பெரும்பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். புருஷோத்தமன் என்ற பெயரை புலம் பெயர் டமில் கலாசாரப்படி புருஷ் என்று மாற்றி வைத்திருந்தான் அவன்ஃ

விக்கினேஸ்வரன் விக்டர்ஆகி ...... ராஜகுமாரன் றொஜர் ஆகி ... பொன்னுச்சாமி சாம் ஆகி ....... புதிய இனம் ஒன்று தொடங்க கனடாவில் புலம் ஒன்று கிடைத்து விட்டது. புதுக்கலாச்சாரத்தின் புனிதங்களை அனுபவித்துக் கொண்டிருந்தபோது இப்படி ஒரு சோதனையா ? தெரியாத்தனமாக தாயாரை இலங்கையில் இருந்து வரவழைத்தது தப்பாப்போச்சு என்பதை இப்போதுதான் அவன் உணருகிறான்.

"டேய் தம்பி, இதென்னடா இது கறுமம். கலியாணம் செய்யாமல ஆரோ ஒரு பெட்டையோடை நயாகரா போலஸ் போய் இரண்டுநாள் சுத்தீட்டு வருகிறாய். காதலிக்கிறியளோ என்று கேட்டால் இல்லையெண்டு சொலலிறாய். எனக்கு இது நல்லதாப் படேல்லை."

செல்லம்மாவுக்கு எல்லாம் புதினமாக மட்டும் அலல ஏதோ அசிங்கத்தில் கால் வைத்துவிட்டது போல

தெரிகிறது. இவங்கள் என்னடாவெண்டால் இப்படி தனக்கே பேக்காட்டப் பார்க்கிறாங்களே என்ற ஆதங்கம் அவளுக்கு. நாலெழுத்து படிக்கேல்லை என்றவுடன் பைத்தியக்காறங்கள் ஆக்கிடுவாங்க போல இருக்கே.

செல்லம்மாவுக்கு கனடாவுக்கு வரவேண்டும் என்ற ஆசை எப்போதும் இருந்ததில்லை. எந்த நாட்டிலே

இருந்தால் என்ன... மனுஷன் மனுஷனாய் வாழும் இடங்களில் மனநிம்மதிக்கு என்ன குறைச்சல்? என்பதுதான் செல்லம்மாவின் கருத்து.

"அம்மா, உங்களைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு. நாங்கள் யாழ்ப்பாணம் வந்தால் எத்தனையோ பிரச்சனை எண்டு சொல்லுகினம். எங்களுக்காக நீங்கள் கட்டாயம் இங்கை வந்து இருக்க வேணும்" என கடிதத்துக்கு மேல் கடிதம் வந்த போது தனது பிள்ளைகளுக்காய் மனம் இரங்கினாள் செல்லம்மா. இங்கு வந்து சில மாதங்கள் ஆச்சு. அவளின் மகனோ அல்லது மகளோ அவளை ஒருநாளாவது தெருவுக்கு கூட்டிச்செல்லவில்லை. வந்த மறுநாளே தனது இரண்டு குழந்தைகளுக்கும் காவலாய் இருத்திவிட்டு செல்லம்மாவின் மகள் எங்கோ போய் வருவாள். எங்கு போகிறாய் என்றால் ஏதாவது சொல்லுவாள். அந்த ஆங்கிலச் சொற்கள் செல்லம்மாவுக்கு விளங்குவதில்லை.

"ஏன்டீ, சுகந்தி உன் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுத்தால் குறைஞ்சு போடுவியளே. தமிழ் வகுப்பு எல்லாம் நடக்குதாம்"

"சும்மா இரு, அங்கை மாதிரி இல்லை இங்கை. தமிழ் என்னத்துக்கு. நாங்கள் தமிழைப் பேசி என்னத்தைக் கண்டம்."

சுகந்தி இப்படிச் சொல்வது செல்லம்மாவுக்கு பிடிக்கவில்லை. அவள் இல்லாதபோது குழந்தைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுப்பாள். அதைக்கூட சுகந்திதடுத்துவிட்டாள். தமிழ் படித்தால் பிள்ளைகளின்ரை ஆங்கில உச்சரிப்பு சரிவராதாம்.

இன்றைக்கு வீடே அமர்க்களப்படுகிறது. செல்லம்மாவின் மகள் சுகந்தியின் குழந்தைக்கு பிறந்தநாள். கிளீனிங் முதல் சமையல் வரை செல்லம்மாவின் பொறுப்பில் விடப்பட்டது. அவளுக்கு உடம்புக்கு இயலாமல் இருந்துகூட வெளிக்காட்டாமல் தானே எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தாள்.

தாயுள்ளம் தனது பிள்ளைகள் சந்தோசமாக இருக்கவேண்டும் என்று நினைத்தது. இப்படிப் பிறந்தநாள்

**சிவப்பிரகாசம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விழாக்களை அவள் ஊரில் காணவில்லை. ஒரு புறம் மதுபானங்கள் வந்து குவிந்தது. மறுபுறம் வீடியோவின் விளையாட்டுகள். பாவம் குழந்தை நவீஷாவுக்கு வெயர்த்துக் கொட்டியது. அது ஆறுதலாக ஒரு நிமிடம் இருக்கவில்லை. மாத்தி மாத்தி சட்டைகள். அங்கு ஒரு போஸ். இங்கு ஒரு போஸ்.

அந்தக் குழந்தைக்கு பேசத்தெரிந்திருந்தால் "போங்கடா, உங்கடை விலாசங்காட்ட நான்தானா கிடைச்சேன்" என்று எரிஞ்சு விழுந்திருக்கும்.

சுகந்தியின் கணவர் எதிலும் ஒடும் புளியம் பழமும்போல நடந்து கொண்டார். "ஏன் இப்படி நிக்கிறியள். அங்கை ட்றிங்ஸ் பாவிக்கினம். போய் நீங்களும் எடுங்கோவன். வந்த ஆக்கள் என்ன நினைப்பினம்" சுகந்தி கணவனை உள்ளே கூப்பிட்டு கடிந்து கொண்டாள்.

பிறந்த நாள் கொண்டாட வேண்டும்: வீடியோ எடுக்க வேண்டும்: மதுபானப் பார்ட்டியும் அதில் அங்கமாகவேண்டும்: என்பதெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட கனடியத் தமிழ் கலாச்சாரத்தின் புதிய யாப்பு.

எனவே சுகந்தியின் கணவன் மகேந்திரன் இவைகளை பெரிது பண்ணவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் செல்லம்மாவுக்கும் இன்று சந்தோசம். சில தெரிந்தவர்களுடன் கதைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது இன்றுதானே. ஊரிலே பக்கத்து ஒழுங்கையில் இருக்கும் இராசமணியும் வந்திருந்ததைக் கண்ட செல்லம்மா குசலம் விசாரித்தாள்.

அப்போது பேச்சுவாக்கில் இராசமணி சொன்ன விஷயம் செல்லம்மாவை தலை கிறுகிறுக்க வைத்தது.

சுகந்தியின் நடத்தை சரியில்லை என்றும் புருஷோத்தமனுக்கும் ஏற்கெனவே திருமணமான பெண் ஒருத்திக்கும் தொடர்பு உண்டு என்று அறிந்ததும் செல்லம்மாவால் தொடர்ந்து எதையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. தான் பெற்ற பிள்ளைகளா அப்படி ? தனது பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பொறுக்கமுடியாமல் இப்படி கதை கட்டியிருப்பார்கள் என சமாதானப் படுத்திக் கொண்டாள்.

கேக் வெட்டி முடிந்து டான்ஸ் ஆரம்பமாகிவிட்டது. சுகந்தி யாரோ ஆண்களுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருப்பதை இப்போது செல்லம்மா சந்தேகமாகப் பார்த்தாள்.

கிளாஸ் ஒன்றை சுகந்தியும் எடுத்து பருகிக் கொள்வதை அவள் கண்டுவிட்டாள். அவளால் பொறுக்க முடியவில்லை. செல்லம்மாவைப் பொறுத்த வரை சுகந்தி அவளுக்கு குழந்தைதான். அவளைத் தடுக்க வேண்டும் என நினைத்தாள். பக்கத்தில் நின்ற நாதன் கிள்ளி சீண்டியபோது அதை சுகந்தியும் தடுக்க நினைக்காமல் இரசித்ததை கண்ட செல்லம்மாவுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டுவந்தது. ஒரு கலியாணமான பெண் இப்படி நடந்து கொள்வதை அவளால் அனுமதிக்க முடியவில்லை. சுகந்தியின் கிளாசைப் பறித்து எறிந்து விட்டு கன்னத்தில் பளார் பளார் என அறைந்தாள். பக்கத்தில் நின்ற நாதன் செல்லம்மாவைத் தள்ளிவிட கதிரையின் மேல் போய் விழுந்தாள் செல்லம்மா.

பக்கத்து றூமில் குடித்துக் கொண்டிருந்த புருஷ் ஓடி வந்து பார்த்த போது செல்லம்மா அழுது கொண்டிருந்தாள்.

"உன்ரை அம்மாவை இந்தத் தடியன் தள்ளி விழுத்திப் போட்டான். நாரி முறிஞ்சு போட்டுதடா மேனை"

என்று அவள் அழுத போது மனோகரா போல் புலி எனச்சீறியெழுந்தான் புருஷ். அவன் பாய்ந்தது தாயைத் தள்ளி விழுத்திய நாதன் மேல் இல்லை. பெற்ற தாயின் தலை மயிரைப் பற்றி கொறகொற வென இழுத்துச் சென்று றூமில் போட்டு அடைத்தான்.

"சனியன், உன்ரை அலுவலைப் பாக்க மாட்டாமல் மற்ற விஷயங்களிலை உனக்கென்ன வேலை. வந்த சனத்துக்கு முன்னாலை மரியாதை கெடுத்திப்போட்டியே"

புருஷ் போய்விட்டான். செல்லம்மா அழ நினைத்தாள். ஆனால் அழவில்லை. யோசித்துக் கொண்டிருந்தாள். இந்த வயதான காலத்தில் கூட நிம்மதியாக இருக்க முடியாமல் போய்விட்டதே.

புருஷினை இழந்த செல்லம்மா இவர்களை ஆளாக்குவதற்காக எவ்வளவு பாடுபட்டிருப்பாள். இன்றைக்கு அவளை எவ்வளவு கேவலமாக நடத்துகிறார்கள். பெற்றவர்கள் என்றால் வேலைக்காரர்கள் என நடத்தும் இவர்களின் போலிப் பண்பாட்டை நினைத்து மனம் நொந்தாள். இப்படி எத்தனை வயதானவர்கள் வேலைக்காரர்களாக வீட்டுக்குள்ளே சித்திரவதைப்படுகின்றனரோ!

யாரோ யன்னலால் எட்டிப் பார்ப்பதை செல்லம்மா கண்டாள். அது வேறுயாரும் அல்ல. சுகந்தியின் கணவர் மகேந்திரன்.

" மாமி, என்னை மன்னிச்சிடுங்கோ. நான் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏதும் கதைச்சால் குடும்பம் குலைந்து கலாச்சாரம் கவிழ்ந்து வீணான அவமானம் வரும். எத்தனையோ விஷயத்தை அதுக்காக கண்ணை மூடிக்கொண்டு பொறுத்திட்டு வாறன்" என கலங்கிய கண்களுடன் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

நாதன் சுகந்தியின் வீங்கிய கன்னத்துக்கு ஒத்தடம் பிடித்து விட்டான். பார்ட்டி பழையபடி களைகட்டியது. குடியும் ஆட்டமும் உச்சக்கட்டத்துக்கு வந்துவிட்டது. தாயைப்பற்றி பிள்ளைகள் நினைத்துப் பார்க்கவே இல்லை. ஆனால் மகேந்திரன் மட்டும் இடையிடை யன்னலால் எட்டிப்பார்த்தான். செல்லம்மா ஆத்திரத்தில் ஏதும் ஏடாகூடமாகச் செய்துவிட்டால் என்ற பயம் அவனுக்கு.

பார்ட்டி முடிநத்து.

"அக்கா, நவிஷா கக்கா இருந்திட்டாள் போல இருக்கு. டயப்பர் மாத்திவிடுங்கோ" என புருஷ் சொன்ன போதுதான் தாயின் ஞாபகம் வந்தது சுகந்திக்கு. இலவசமாகக் கிடைத்த வேலைக்காரி அல்லவா அவள். கதவைத் திறந்து பார்த்த போது தாய் ஆத்திரத்தில் பேசுவாள் என எதிர்பார்த்தார்கள். ஆனால் செல்லம்மா சிரித்துக்கொண்டே "இப்பத்தான் அம்மாவின் ஞாபகம் வந்ததாக்கும். அழுக்காய் போன நிலத்தைச் சுத்தம் செய்யவா ? அல்லது குழந்தைக்கு கக்கா கழுவிவிடவா ? அல்லது வெல்பெயர்

**18ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுவிற்சர்லாந்தில் 18 வது இலக்கியச்சந்திப்பு

# இலக்கியச்சந்திப்பானது பெறுமதி மிக்க ஒன்றாக வந்துள்ளது....

## வருடத்திற்கு இரண்டு முறை நடந்தாலும் தரமான சந்திப்பாக இருக்க வேண்டும்...

*வாசகர் விமர்சன நிகழ்ச்சியில் கனடாவிலிருந்து வெளிவரும் 'சக்தி' விமர்சிக்கப்பட்டது.ஒரு இயக்கம் சார்பான செய்திகளை இப்பத்திரிகை அதிகமாக வெளியிடுகின்றது என்ற விமர்சனத்திற்கு சந்திப்புக்கு வருகை தந்திருந்த இளங்கோ பதிலளித்தார். சக்தி நடுநிலையான செய்திப் பத்திரிகையாகவே வெளிவருகின்றது, தனிப்பட்ட ஒரு இயக்க எதிர்ப்புப் பத்திரிகையாக வெளிவந்த தூண்டில், தாயகம் போன்ற பத்திரிகைகள் சேர முடியாத வாசகர்களை அடைவதே தமது நோக்கம் எனவும் கூறினர். வீர அஞ்சலிகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது விடுதலைப் புலிகளின் அஞ்சலிகளைத் தாம் போடுவதாகவும் மற்றைய இயக்கங்களைப் பொறுத்த மட்டில் 1987 க்குப் பின் மரணமானவர்களின் அஞ்சலிகளைத் தாம் போடுவதில்லை என்றும் அவர் கூறியது மேலும் விமர்சனங்களை உருவாக்கியது. 1986ல் சகோதரப் படுகொலைகளை ஆரம்பித்த புலிகளுக்கு அவர் எந்தவித விமர்சனமும் வைக்காதது 'சக்தி'யின் நடுநிலைமையை மேலும் கேள்விக்குட்படுத்தியது.*

இலக்கியச்சந்திப்பு எந்தவிதமான வேலைத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தை நாம் முன்பு கொண்டிருந்தாலும் பாரிஸ் இலக்கியச்சந்திப்புக்குப் பின் எமது கருத்தை மாற்றிக் கொண்டோம்..... எமது கோரிக்கை..' வருடத்திற்கு இரண்டு முறை நடந்தாலும் தரமான சந்திப்பாக இருக்க வேண்டும்... இலக்கியச்சந்திப்பானது பெறுமதி மிக்க ஒன்றாக வந்துள்ளது.... இவ்வாறான குறிப்புக்கள் அடங்கிய முன்னுரையுடன் மனிதம் குழுவைச் யோகராசா 18 வது இலக்கியச்சந்திப்பை சுவிஸ்சர்லாந்தில் பேர்ன் நகரில், ஏப்ரல் மாதம் 2ம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜேர்மனியிலும், பிரான்ஸ், ஒல்லாந்து ஆகிய நாடுகளிலும் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இலக்கியச்சந்திப்பு, பல்வேறு விதமான விமர்சனங்களினால் வளர்ச்சி பெற்று வருவதையே சுவிற்சலாந்தில் நடைபெற்ற சந்திப்பு எமக்கு உணர்த்தியது. தொடர்ந்தும் வைக்கப்படும் விமர்சனங்கள் அதன் வளர்ச்சிக்கு மேலும் உதவும்.

### தொன்மை இலக்கியம்

வழமைக்குமாறாக (!) "தொன்மை இலக்கியத்தில் அரசியல்" என்ற தலையங்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஜேர்மனியில் முதலாவதாக வெளிவந்த சிறு சஞ்சிகையான "எண்ணம்" சஞ்சிகையின் சித்தாந்த ஆசானாக இருந்த அழகலிங்கம் இந்த நிகழ்ச்சியை நடத்தினார். இலக்கியத்தினுள் காணப்படும் அரசியல் என்பதை விட தமிழ் இலக்கியத்தில் காணப்படும் சமத்துவக் கொள்கைகள் பற்றியே அவருடைய பேச்சு அமைந்திருந்தது. சமத்துவம் என்ற சொல்லும் கருத்தும் தமிழ் இலக்கியத்தில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு மார்க்ஸ் மூலதனத்தை எழுதுவதற்கு முன்பே வந்துவிட்டது என்பதை கம்பன், வள்ளுவன், பூங்குன்றனார் போன்றோரின் செய்யுள்களின் உதாரணத்துடன் எடுத்துக் காட்டினார். சமத்துவ இலக்கியத்தைக் கண்ட தமிழர் தம்முடன் வாழ்ந்த முஸ்லீம் மக்களை வெளியேற்றும் மனோபாவத்தை எங்கிருந்து பெற்றனர்? வள்ளுவன், கம்பன் ஆகியோர் பாடல்களில் வரும் ஆணாதிக்கத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் பேச்சாளர் விமர்சனமின்றி ஏன் ஏற்றுக் கொண்டார் என்ற கேள்விகளும் விவாதத்தின் போது எழுந்தன.

தொன்மை இலக்கியத்தில் உள்ள தவறான பார்வையைச் சரிப்படுத்துவதற்காகவே இந்த நிகழ்சியைத் தாம் நிகழ்ச்சி நிரலில் சேர்த்தாக தனது முடிவுரையில் யோகராசா குறிப்பிட்டார்.

### புலம் பெயர்ந்த சிறார்கள்

புலம் பெயர்ந்த சிறார்களின் வாழ்வியலும் தமிழ் மொழிக் கல்வியும்" என்ற விடயம் பற்றி ராஜ்குமார், புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் சந்திக்கும் கலாசார முரண்பாடுகள், அவர்களின் இரண்டுங்கெட்டான் வாழ்க்கையினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் நிலைமைகள் பற்றி ஆழ்ந்த ஆய்வுடன் கூடிய நிகழ்ச்சியை நடத்தினார். மொழிக்கல்வி பற்றிய சில குறிப்புகளை யோகராசா தந்தார். நிகழ்ச்சி நீண்டிருந்தாலும் பிரயோசனமுள்ளதாக இருந்தது. ஐரோப்பியத் தமிழ் மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள் பற்றிய இந்த நிகழ்ச்சிக்கு கேள்வி, விவாதம் ஆகியவற்றிற்கு நேரம் ஒதுக்கப்படாமை வருந்தத்தக்கது. ராஜ்குமாரின் கட்டுரையை ஏதாவது ஒரு சஞ்சிகையில் வெளியிட்டால் நல்லது.

### கவிதா நிகழ்வும் நாடகமும்

மூன்றாவது இலக்கியச்சந்திப்பில் (நொயஸ் நகரம், ஜேர்மனி) கவிதா நிகழ்வில் சந்தித்த கவிஞர் உ.சேரனை மீண்டும் கவிதா நிகழ்வில் சந்திக்க முடிந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன் பாடிய கவிதைகளுடன் சில புதிய கவிதைகளையும் சேர்த்துக் கொண்டார். சேரனின் உணர்ச்சிமயமான கவிதா நிகழ்வு சிறப்பாக இருந்தது.

"காலம்" என்ற குறியீட்டு நாடகம்... பின்னணி இசையுடன் மட்டும் இயங்கி... பார்வையாளருக்கு ஒரு கலைப்படைப்பாக அமைந்திருந்தது. சாதி அமைப்புடன் கூடிய தமிழ்ச்சமுக அமைப்பில் அகம்பாவத்துடன் வாழும் ஒருவர் இயந்திரத் தொழில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாட்டிற்குப் புலம்பெயர்ந்த பின் ஏற்படும் அனுபவங்கள்! மொழியின் உதவியின்றி... தனியான முகபாவங்கள், நடிப்பு— ஆகியவற்றை மட்டுமே கொண்டு இரண்டு காட்சிகளுடன் திறம்படச் செய்த ஒரு பரிசோதனையாக இருந்தது. புலம்பெயர்ந்த தமிழர்களின் மற்றைய மாற்றங்கள், அனுபவங்களையும் இந்த வடிவத்தில் அளிக்க இவர்கள் முயற்சிக்கலாம். நாடகத்திற்குச் சிறப்புச் சேர்த்த பாஸ்கர், ஜீவா ஆகியோரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடிப்பும். கீபோட்டிலும் தபேலா வாத்தியத்திலும் பின்னணி ஒலிகளை எழுப்பிய கலைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

### எறிக்கா பொன் குன்ரன்

**சுவிற்சலாந்துப் பெண் (ஜேர்மன்)**

எழுத்தாளர் எறிக்கா பொன் குன்ரன் ( Erika von Gunten) தான் எழுதிய "பெண்களின் கதை" என்ற புத்தகத்தை அறிமுகம் செய்து சுவிற்சர்லாந்திலுள்ள ஜேர்மன் இலக்கியம், ஜேர்மன் எழுத்தாளர்கள் ஆகியவை பற்றி உரையாற்றினர்.

உதாரணமாக தனது நூலிருந்து அவர் எடுத்துக் கொண்ட சிறுகதை, சுவிற்சலாந்திற்குப் புலம்பெயர்ந்து வாழும் ஒரு கிரேக்கப் பெண்ணின் கதை. அந்தப் பெண் தனது வாழ்நாட்களை தனது பெற்றோருக்காக சகோதரருக்காக, பின்பு அவர்களின் பிள்ளைகளுக்காக உழைப்பதிலேயே கழிக்கின்றாள். அவளின் கதையில் அவளையொத்த பெண்களின் பிரச்சனைகளும் கதையுடன் பின்னப் பட்டுள்ளன. சுவிஸ் நாட்டு இலக்கியத்தை தமிழ் ஆவலர்களுக்கு அறிமுகப்படுத்த எடுத்த நல்ல முயற்சி. ஆனால் நீளமான உரையைக் குறைத்து கலந்துரைய ாடலுக்கும் இடமளிக்கப் பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

இரண்டாவது நாள் நிகழ்சிகள், பங்களாதேஷ் பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரினின் மனித உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் ஆரம்பமாகியது. தஸ்லீமா நஸ்ரின் தமது எழுத்துக்கள் மூலம் வெளியிட்ட கருத்துக்களுக்காக முஸ்லீம் அடிப்படை வாதிகளால் மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளதுடன், பங்களாதேஷ் அரசாங்கம் அவரின் புத்தகங்களுக்கு தடையும் விதித்துள்ளது. 18வது இலக்கியச் சந்திப்பு, அவரின் எழுத்துரிமைக்காகவும் சுதந்திரத்திற் காகவும் நிறைவேற்றும் தீர்மானத்தை அவருக்கும், பத்திரிகை களுக்கும் அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### இந்திரா பார்த்தசாரதி

இந்திய தமிழ் எழுத்தாளரான இந்திரா பார்த்தசாரதியின் சிறப்புரையும் கலந்துரையாடலும் ஆசிரியருக்கும், புலம்பெயர்ந்த அவரின் வாசகர்கள், நாடக நேயர்களுக்கும் ஒரு அரிய அனுபவம். இந்திரா பார்த்தசாரதியின் பசி, மழை ஆகிய நாடகங்கள் சுவிற்சர்லாந்து நகரங்களில். இலண்டன் அவைக்காற்றுக்கழகத்தினரால் இதே வாரத்தில் மேடையேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. இந்திரா பார்த்தசாரதி, தமது நாடகங்களை அவைக்காற்றுக் கழகத்தினர் மேடையேற்றுவதைப் பார்க்கும் சந்தர்ப்பத்தையும் அவரின் நாடகங்களைப் பார்த்தவர்களும் அவரின் புத்தகங்களை வாசித்தவர்களும் அவரிடம் நேரில் விமர்சனங்களை வைப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. புலம்பெயர்ந்த தமிழர்களில் சினிமா நடிகைகளுக்கு தங்கச்சங்கிலிகள் எறிபவர்கள் மட்டுமல்ல, தரமான நூல்களையும் நாடகங்களையும ரசிப்பவர்களும் உண்டு என்பதையும் இந்த நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது.

### தேசிய விடுதலைப் போராட்டம்

"தேசியவாதம் தேசியவிடுதலைப் போராட்டம், கலை இலக்கியம்." என்ற விடயம் பற்றிச் சேரன் உரையாற்றினர்.

"ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் எமது போராட்டம், தேசத்தை அதனுடைய பௌதீக அம்சங்களில் மட்டுமே மீட்பது என்று பொருள் கொள்ள முடியாது. மாறாக, எமது மொழி, எமது நிலம், எமது கலைகள், இலக்கியம், கலாசாரம் இவையனைத்தினதும் சுதந்திரமான விகசிப்பை உருவாக்கும் ஒரு போராட்டமாகும். அந்நிய ஒடுக்கு முறை என்பது எமக்கென்றுமொரு பலமான பாரம்பரியச் செழுமை மிக்க கலாசார வாழ்வு இருக்கிறவரை வெற்றி பெறவே முடியாது."

"மேற்கு உலகின் அடிமைத் தளைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்ட ஆபிரிக்க நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் சரி, இன்று வெள்ளை நிறவெறித் தென்னாபிரிக்க அரசிற்கெதிரான ஆபிரிக்க மக்களின் போராட்டமும் சரி, லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டமும் சரி, தமது விடுதலைப் போராட்டத்தின் பகைப்புலமாக ஒரு தேசிய கலாசார விழிப்புணர்வையும், தமது பாரம்பரிய செழுமைகளிலிருந்து பெற்றுப்புதுக்கிய நவீன கலை வெளிப்பாடுகளையும் கொண்டுள்ளதைப் பார்க்கலாம்."

"மரணத்துள் வாழ்வோம்" கவிதைத்தொகுதிக்கு சேரன் எழுதிய முன்னுரையிலிருந்து இரு பந்திகளை முன்னுரையாகக் கொண்டு தனது பேச்சை ஆரம்பித்த சேரன் தேசிய வாதம், தேசிய விடுதலைப் போராட்டம் இவை இரண்டிற்குமிடையில் தான் வகுத்துக் கொண்ட வித்தியாசத்தை விளக்கினர். தேசிய விடுதலைப்போராட்டம் என்பது வெறும் எல்லைகளை மீட்கும் போராட்டமாக இருக்க முடியாது. சிந்தனைகள், கலைகள் இலக்கியங்கள், தனிமனித சுதந்திரங்கள் ஆகியவை எல்லாவற்றையும் மீட்டெடுக்கக் கூடிய ஒரு போராட்டமே முழுமையான தேசியவிடுதலைப் போராட்டமாக இருக்க முடியும். நிக்கரகுவா மக்களின் போராட்டம் அப்படியான ஒரு போராட்டமாக அமைந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். சேரனிடமிருந்து விடுதலைப் போராட்டம் ஈழத்துக் கலை, இலக்கியம் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி அதிகமாகக் கேட்க விரும்பியவர்கள் பலர் திருப்தியற்றிருந்தனர். இது சம்பந்தமான கருத்துக்கள், நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலுக்கு மெருகூட்டி யிருக்கக் கூடும்.

வாசகர் விமர்சன நிகழ்ச்சியில் கனடாவிலிருந்து வெளிவரும் 'சக்தி' விமர்சிக்கப்பட்டது. ஒரு இயக்கம் சார்பான செய்திகளை இப்பத்திரிகை அதிகமாக வெளியிடுகின்றது என்ற விமர்சனத்திற்கு சந்திப்புக்கு வருகை தந்திருந்த இளங்கோ பதிலளித்தார். சக்தி நடுநிலையான செய்திப் பத்திரிகையாகவே வெளிவருகின்றது. தனிப்பட்ட ஒரு இயக்க எதிர்ப்புப் பத்திரிகையாக வெளிவந்த தூண்டில், தாயகம் போன்ற பத்திரிகைகள் சேர முடியாத வாசகர்களை அடைவதே தமது நோக்கம் எனவும் கூறினர். வீர அஞ்சலிகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது விடுதலைப் புலிகளின் அஞ்சலிகளைத் தாம் போடுவதாகவும் மற்றைய இயக்கங்களைப் பொறுத்த மட்டில் 1987 க்குப் பின் மரணமானவர்களின் அஞ்சலிகளைத் தாம் போடுவதில்லை என்றும் அவர் கூறியது மேலும் விமர்சனங்களை உருவாக்கியது. 1986ல் சகோதரப் படுகொலைகளை ஆரம்பித்த புலிகளுக்கு அவர் எந்தவித விமர்சனமும் வைக்காதது 'சக்தி'யின் நடுநிலைமையை மேலும் கேள்விக்குட்படுத்தியது.

சிவசேகரத்தின் தமிழிற் தரிப்புக் குறிப்புக்கள், சோலைக்கிளியின் ஆணிவேர் அறுந்த நாள் என்ற கவிதைத் தொகுப்பு ஆகிய நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

மொத்தத்தில் 18 வது இலக்கியச் சந்திப்பு தரமான சந்திப்பாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர் நாடகம்

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

தமிழில்: நேசன்

ஹிகோ: கெட்ட பேர்வழிகளைத்தான் விரும்புபவள் என நான் நினைத்தேன் (ஜெசீக்கா அதற்கு பதிலளிக்கவில்லை)

ஜெசீக்கா– இந்த நையாண்டிக் கதையை விட்டு விட்டு இப்ப அலுவலைப் பார்ப்போம்.

ஹிகோ– அது சரிதான்.

ஜெசீக்கா– உன்னுடைய ஓர் சூட்கேஸை நான் இன்னும் திறந்து அடுக்கவில்லை. அதன் சாவியைத்தா?

ஹிகோ– சாவிகளை நான் ஏற்கனவே உன்னிடம் தந்திருந்தேன்.

ஜெசீக்கா– (ஒரு சூட்கேசை காட்டியபடி) அதன் சாவியை நீ தரவில்லை

ஹிகோ– அந்த சூட்கேஸை தானே திறந்து அடுக்கின்றேன்

ஜெசீக்கா– என்ர குஞ்சு, அது உன்னுடைய வேலையில்லை.

ஹிகோ– நீ எப்ப தொடங்கி குடும்பப் பெண்ணாக நடிக்கத் தொடங்கியிருக்கிறாய்?

ஜெசிக்கா: நீ கூட ஒரு புரட்சிக்காரன் அல்லது போராளி போலத் தான் எப்போதும் நடித்து வருகிறாயே?

ஹிகோ: புரட்சிக்காரர்களின் வாழ்வில் குடும்பப் பெண்களாக இருக்க விரும்பும் மனைவிகளுக்கு இடமில்லை. அவர்களுக்கு அப்படியான மனைவிகள் தேவையும் இல்லை அம்மாதிரியான மனைவிகளை அவர்கள் மண்டையில் போட்டுவிடுவார்கள்.

ஜெசீக்கா– ஆமாம் அப்புரட்சிக்காரர்களுக்கு ஒல்கா மாதிரி கறுப்புத் தலைமயிருடைய பெண் ஓநாய்கள் தான் தேவை.

ஹிகோ– உனக்கு ஒல்கா மீது பொறாமையா?

ஜெசீக்கா– நீ என்னை ஓர் பொறாமைக்காரி மாதிரிக் காட்டி என்னுடன் விளையாட விரும்புகின்றாய் என நான் நினைக்கின்றேன். அந்த மாதிரியான விளையாட்டைத்தான் நீ விரும்புகின்றாய் என்றால் அதை நானும் விளையாட தயாராக இருக்கின்றேன்.

ஜெசீக்கா– நானும் தயார்தான்.

ஜெசீக்கா– நல்லது இப்ப அந்த சூட்கேஸின் சாவியைத்தா?

ஹிகோ– அதை ஒருபோதும் தரமாட்டேன்

ஜெசீக்கா– அப்ப அந்த சூட்கேஸினுள் ஏதோ இருக்க வேண்டும் .அது என்ன என்று சொல்லு?

ஹிகோ– வெட்கத்திற்குரிய ஓர் இரகசியம் அதனுள் இருக்கின்றது

ஜெசீக்கா– என்னதான் அந்த ரகசியம்?

ஹிகோ– நான் எனது தகப்பனுடைய மகன் இல்லை என்பது தான் அந்த ரகசியம்

ஜெசீக்கா– என்ர குஞ்சுக்கு அப்படியான ஓர் நம்பிக்கை. உனக்கு சந்தோஷத்தை தரும் என்பதை நான் மறுக்கவில்லை ஆனாலும், உன்னுடைய தோற்றம் அடிச்சால் போல் உன்னுடைய அப்பாபோலத்தான்.

ஹிகோ– அது உண்மையல்ல ஜெசீக்கா! நான் எனது அப்பா

> புரட்சிக்காரர்களின் வாழ்வில் குடும்பப் பெண்களாக இருக்க விரும்பும் மனைவிகளுக்கு இடமில்லை. அவர்களுக்கு அப்படியான மனைவிகள் தேவையும் இல்லை அம்மாதிரியான மனைவிகளை அவர்கள் மண்டையில் போட்டுவிடுவார்கள்.

போலத்தான் இருக்கின்றேன் என நீ உண்மையில் நம்புகின்றாயா!

ஜெசீக்கா– நீ என்னுடன் இப்போது உண்மையில் விளையாடுகின்றாய்

ஹிகோ– ஆம் விளையாடுகின்றேன்.

ஜெசீக்கா– விளையாட்டை விட்டு சூட்கேஸைத்திற

ஹிகோ– சத்தியமாக அதை நான் திறக்கமாட்டேன்.

ஜெசீக்கா– அதுக்குள் அந்த ஒல்கா பெண் ஓநாயின் காதல் கடிதங்கள், படங்கள் இருக்கின்றனவோ என்று எனக்குச் சந்தேகம் : சூட்கேஸை திற

ஹிகோ– இல்லை

ஜெசீக்கா– இல்லை. நீ திறக்கத்தான் வேண்டும்.

ஹிகோ– முடியாது

ஜெசீக்கா– அந்த சூட்கேஸினுள் என்ன இருக்கின்றது என எனக்குத் தெரியும். அவை இதுதான் (தனது மெத்தையின் கீழ் ஒளித்து வைத்திருந்த சில புகைப்படங்களை ஜெசீக்கா வெளியே எடுத்து தனது முதுகின் பின்னால் அதை மறைக்கின்றாள்)

ஹிகோ– ஜெசீகா!

ஜெசீக்கா– (வெற்றிப் புன்னகையுடன்) நான் உனது பிரவுன் சூட்கேஸினுடைய சாவியை கண்டெடுத்தேன் இப்ப உன்னுடைய கள்ள பெஞ்சாதியை, உனது கனவு ராணியை எனக்கு தெரியும். (மீண்டும் நையாண்டியுடன்) அப்புகைப் படங்கள் என்னுடையதோ அல்லது அந்த பெண் ஓநாயான ஒல்காவினுடையதோ இல்லை. அவை உன்னுடையதுதான் உன்னுடைய 12 பழைய புகைப்படங்களை அந்த சூட்கேஸினுள் கண்டு பிடித்தேன்.

ஹிகோ– அந்த படங்களை என்னிடம் தா.

ஜெசீக்கா– நீ 3, 4, 6, 8, 10 வயதுகளில் எடுத்த படங்கள்

ஹிகோ– நான் இப்ப விளையாடவில்லை அந்த படங்களைத் தா (ஹிகோ அவளை துரத்தி பிடித்து கட்டிலில் தள்ளுகின்றான்

ஜெசீக்கா– என்னை விடு (அவன் மீண்டும் அவளை கட்டிலில் அமுத்துகின்றான்) என்னை விடு நீ இப்போது என்னைக் கொல்லப் போகின்றாய்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஹிகோ– படங்களைத் தா (மீண்டும் அவளை அழுத்துகின்ருன்)
ஜெசீக்கா– நீ என்னை மேலும் அழுத்திஞல் துவக்கு வெடிக்கும் (ஹிகோ அதிர்ச்சியுடன் அவளில் இருந்து வெடுக்கென எழுதுகின்ருன். ஜெசீக்கா கையால் பின்புறத்தில் மறைந்திருந்த ரிவோல்வரை அவனுக்குக்காட்டி) இதுவும் அந்த சூட்கேஸினுள் இருந்தது.
ஹிகோ– (கலவரத்துடன்) அதை என்னிடம் தா (அவளிடம் இருந்த ரிவோல்வரையும், புகைப் படங்களையும் அவசர அவசரமாக பறித்து தனது சூட்கேஸினுள் வைத்து மூடுகின்ருன்)
ஜெசீக்கா– இங்கு அந்த துவக்குக்கு என்ன வேலே?
ஹிகோ– அது உண்மையல்ல. அந்த ரிவோல்வரையோ, அல்லது அந்த சூட்கேஸையே நீ ஒருபோதும் இங்கு வருமுன் வைத்திருந்ததில்லே எதற்காக அந்த துவக்கை வைத்திருக்கின்ருய்?
ஹிகோ– உண்மையில் அது உனக்குத் தெரியத்தான் வேண்டுமா?
ஜெசீக்கா– ஆம் எனக்கு தெரியதான் வேண்டும். இது சீரியசான விஷயம், என்னிடம் இருந்து எதையும் ஒளிக்க உனக்கு உரிமை இல்லே.
ஹிகோ– சரி ஆனுல் நீ யாரிடமும் கதைக்கக் கூடாது.
ஜெசீக்கா– நான் எனது ஆத்துமாவுக்குகூடச் சொல்ல மாட்டேன்.
ஹிகோ– அந்த துவக்கை நான் ஹோடரரை கொல்வதற்காக கொண்டு வந்தேன்.
ஜெசீக்கா– என்னுடன் மீண்டும் நீ விளேயாடுகின்ருய் இது விளேயாட்டல்ல விஷயத்தைச் சொல்லு.
ஹிகோ– (சிரித்தபடி) நான் விளேயாடுகின்றேனு அல்லது சீரியஸான மனுஷனுக இருக்க முயல்கின்றேனு? உனக்கொரு மர்மக்கதை சொல்ல வேண்டும் ஜெசீக்கா. ஆம் நீ விரைவில் ஓர் கொலேகாரனுடைய மனேவியாகப் போகின்ருய்.
ஜெசீக்கா– என்ர குஞ்சு உனக்கு கொலே செய்ய பலமில்லே (நகைத்தபடி) உனக்காக அவனே நானே கொல்லவா? நான் முதலில் என்னே அவனுக்குள் கொடுக்கின்றேன். பின்பு..

## என்ன காரணத்திற்காக நீ ஹோடரரைக் கொல்ல வேண்டும்? குறைந்த பட்சம் அந்த மனுசனே உனக்கு தெரிந்திருக்கவும் நியாயம் இல்லே. உனக்கு தெரியாத ஓர் மனுசனே நீ ஏன் மண்டையில் போட முனேந்திருக்கின்ருய்?

ஹிகோ: நன்றி உன்னுல் அக்காரியத்தைச் செய்ய முடியாது நானே எனது அலுவலேப் பார்த்துக் கொள்கின்றேன்.
ஜெசீக்கா– கொஞ்சம் பொறு என்ன காரணத்திற்காக நீ ஹோடரரைக் கொல்ல வேண்டும்? குறைந்த பட்சம் அந்த மனுசனே உனக்கு தெரிந்திருக்கவும் நியாயம் இல்லே. உனக்கு தெரியாத ஓர் மனுசனே நீ ஏன் மண்டையில் போட முனேந்திருக்கின்ருய்?
ஹிகோ– ஹும் இப்பவாவது என் மனுஷி என்னே சீரியசாக எடுக்கிருள். இப்படியான ஓர் கொலேயை நான் செய்தால் நீ என்னே சீரியசாக எடுப்பாய் தானே?
ஜெசீக்கா– நானு? ஆம் நான் உன்னில் மயங்கிப்போவேன். உன்னே ஒளித்து வைத்து உணவூட்டுவேன் பொலிசிடமிருந்து நீ ஓடி நளியும் போது உனக்கு உதவுவேன். எமது அயலவர் எம்மை பொலிசாரிடம் காட்டி கொடுத்து அவர்கள் உன்னே பிடிக்கும் போது உன்னே கட்டியணேத்து "நான் உன்னேக் காதலிக்கின்றேன்" என்று சொல்லி அழுவேன்.
ஹிகோ– அதை இப்பவே எனக்குச் சொல்லு
ஜெசீக்கா– எதை?
ஹிகோ– நான் உன்னேக் காதலிக்கின்றேன் என்பதைத்தான்
ஜெசீக்கா– நான் உன்னே காதலிக்கின்றேன்.
ஹிகோ– உண்மையாகவே சொல்லு
ஜெசீக்கா– நான் உன்னே காதலிக்கின்றேன்
ஹிகோ– நீ உண்மையில் இதைச் சொல்லவில்லே.
ஜெசீக்கா– உன்ர தலேயில் என்ன பிடித்திருக்கின்றது? நீ என்ன விளேயாடுகின்ருயா?
ஹிகோ– இல்லே நான் விளேயாடவில்லே
ஜெசீக்கா–அப்ப நீ ஏன் அப்படி என்னிடம் கேட்டாய்? அக்கேள்வி நீ கேட்கும் ஓர் கேள்வி மாதிரித் தெரியவில்லே.
ஹிகோ– அது ஏன் என எனக்குத் தெரியவில்லே நீ என்னே காதலிக்கின்ருய் என நான் எப்போதும் நினேக்க விரும்புகின்றேன். அப்படி நினேக்க எனக்கு உரிமையும் உண்டு சொல்லு நீ உண்மையில்லையே என்னே காதலிக்கின்ருய் எனச் சொல்லு.
ஜெசீக்கா– நான் உன்னே காதலிக்கின்றேன், காதலிக்கின்றேன் இல்லே நான் உன்னே காதலிக்கின்றேன் நாசமாக போக! இப்ப நீ அதை எனக்குச் சொல்லு.
ஹிகோ– நான் உன்னேக் காதலிக்கின்றேன் உன்னேவிட நான் அந்த வசனத்தை அழகாகச் சொன்னேன் என நான் நினேக்கின்றேன்.
ஹிகோ– ஜெசீக்கா நான் சொன்னதை நீ நம்பவில்லேயா?
ஜெசீக்கா– நீ என்னே காதலிப்பதையா?
ஹிகோ– இல்லே நான் ஹோடரரை மண்டையில் போடப் போவதைப்பற்றி...
ஜெசீக்கா– ஆம் நம்புகிறேன்.
ஹிகோ– கொஞ்சம் சீரியசாக விஷயத்தை எடு ஜெசீக்கா.
ஜெசீக்கா– நான் ஏன் விஷயத்தை ஒரு சீரியசாக எடுக்க வேண்டும்
ஹிகோ– ஏனென்ருல் வாழ்க்கையில் நாங்கள் எப்போதும் விளேயாடிக்கொண்டிருக்க முடியாது.
ஜெசீக்கா– எனக்கு சீரியசாக இருக்க முடியாது. ஆனுல் என்னுல் முடிந்தவற்றைச் உனக்காகச் செய்கின்றேன் நான் சீரியஸ்ஸாக விளேயாட முனேகின்றேன்
ஹிகோ– என்னுடைய கண்களேப் பார் (அவன் சிரிக்கின்ருன்) சிரிக்காதே நான் சொல்வதைக் கேள் ஹோடரரை மண்டையில் போடுவது பற்றிய விஷயம் உண்மையானது. அதற்காகத்தான் எனது கட்சித்தோழர்கள் என்னே இங்கு அனுப்பி வைத்து இருக்கின்ருர்கள்
தொடரும்

## பென் கூரியன் குட்டிக்கதைகள்



# சாமிநாதனும் ஒரு வீரசபதமும்

கனடாவில் எல்லாரும் வெல்பெயர் எடுப்பதற்காகத் தான் ஆங்கிலம் படிப்பார்கள். ஆனால் சாமிநாதன் மட்டும் இலட்சியத்துக்காக ஆங்கிலம் படித்தான். ஆங்கிலம் வாயில புகுந்ததோ என்னவோ, இலட்சியம் மட்டும் மனதில் கொழுந்து விட்டு எரிந்தது. அப்படி என்ன இலட்சியம்? தான் ஆங்கிலம் பேச வேண்டும் என்பது. உது நல்ல விசயம், பிறகென்னப்பா அதைப் பற்றி கதை எழுதுறாய்? என்று 'கூரியப்ப்ரியர்கள்' கேட்கக் கூடும்.

ஆங்கிலம் படித்து கனடாவில் ஆங்கிலம் பேச வேண்டும் என்பதல்ல, சிறி லங்காவில் பேசுவது தான் சாமிநாதன் இலட்சியம். விசயம் இது தான். சாமிநாதனின் மாமியார் கொழும்பில் வேலை செய்து, வீடு வாங்கி வசித்து வருபவர். அவ லீவு நாட்களில் வரும் போது யாழ்ப்பாணத்தில் ஆங்கிலத்தில் தான் பேசுவா. சாமிநாதனின் அப்பாவோ தமிழ் பண்டிதர். ஆங்கிலம் சுட்டுப் போட்டாலும் வராது. வருகின்ற மாமி, சாமிநாதனின் தந்தைக்கு முன்னால் வேறு யாருடனோ ஆங்கிலத்தில் பேசியதில் தான் பிரச்சனையே ஆரம்பம். தந்தையும் மகனை வெளிநாடு அனுப்பும் போது 'மகனே, நீ காசு அனுப்பாட்டியும் பறவாயில்லை, நீ இங்கிலிசு படிச்சு வந்து உவங்களுக்கு பேசிக்காட்ட வேணும்' என்று சத்தியம் வாங்கித் தான் அனுப்பினார்.

வெளிநாடு வந்த சாமிநாதன் ஆங்கிலம் தவிர்ந்த சகல ஐரோப்பிய பாசைகளிலும் 'யா, நைன், பிற்ற, வி, நோ, சில்வூ பிளே' போடக்கற்றுக் கொண்டான். இந்த பாண்டித்தியம் கொழும்பில் செல்லாது. இங்கிலிஷ் படிச்சே ஆக வேண்டும். லண்டனுக்கு போவதைவிட கனடா விசேசம் என்று கனடா வந்த சாமிநாதன் ஆங்கிலம் கற்கப் போவதற்குள் வேலை கிடைத்து விட்டது. அதுவும் வெல்பெயரோடு தமிழ் கடை ஒன்றில் இறைச்சி வெட்டும் வேலை. மொத்தத்தில் 'யேஸ், நோ, பிளீஸ்' படித்துக் கொண்டான்.

நான் கொழும்புக்குப் போய் உவைக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறன் என்று கறுவிக் கொண்டான் சாமிநாதன். நான் போனால் அவையின்ர முத்தம் கூட மிதிக்க மாட்டன், என்ரை கலியாண வீட்டுக்கு இன்விஸ்டேஸன் (இது கோட்டை ஸ்டேஸன் மாதிரி ஒன்றோ என்னவோ?) குடுக்கப்போவன். அப்ப கதைக்கிறன் இங்கிலிஸ்? என்றான் சாமிநாதன். கூட இருந்த றூம் மேட்டுகளும் 'அந்த மனிசி இங்கிலிசில கிருச்சுவேட், இவன் அதுக்கு இங்கிலிஸ் படிப்பிக்கப் போறான். இவன் கதைக்கிற இங்கிலிஸ் மனிசிக்கு விளங்கிச்சு எண்டால் எக்கணம் என்ன ஆகப் போகுதோ?' என்று நெஞ்சிடியில் இருந்தனர்.

கொழும்பு சென்ற சாமிநாதனும் 'எங்கே அவள்? என்றே மனம் தேடுதே ஆவலாய் ஓடிவா' என்று ஆங்கிலம் பேசி வீரசபதம முடிக்க காத்திருந்தான்.

அப்போது தான் அந்த அதிர்ச்சி தரும் செய்தி காத்திருந்தது. சாமிநாதனுக்கு பேசி கிளாலிக்குள்ளால தப்பி வந்த மணிக்கொடி அந்த மாமி வீட்டில் தான் தங்கியிருக்கிறாள். வருங்கால மனைவி முன் ஆங்கிலம் பேசி விலாசம் காட்டலாம் என்றால், இதுவா சந்தர்ப்பம்? சாமிநாதன் 'மூவ்' ஒன்றை எடுக்க திட்டமிட்டான். சடாரென்று புறக்கோட்டை மார்க்கட்டுக்குப் போய், ஒரு சட்டை ஒன்றை வாங்கிக் கொண்டு மாமியின் வீடு நோக்கி சென்ற சாமிநாதன் 'மாமி, திஸ் ஐ பிறிங் கனடா' என்று ஏதோ குளறிக் கொண்டு மாமியின் கையில சட்டையைத் திணித்து விட்டு நிற்க, சாமிநாதனை நோக்கி நாணத்துடன் தேநீர் கொண்டு வந்த மணிக்கொடியைப் பார்த்து.. ஐ டோன்ற் லைக் திஸ், பெம்பிளையள் வெக்கப்படுறது எனக்குப் பிடிக்காது என்று சொல்லிக் கொண்டான்.

★ ★ ★

திருமணம் முடித்து மணிக்கொடியை மாமியின் கரங்களில் ஒப்படைத்த சாமிநாதன் 'மாமி, என் கண்ணையே உங்களிடம் ஒப்படைக்கிறேன், நான் ஸ்பொன்சர் செய்யுமட்டும் அதில் ஆனந்தத்தை தான் நான் பாக்க வேணும்' என்று ஆங்கிலத்தில் அல்ல, தமிழில் சொல்லி விட்டு கனடா வந்து, 'ஷீ இஸ் எ நைஸ் லேடி' என்று மாமியின் புகழ் பாடத் தொடங்கினான்.

'ஐயோ, இவன் இங்கிலிஸ் பேசுறதுக்கு இருந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தையும் நழுவ விட்டுட்டானே' என்று நண்பர்கள் அங்கலாய்த்துக் கொண்டனர்.

★ ★ ★

பிந்திய செய்திகளின் படி.. மணிக்கொடியைக் கொண்டே மாமி சமையல், தோய்த்தல், துப்புரவாக்கல் போன்ற காரியங்கள் செய்வித்ததால் மணிக்கொடி கோபித்துக் கொண்டு வேறிடத்தில் நிற்பதாகவும் சாமிநாதன் மீண்டும் ஒரு தடவை தனது வீரசபதத்தை 'றினியூ' பண்ணி விட்டு அந்த மனிசியைத் திட்டித் திரிவதாகவும் தகவல்.

---

## கலாசார...

செக்கில் பின்னாலை கையெழுத்து ஏதும் போடவா?" என்றாள்.

கலாச்சாரக் குழப்பத்தில் பெற்ற தாயை தாய்மொழியை மறக்க விரும்பும் இவர்களை தன்னால மாற்றமுடியாது என்பதைப் புரிந்து கொண்டாள் செல்லம்மா. பெற்ற குற்றத்துக்காக இவர்களின் பித்தலாட்டங்களுக்கு (அவள் கருத்தில்) துணைபோக அவள் மனம் ஒப்பவில்லை.

"சீ ...... நாய்ங்களே , தாய்க்கும் தாரத்துக்கும் வித்தியாசம் தெரியாத உங்களைப் போன்ற தறுதலைகளுடன் வாழுறதை விட தாய்க்காக தம்முயிரையும் பணயம் வைக்கும் அவங்களுக்கு ஒரு கவளம் சோறாக்கிப் போட்டாலும் மனதுக்கு நிம்மதி. அவங்கள் நல்லதைச் செய்யிறாங்களோ கெட்டதைச் செய்யிறாங்களோ.... இதைவிட அதுமேல் எண்டு எனக்குப்படுது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# கூட்டிப் பெருக்கும் கம்பியூட்டர் நிபுணன் அருணாசலம்

எனது மாடிக் கட்டிடத்தில் வசிக்கும் அருணாசலத்துக்கு பெரிய கம்பியூட்டர் கம்பனியொன்றில் பெரிய வேலை கிடைத்துவிட்டதாம். அருணாசலம் சிலோனில் பட்டம் பெற்றவன். இதனால் தானோ என்னவோ மாடிக் கட்டிடத்தில் வசிக்கும் ஏனைய தமிழர்களோடு எதையுமே பேசுவதில்லை.. அநேகமான இன்ரலெக்ஸ்ஸுவல்கள் இப்படித்தான் எண்டதை நீங்கள் நல்லாவே அறிவியள்... பட்டம் எண்ட பேரிலை ஒரு கடுதாசி கிடைச்சாக் காணும்... பிறகு அவை தீர்க்கதரிசியள் ஆகிவிடுவினம்.. ஆரையும் நம்புங்கோ... உந்த இன்ரலெக்ஸ் ஸுவல்களை மட்டும் நம்பிப் போடாதையுங்கோ.. கலாமோகன் அடிக்கடி மொழிபெயர்க்கிற ஜாக்பிறவேர் எண்ட பிரெஞ்சுக் கவிஞர். "புத்திஜீவிகளை தீக்குச்சிகளுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது" எண்டு அருமையா எழுதியிருக்கிறார்.

அருணாசலம் பிரான்ஸுக்கு வந்த புதிசிலை, தனது பட்டத்தை வைச்சு, கதிரையிலை இருந்து செய்யிற வேலை தனக்குக் கிடைக்காட்டி சிலோனுக்கு திரும்பிப் போறதாச் சபதம் எடுத்தவன் .... கூட்டுதல், கழுவுதல் துடைத்தல் போன்ற 'இன்ரலெக்ஸ்ஸுவல்' வேலைகளைச் செய்யும் இன்ரலெக்ஸ்ஸுவல்களை நக்கலடித்தவன். அறுவானுக்கு, அதுவும் கம்பியூட்டர் கம்பனியில வேலை கிடைச்சிட்டுது. இன்னும் நல்லாத் திட்டித் துலைக்கப் போறான் எண்டு நினைச்சுக்கொண்டு.. ஒரு பிள்ளைக்கு பீரோக் கிளினிங் செய்யிற வேலை எடுத்துக் குடுக்கலாம் எண்ட நோக்கத்தோடை, இவன் வேலை செய்யிற இடத்தின்ரை அட்ரஸை இவனுக்குத் தெரியாமல் எப்படியோ கண்டுபிடிச்சு அங்கை போனன்....

அது ஒரு பின்னேரம்... கதவு பூட்டப்பட்டுக் கிடந்தது... கண்ணாடிக் கதவுதான்.. உள்ளே எல்லாம் தெரிஞ்சுது.... அருணாசலம் ஒரு ஜெண்டில்மென் கதிரையில் ரெலிபோனும் கையுமாக இருந்தான். கம்பியூட்டர் கம்பினியின் டிறெக்டர் இவன்தான் போலும் என நினைத்துக் கொண்டு, கதவைத் தட்டினேன்... அவர் என்னை அலட்சியமாகப் பார்த்தார். நான் மீண்டும் தட்டினேன். சினந்தபடி என் முன் வந்து "உமக்கு என்னவேணும்" என்றார். "அண்ணை, உங்கடை கொம்பனியிலை, கிளினிங் வேலை ஏதும் இருக்கோ?" எனக் கேட்டான். "ஐஸே, நான் இங்கை டிறெக்டர், கிளினிங் விஷயங்களை என்னிட்டைக் கதைக்கக்கூடாது.. நான் புதிசா ஒரு கம்பியூட்டர் கண்டுபிடிச்சுக் கொண்டிருக்கிறன்.. என்ரை Moodஐக் கெடுக்காமல் போம்..." என்று என்னை அவமதித்து விட்டார். ரெலிபோனில், இவர் என்ன கம்பியூட்டர் ஆராய்ச்சி செய்யிறார் என்புதை விளங்காமல் ......றூம் திரும்பி நான்.. தொடர்ந்த சில தினங்கள் அவர் ஆராய்ச்சி செய்யும் கம்பனிப் பக்கம் சென்றேன். எப்போதும், அவர் ரெலிபோனில் ஆராய்ச்சி செய்தபடி.. பின்னர், நான் சென்ற தினங்களில் அவரைக் காணவேயில்லை. - விஷயத்தை மாடிக்கட்டிடத்தில் வாழும் நான் விரும்பும் தமிழ்த் தொழிலாளிகளிடமும் சொல்லி விசாரித்தேன். அவர்கள் சொன்ன பதில் இது.....'

"கம்பியூட்டர்கள் விக்கிற கம்பனி ஒண்டிலை அறுவானுக்கு மூண்டு மணித்தியால பீரோக் கிளினிங் (கூட்டித் துடைக்கும் வேலை) கிடைச்சது. அவன் அங்கை போய் ஒவ்வொரு நாளும் சிலோனுக்கு ரெண்டு மணித்தியாலம் அடிச்சுக் கதைத்துக் கொண்டிருந்ததாலை— மூண்டு மணித்தியாலமும் கிழிஞ்சுது—

வாசக, வாசகிப் பெருமக்களே! அருணாசலம் செய்த ஆராய்ச்சி எதுவென்பது உங்களுக்கு இப்போது விளங்குகின்றதல்லவா.......

---

செல்லம்மா புருஷோத்தமனின் முகத்தில் உமிழ்ந்து துப்பாத குறை. அவ்வளவு கோபம் அவளுக்கு.

இனியென்ன. தாயகத்துக்கு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தாள். இவர்கள் தடுத்தால் பொலிசுக்கும் போகத் தயங்கப் போவதும் இல்லை அவள்.

"தம்பி மகேந்திரன, பெண்ணுக்கு சுதந்திரம் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு ஆணின் சுதந்திரத்தை இழந்திட்டீங்களே .... இந்தப் பயந்த போலி வாழ்வு தேவையா ? சமூகத்துக்குப் பயந்து நடிப்பதனால் கலாச்சாரத்தை காப்பாற்றி விடமுடியுமா?"

என்று சொன்னபோது அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

புருஷ், சுகந்தி இருவர் முகத்திலும் ஈயாடவில்லை. இவர்கள் உணர்ந்து விட்டார்களா ?

நிச்சயமாக இல்லை. இவர்களுக்கு தமிழ்ப்பண்பாட்டின் தொன்மையைப் பற்றித் தெரியாதா? தெரியும். இவர்களுக்கு தமிழ்க் கலைகளைப் பற்றித் தெரியாதா? தெரியும். இவர்களுக்கு தமிழ் மொழி பேசத் தெரியாதா ? தெரியும்.

ஆனால் தமிழ் பண்பாடு கொண்டுள்ள அதிநாகரீகக் கட்டுக்கோப்பு – அதன் தர்க்கரீதியான சமூகப்பிணைப்பு– அது நிலை நிறுத்தப்பட வேண்டிய அவசியம்– மேலைப்பத்தேசத்தை விட அதில் உள்ள மேன்மை – இவ்வாறான எதுவும் அவர்களுக்குத் தெரியாது . அதைச் சொல்லித்தர பண்பாட்டுக்காவலர்கள் மறந்தனர். கலாச்சாரக் கழகங்கள் "காசு வராத விஷயம்" என்று கைவிட்டன.

கலாச்சாரம் என்பது ஒரு காட்சிப்பொருள் என்ற நினைப்பு தவறானது. அது ஊறியிருக்க வேண்டிய ஒட்டியிருக்க வேண்டிய பண்புப் பொருள். பண்பாட்டை அறிந்திருப்பது மட்டும்தான் பண்பாடு அல்ல. அந்தப் பண்பாட்டுடன் வாழ்வதும் வாழவைப்பதுவும்தான் பண்பாட்டின் கருவூலங்கள் என்ற உண்மை மௌனமாக உறங்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மயக்கங்கள்

## (பலதும் பத்துமாய் (பலதின்) ஒரு வியாசம்)

பல நேரங்களில் ஒன்றை ஏற்பதில் மனத்தில் அதிருப்தி இருந்திடலாம்: இப்படி இருந்திருக்கலாமே என ஆதங்கம் ஏற்பட்டிடலாம், முடிவுக்கு முரணாய் ஆதாரங்கள் சாட்சிக்கு வந்திடலாம்.

இப்படி எனக்கு அகப்பட்ட சில தொகுக்கப்படுகின்றன.

அதேசமயம் இது சம்பந்தமான உங்கள் வியாக்கினங்கள் ஆதார பூர்வமாய் இருந்தால் அவற்றை நீங்கள் தெரிவித்திடவும் தயங்க வேண்டாம். வரவேற்புண்டு . மறக்க வேண்டாம்.

பரிபூரண சரணாகதி தத்துவத்தினைக் கூறும் போது திரௌபதியின் துகிலுரியப்பட்ட கதை கூறப்படுவது யாரும் அறிந்ததே.

திரௌபதியின் மேலாடையை துச்சாதனன் களைய கண்ணன் கிருபையால் அது வளர்ந்ததாம்.

கண்ணன் திரௌபதி மானம் காத்தான் என்றால் திரௌபதி உட்பட சகலரும் இவ் அற்புதங் கண்டு சொக்கிப் போயிருக்க வேண்டும். திரௌபதிக்கு மானபங்கப்படுத்தப் படாததில் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கும். சபதம் இட்டுக்கொள்ளத் தக்க ஆத்திரமல்ல.

ஆனால் எங்களுக்குச் சொல்லப்பட்ட கதைகள் திரௌபதியின் சபதத்தையே கூர்மைப்படுத்தின. ஆதி நாட்களில் மகாபாரதம் இப்போது உள்ளது போல் பல்லாயிர ஸ்லோகங்கள் கொண்டு இருக்கவில்லையாம். ... இது " ஜெயா" எனும் பெயரில் சொற்ப ஸ்லோகங்கள் கொண்ட சிறிய நூல் தானாம்.

இன்றுள்ளவற்றில் சிலவே அசல் நூல்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இவற்றில் சொல்லப்பட்ட சேதிகள். திரௌபதி துச்சாதனம் செய்யப்படுகையில் மாதவிலக்காகி ஒற்றை ஆடையில் இருந்தாள். பாண்டவர் கௌரவர் சூதாட்டத்தின் போது கண்ணன் தனது துவாரகா மீது போர் தொடுத்திருந்த சால்வனின் படை மீது போரில் ஈடுபட்டிருந்தார்.

போர்க் களமிருந்து மீண்ட கண்ணனிடமே திரௌபதி நடந்ததைக் கூறி வேதனைப்படுகிறாள். கண்ணனும் மனம் வருந்துகின்றான்.

சூதாட்டம் பற்றிய சேதி கூட அறிந்திருக்கவில்லையே என ஆதங்கப்படுகிறான். தெரிந்திருப்பின் அதைத் தடுத்திருப்பேன் என்றும் அல்லது காய்களின் பித்தலாட்டத்தை யாவது அம்பலப்படுத்தியிருப்பேன் என்றும் கூறுகிறான்.

சம்பவம் இப்படி இருக்க இழுக்க இழுக்க சேலை வந்து கொண்டே இருந்தது எப்படி?

★ ★ ★

கேட்கப்பட்ட ஆயிரம் பேரின்பப் பாடல்களில் ஒன்றே ஒன்று பாடாதால் அம்பிகாபதியின் சிரம் அறுக்கப்பட்டது. 999 பாடியவனால் இன்னொன்று பாட முடியாமலா போய்விடும்? இக் கேள்வி நீதி தேவனுக்கான பிரதி நிதிகள் எனச் சொல்லிக் கொண்ட அரச சபைக்கு அவசியமாய்ப் படவில்லை.

காப்புப் பாடல், இது வேறு கவிப் பொருளில் பாடுவனவற்றுக்கு கவிப் பொருளுடன் சேர்மதி இல்லாமல் இருக்கலாம். ஆனால் பேரின்பம் என்பதுள் சேர்த்துக் கொள்ளாதது அர்த்தம் இழந்தது.

ஒவ்வொரு பாடல் முடியவும் எண்ணிக்கையை அறிவிக்க மன்னவன் அவையில் எவரும் இல்லாமல் போனது அதைவிட அர்த்தமிழந்தது.

பாடல்கள் ஆயிரம் பாட முடியுமா என்பதா பாடிக்கொண்டே மனதில் ஆயிரம் வரை எண்ண முடியுமா என்பதா அம்பிகாவதிக்கான பரீட்சை?

அம்பிகாவதி தலை(விதி) திட்டமிட்ட சதி.

ஒரு பெண்மேல் பழியை சுமத்திக் கொண்டுவிட்ட ஒரு அர்த்தமற்ற வரலாறு.

★ ★ ★

கற்பு என இன்றுவரை கதைத்துக் கொள்கிறார்களே அதன் அர்த்தந்தான் என்ன?

கடவுள் போல் இதுவும் வரையறைக்கே விலத்தி நிற்கின்றது.

கண்ணகியின் கற்பு மதுரையை நீறாக்கிய பின் தான் தோற்றுவிக்கப்பட்டதா?

சீதையின் கற்பு நெருப்புக்கு தப்பியதால் தான் நிரூபிக்கப்பட்டதா?

கோவலனுக்கான அநீதியான தண்டனையின் பின் மூண்ட கலகத்தால் மதுரை எரிந்திருக்குமா? சீதை தீக்குளித்து உயிர்தப்பியிருப்பாளா? எது எப்படி எனினும் இவற்றில் இருந்து கற்பை வரையறை செய்ய பொதுவாய் ஏதும் தடயம் இல்லை.

ஒவ்வொரு காலத்திலும் கற்புக்கரசி ஒருவர் வாழ்ந்ததாக கதை செய்து வைத்துள்ளோம்.

அப்படியானால் இவர் தவிர்ந்த ஏனைய அக்காலப் பெண்டிர் எல்லாம் கற்பில் பிசகியவர்கள் என்கிறதா எம் வரலாறு?

கணவனைக் கூடையில் சுமந்து சென்றவள் கற்புக்கரசி எனப்பட்டாள். கணவனை உயிர் மீட்டவளும் கற்புக்கரசி எனப்பட்டாள். தேவாதி தேவர்களை குழந்தைகளாய் உரு மாற்றியவள் கற்புக்கரசி எனப்பட்டாள், வள்ளுவன் வாக்கின்படி மழையை வாக்கினால் பொழியச் செய்பவள் கற்புக்கரசி ஆகிறாள்.

கற்பை வெளிப்படுத்த கணவனுக்காக அதீத செயல் ஏதும் செய்ய வேண்டி இருப்பது புரிகிறது.

இக்கால கற்பு பற்றிக் கேட்டால், கலியுகம். இப்போ எங்கே இவை எல்லாம் என்பது பதில்.

ஆனால் காலம் எதுவானாலும் பெண்கள் பெண்களாய்த் தான்.

சரி கலியுகம் தான் காரணமென்றால், பிற காலங்களில் சகலரும் கற்புடையவரா? ஒரு காலத்தில் சகலரும் கற்புள்ளவரெனில் கால காலம் ஒவ்வொருத்தி பற்றியே மெச்ச வேண்டிய இலக்கிய அவசரம் இருந்திருக்காது. இக் கதைகள் கற்பனைதான் எனினும் கூட கற்பு பற்றி அக்கறைப்படும் தேவை சகலரும் கற்புடைய காலத்தில் இருந்திருக்காது.

அருணன்

☞



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'நோ'காமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்?

## மாஸ்டர் ரவி

நம்மில் பலர் தமிழில் பேசும் போது 'சரியா, சரியா' என்று அடிக்கடி கேட்டுக் கொள்வர். குறிப்பாக ஆசிரியர்கள் அல்லது ஒன்றை விளங்கப்படுத்த முயல்பவர்கள் அடிக்கடி 'சரி'வர். ஆனுல் ஆங்கிலம் பேசும் போது அடிக்கடி 'நோ' என்ற சொல் பாவிப்பதைக் கண்டிருப்பீர்கள். வசனத்திற்கு வசனம் இதைச் சொல்லும் போது நீங்கள் தலையாட்டினுல் தான் உங்களுக்கு இது புரிந்து விட்டது என்பது அவர்களுக்குப் புரியும்.

இது 'இல்லையா' (Isn't it?) என்ற அர்த்தத்தில் வருகின்ற No வா அல்லது தெரியும் தானே, விளங்கும் தானே என்ற அர்த்தத்தில் வருகின்ற Know வா தெரியாது. பெரும்பாலும் You know what I mean என்ற அர்த்தமாக, அதாவது நான் என்ன கருத்தில் சொல்கிறேன் என்பதை நீ விளங்கிக் கொள்வாய்தானே என்பதாகத் தான் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தொலைபேசியில் பேசும் போதும், எதையோ விளங்கப்படுத்த முயலும் போதும் அடிக்கடி 'நோ'கப்படும். இந்த 'நோ'வில் கேள்வியே தொக்கி நிற்கும். உதாரணத்திற்கு I was waiting. No? Then she came. No? I smiled. No?

இதில், இல்லையா? என்ற கேள்வியும் தொக்கி நிற்கும். வழமையில் இந்த 'இல்லையா' என்பது Isn't it? என்றுதான் பாவிக்கப்படுகிறது. இவ்வாறுன 'இல்லையா?' ஆங்கிலத்தில் question tags எனப்படும்.

★ ★ ★

It is cold, isn't it? என்றுல் 'குளிராயிருக்கிறது. இல்லையா?' என்று அர்த்தம். இந்த கேள்விகள் உங்களிடம் கேட்கப்பட்டால், கேள்வி கேட்பவர் உங்களிடம் சாதகமான பதிலைத் தான் எதிர்பார்க்கிருர் என்று அர்த்தம். இந்தாளுக்கு குளிர், வெக்கை தெரியாது என்ற மாதிரி 'இல்லையண்ணே, புழுங்கி அவியுது' என்று சொல்லத் தேவையில்லை. இப்படியான பதிலை எதிர்பார்த்தும் அவர் கேட்டிருக்க மாட்டார். தன்னேடு ஒத்துப் போகின்ற, உடன்படுகின்ற பதிலை எதிர்பார்த்தே இந்தக் கேள்விகள் கேட்கப்படும்.

இது கிட்டத்தட்ட தலைவர் சுற்றி வர இருக்கிறவர்களை கேள்வி கேட்பது மாதிரி... மாத்தயா இந்தியாவுக்கு உளவு பார்த்தார், இல்லையா? என்று தலைவர் கேட்டால்.. 'சீ.. சீ' என்று யார் சொல்லுவார். அது மாதிரியானது தான் இந்த question tag.

★ ★ ★

ஆனுல் எல்லா இடங்களிலும் இந்த Isn't it? என்பதைப் பாவிப்பது தவறு.
உதாரணத்திற்கு we are late, isn't it? என்பது தவறு. மாறுக,

He was late, wasn't he?
அவன் பிந்திஞன். இல்லையா?
She is beautiful, isn't she?
அவள் அழகானவள். இல்லையா?
They told you, didn't they?
அவர்கள் சொன்னுர்கள். இல்லையா?

மேற்குறிப்பிட்டவையே சரியான பிரயோகங்கள். இதில் உள்ள விதிவிலக்கு
I am late, aren't I? என்றே வரும். இதில் amn't I? என்று வராது.

★ ★ ★

அதேபோல, எதிர்மறை வாக்கியங்களில் 'இல்லையா?' பயன்படும் போது கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கும்.
It is not cold, is it? இங்கே Isn't it இல் காணப்படும் not வராது.
He wasn't late, was he?
She isn't beautiful, is she?
They didn't tell you, did they?

★ ★ ★

ஒரு வசனத்தின் பின்னர் 'இல்லையா' என்ற கருத்து வர வேண்டுமாயின், வழமையான துணைவினைகள் எனப்படுகின்ற am, is, are, could போன்றவற்றின் பின்னுல் ஒரு not ஐ சேர்த்து பொருத்தி விட்டால் சரி. அதைப் போல, வசனம் எதிர்மறையாக இருந்தால், அந்த not ஐ கழற்றி விட வேண்டியதுதான்.

எனவே, எல்லாவற்றிற்கும் Isn't it? என்று கொண்டிருக்காமல்...
You understand what I'm saying, don't you?
நான் என்ன சொல்கிறேன் என்று உங்களுக்கு விளங்குது, இல்லையா?
You wouldn't mix up, would you?
எல்லாவற்றையும் குழப்ப மாட்டீர்கள் தானே.

**உண்மையோ, கற்பனையோ இக்காலத்திலும் கற்புள்ளவள் வாழத்தான் வேண்டும், வாழ்ந்து கொண்டே இருக்கிறர்கள். கற்பு பற்றி ஆண்கள் பக்கம் கதை இல்லாததால் சகல ஆண்களும் கற்புள்ளவர்களும் அல்ல கற்புள்ள ஆண்கள் இக் காலமும் இல்லாமல் இல்லை. அது சரி இந்தக் 'கற்பு" என்பது என்ன?**

***(இன்னும் வரும். இவை சம்பந்தமாக அல்ல. அவை வேறு)***

### பண்டைய காலத்தில் தோன்றிய தீர்க்கதரிசிகள் கூறியவை

1. நீ சந்தோஷமாக இருக்க ஏழைகளுக்கு இரக்கமாக இரு. அவர்களை துஷ்சிப்பது பாவம்.
2. வெள்ளியையும் பொன்னையும் விட ஞானமும் அறிவு இருப்பது மிக நன்மையானது.
3. நேர்மையானவனுகவும் ஏழையாகவும் இருப்பது நேர்மையற்றவனுகவும் பணம் படைத்தவனுகவும் இருப்பதை விட நல்லது.
4. வாழ்க்கையில் வேலை செய்து சம்பாதி. நேரத்தை வீண் விரயம் செய்தால் நீ ஏழையாவாய்
5. ஒரு அரசன் நீதியில் அக்கறையாக இருந்தால், அவனது அரச ஆட்சி பலம் வாய்ந்ததாக இருக்கும் ஆனுல் பணத்தில் மாத்திரம் அக்கறையாக இருந்தால் அது அவனது நாட்டை சீரழிக்கும்.
6. பொய் வதந்திகளை பரப்பாதே, பெரும்பான்மையினரை பின்பற்றுதே, அவர்கள் பிழை செய்யும் போது, ஏழைகளுக்கு எதிராக பாகுபாடு காட்டாதே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரொறன்ரோவில் யாழ்ப்பாணம்



## காட்சி 1

***எந்தவித முன்னறிவித்தலும் இன்றி திரை விலகுகின்றது மேடையில் பல கதிரைகள் போட்டிருக்கிறது. .. மேடையின் நடுப்பகுதியில் மாத்திரம் 12 பேர் உட்கார்ந்திருக்கின்ருர்கள். நடுப்பகுதிக்கு சற்றுவிலகி ஒருவர் தனியே இருக்கின்ருர். பெயர் இல்லாமல் எண்களில் நபர்கள் அடையாளம் காட்டப்படுகின்ருர்கள்.***

1வது ஆள்... இப்ப என்ரை கேள்வி என்னென்ருல் "இனி என்ன செய்ய வேண்டும்.. இனி எங்கிருந்து தொடங்குவது"

2வது ஆள்.. இது லெனின் எழுதினது. . ஏதோ நீ சொன்ன மாதிரி சொல்லாதே.. மாக்ஸ் சொன்னதையும் லெனின் சொன்னதையும் தாங்கள் சொன்னதாய் ஊரிலே நோட்டீஸ் விட்ட தலமையில் இருந்து வந்த நீ வேறு என்ன சொல்லுவாய்.

3வது ஆள்.. நண்பனுக்கும் எதிரிக்கும் வித்தியாசம் தெரியாமல் குருதியிலே நீந்தி இங்கு வந்த நீ இண்டைக்கு மக்களுக்கு சேவை செய்யப் போகிறேன்....

இடை மறித்து

3 வது ஆள்.. தலைவர்.. என்ன பேசாமல் இருக்கிறியள்? இப்படி பேசினால் இந்த 13வது கூட்டத்திலையும் நாங்கள் ஒரு முடிவுக்கு வர மாட்டம்.

4வது ஆள்: உவரை இந்தக் கூட்டத்திற்கு தலைவராக்கேக்கையே தெரியும். எல்லோரும் பேசேக்கை வடிவாய் கேட்டுக் கொண்டிருப்பார் என்று.

தலைவர்: தயவு செய்து கொஞ்சம் பொறுமையாய் பேசுங்கோ. பல மனவுடைவுகளுக்கு பின்னும் ஏதாவது ஆக்கபூர்வமாக செய்யலாமே எண்டு தான் இப்படி ஒரு பிஸியான நகரிலை இருந்து கொண்டும் எங்கட நேரங்களை அர்ப்பணித்து கூடியிருக்கின்ருேம் .

தாய் சங்கத்தில இருந்து நாங்கள் பிரிஞ்சு வந்து இரண்டு வருசமாச்சு. அவர்கள் பல பிழைகள் விட்டு விட்டார்கள். நாங்கள் அற்புதங்கள் சாதிக்கப் போகிருேம் என்று கனவு கண்டு, இன்று வரை பெரிசாய் ஒன்றும் செய்யாமல் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கிருேம். சுயவிமர்சனம் என்ற இக்கூட்டத்தை ஒழுங்கு செய்து 13வது தடவையாக ஒரு முடிவுக்கும் வர முடியாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இண்டைக்காவது ஒரு முடிவுக்கு நாங்கள் வரவேணும். தயவு செய்து உங்கள் பூரண ஒத்துழைப்பைத் தாருங்கோ. கடந்த இரண்டு மூன்று கூட்டங்களுக்கு வராமல் இண்டைக்கு வந்த 12 வது ஆளை இப்போ தன் கருத்தைச் சொல்ல அழைக்கின்றேன்.

**செல்வம் எழுதும் தொடர்நாடகம்**

12 வது ஆள்– பாரதி தாசன் சொல்வார் "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்ருவது கண்டு....."

அடையாளம் தெரியாத ஒரு குரல் (மெதுவாக) போச்சுது.... அறுக்கப் போகிருர்.

5 வது ஆள்– (இடைமறித்து) அண்ணன் நீங்கள் எங்க பகைவர் எண்டு சொல்லுறது இங்கை இருக்கிற வெள்ளைக்காறரையோ– அல்லாட்டில் எங்கடை பழைய தாய்சங்கத்தையோ– அல்லாட்டில் தங்கத் தமிழ் மன்றத்தையோ?

12 வது ஆள்– நான் வாய் திறக்க முதலே தொடங்கிட்டியள்.... நான் இனியொண்டும் பேசேல்லை

தலைவர்– நீங்கள் இப்படியே பேசிக் கொண்டிருப்பீர்கள் என்ருல்– நானும் உதிலை வந்திருக்கின்றேன்– நீங்கள் யாராவது தலைமையேருங்கள்

8வது ஆள்– நான் மனுசியையும் பிள்ளையையும் ஒரு சாமத்தியச் சடங்கிலை விட்டிட்டு வந்தனான். கெதியாய் போய் அவையை பிக்கப் பண்ணவேண்டும் முடிவு கெதியாய் வராது போல் இருக்கு.

7 வது ஆள்– தாய் சங்கத்திலை இரண்டு வருசம், இதிலை இரண்டு வருசம்– என்ன பிரயோசனத்தைக் கண்டோம் இங்கை இருக்கிற மற்றவங்களை போல் பொதுவான விடயங்களையெல்லாம் மறந்து நாட்டையும் மக்களையும் மறந்து ஒண்டுக்கு இரண்டு வேலை செய்து இருந்தால் என்ரை அக்காவின்ரை கல்யாணமும் நடந்திருக்கும் இந்தியாவிலை அலையிற என்ரை தம்பியையும் கூப்பிட்டிருப்பேன்.

இரகசியமாய் ஒரு குரல்– அப்ப கூப்பிடேன்

9வது ஆள்– எங்களிட்டை சகோதரத்துவம் இல்லை நாங்கள் கற்று வந்த தோழமையும் இல்லை.....

6வது ஆள்– அன்பில்லா நேசிப்பு– அன்பில்லா நேசிப்பு

9 வது ஆள்– மக்கள் மக்கள் என்று என்ன பம்மாத்து விடுகிருேம். உண்மையில் அப்படி மக்களை நேசித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தால் நாங்கள் இந்தச் சிறிய கூட்டமாவது ஒற்றுமையாய் இருந்திருப்போம்.

6வது ஆள்– இவன் சொல்வது அவ்வளவும் உண்மை இதிலே இருக்கிற 12 பேருக்கும் 12 ஆயிரம் கொள்கை இருக்கு.......

இடை மறித்து

9வது ஆள்– நாலு வருசம் ஊரிலே இந்த சொர்க்கத்தை யாழ்ப்பாணத்துக்கை கொண்டு வாறன் என்று இயக்கத்தோடை இழுபறிபட்டு திரிஞ்சேன் இங்கை வந்ததும் 5 வருசமாய் தமிழ், சங்கம், விடுதலே புரட்சி என்று அலேயிறேன். என்ன பிரயோசனத்தைக் கண்டேன். என்ரை ரூம் மேட் சொல்லுறான் ஒரு நல்ல டாக்குத்தரைபார் உனக்கு சாடையாய் விசர் இருக்கெண்டு

4வது ஆள்– ஏன் இப்படி விரக்தியோடை பேசிறுய்– மற்றவர்களைபோலேயே நாங்கள். போன கிழமை "பொன்னவி" பேப்பரை எண்டு வாசிக்கிறேன் கேள்

"நகரத்திலே ...... சங்கம்தான் உண்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட இளைஞர்களைக் கொண்டிருக்கிறது. இங்கு ஒருவருக்கொருவர் தலைப்பாகை கட்டுவதும் அல்லது ஒருவர் மற்றவருக்குகுழி பறிப்பதுமாய் தங்கள் புகழுக்கும் பணத்திற்குமாய் அலேய, இவர்கள் தான் பொது நோக்கோடு ஏதாவது செய்ய முயல்கின்றுர்கள்.

8 வது ஆள்– பேப்பர் காறங்கடை கதையை விடு

தொடரும

# எச்சந்தால் காணப்படும்..



"செவ்விழி விரித்தாள்
அவ்விழி நோக்க
பவ்வியமாக
நங்கை நடந்தாள்"

"இது என்னப் பார்த்தெல்லா எழுதினீங்க"

"இல்ல அங்கால போடி! என்ன சொல்லிற உன்னைப் பார்த்து எழுதினதெண்டா உன்ர கவிதையை கொப்பியடிச்சது மாதிரியல்லவா இருக்கு"

"என்னத்துக்கு நீங்க எதுக்கெடுத்தாலும் என்னப்பார்த்து நக்கலும் நையாண்டியும் செய்யிறனீங்க. பெரிய புலவரென்றுதான் பெயர். நான் சொன்னது விளங்காம சண்டைக்கு வாறார்"

"சரியடி என்ன சொல்லவாற சொல்லன்"

"என்ர செவ்விழியால உங்களைப் பார்க்க நீங்க அந்த விழியை நோக்க நான் அங்கால பார்த்தெண்டு போனதைத்தானே இப்படி எழுதியிருக்கிறியள்"

"ஓ! இவா பெரிய உரையாசிரியை ஏதோ பெரிய கண்டுபிடிப்பு"

"ஏன் ஒத்துக் கொள்ளுங்கையன் நீங்கதானே சொல்லிறனீங்க. மூல ஆசிரியரைவிட உரையாசிரியருக்குத்தான் அறிவு யாஸ்தி என்று"

"சரி, சரி, என்னக் குழப்பாம அங்கால போறையா? நான் கவிதை ஒன்று எழுதி பேப்பருக்கும் போடப்போறன்"

"ஏன் உங்கட சிந்தனையை குழப்பிறனு? உங்களுக்குத்தானே சிந்தனை யென்றது மருந்துக்கு கூட இல்லேயே. இப்ப எழுதியிருக்கிறேங்கயெல்லா இந்த "செவ்விழி விரித்தாள்..." இது கூட வள்ளுவரிட்ட எடுத்ததுதான்"

"என்ன சொல்லிற விசரி"

"நானு விசரி. யான்நோக்கும் காலே நிலம் நோக்கும் நோக் காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்" என்ற குறளைத்தான் நீங்க கொப்பியடிச்சு எழுதியிருக்கிறேங்க"

"எடி பேச்சி. அதுக்கும் இதுக்கும் சரியான வித்தியாசமடி "யான் நோக்கும் காலே" என்றதில ஆம்பிளேதான்ரி முதல் பார்க்கின்றுன். பிறகுதான் பொம்பிளே பார்க்கிறுள் நான் சொன்னதில் பொம்பிளேதான்ரி முதல் பார்க்கிறள். பிறகுதான் ஆம்பிளே பார்க்கிறனடி வள்ளுவன் காலத்துக்கும் என்ர காலத்துக்கும் நிறைய வித்தியாசமடி. அந்தக் காலத்தில் பொம்பிளேயள் வாழ்ந்தவை இந்தக் காலத்தில்..."

"சரி சரி என்ன நீங்க மடக்கேல, பேசாம இருக்கிறேங்கையா."

"எடியே பேசாம இரு என்று என்ன மடக்கிறையா"

ஓ! நான் படிச்ச படிப்புக்கு உங்களட்ட வந்து வாழ்க்கைப்பட்டேனே எனக்கு செருப்பால அடிக்க வேணும்.

"ஓம்மடி ஓம் நீ படிச்சது சரி ஆனு உன்ர ஆத்தை உன்ன வளர்த்த சீத்துவக் கெட்ட வளர்ப்பு உன்ர வாய் வெட்டில தெரியுதடி"

"ஓ! என்னப்பற்றிக் கதையுங்க ஆனு என்ர அம்மாவை பத்தி கதைக்காதையுங்க"

"எடியே பொத்தடி வாயை வாய் நீளுது"

"என்ன வாயைப் பொத்தா வாய் நீளுதா? நான் யூனிவேர்சிற்றியில படிக்கேக்க எத்தனே பெடியங்கள் எனக்கு முன்னுலும் பின்னுலும் சுத்தினவங்கள் என்ர அக்கா கூட சொன்னவா அந்த விசரனைக் கட்டுறநேரம் உன்ன வளைய வளைய வாறவங்களில ஒருத்தனைக் கட்டெண்டு. ஐயோ என்ர அக்காவிட்ட சொல்ல கேட்டனு? நானே என்ர வாழ்க்கையில விளையாட்டனே. யானே தலையில மண்ணைத்தான் கொட்டும். நான் என்ர தலையில நெருப்பை அள்ளி கொட்டிற்றனே என்ர ஐயோ! ஐயோ"

"எடியே எடியே இப்ப என்னடி நடந்திட்டுது என்று குத்திற. குழறுற. நீதான்ரி முதலில என்னச் சுத்தி சுத்தி

27ம் பக்கம் பார்க்க..

சிதம்பரம் ஞா.வடிவேலனுர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னான்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார

## தமிழாக்கம்; செ. லோகநாதன்

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

குல ரீதியாக எடுத்துப் பார்க்கும்போது நிலப் பற்றுக்குறை, வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை, படிப்பறிவு இன்மை ஆகியவை ஒடுக்கப்பட்ட குலத்தோர் மத்தியிலேயே கூடுதலாகக் காணப்பட்டது. அரசியல் பிரதிநிதித்துவத்தில் இப் பாரபட்சங்கள் கூடுதலாக தெரிகிறது அரசியலில் சிங்களவர்களது குல மற்றும் குடும்பத் தொடர்புகள் பற்றிய ஜானிஸ் ஜீகின்ஸ் அவர்கள் செய்த ஆய்வின் தரவைகள் மூலமாக இவ் பாரபட்சங்களை நாம் தெளிவாகக் காணலாம் (இத் தகவல்கள் விக்டர் அய்வன் அவர்களால் இலங்கையில் நவீன கிளர்ச்சிக்காரர்களின் சமுக பின்னணி என்னும் நூலில் இருந்து பெறப்பட்டன) அவருடைய தரவைகளின்படி சிங்களவர் மத்தியிலே குலரீதியாக சனத் தொகையையும் மொத்த சனத் தொகையில் அவற்றின் விகிதாசாரத்தையும் 14 வது அட்டவணையில் காணலாம்.

குலப் பின்னணியின் கீழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பற்றிய விபரத்தை 15 வது அட்டவணையில் காணலாம் அவ் அவ் தேர்தலின்போது மொத்த பிரதிநிதித்துவத்தில் குல விகிதாசார ரீதியாக அவ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

"இலங்கையில் நவீன கிளர்ச்சிக்காரர்களின் சமுகப் பின்னணி" என்னும் நூலில் விக்டர் அய்வன் அவர்களின் கூற்றின்படி இப் புள்ளி விபரங்கள் பூரணமாக தவறற்றவை எனக் கருத முடியாதாயினும் பொதுவான சித்திரமொன்றை இதன் மூலம் எம்மால் வரைந்து கொள்ள முடியும். இதற்கமைய பார்க்கும்போது ஒடுக்கப்பட்ட குலத்தைச் சார்ந்தபோது அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் நிலவுவதையே காண முடிகிறது. 1947ல் இருந்து 1970 வரை பொதுவான பிரதிநிதித்துவத்தை எடுத்துப் பார்க்கும்போது இது எமக்கு நன்றாக தெரிகிறது. இது தொடர்பாக அட்டவணை 16ஐப் பார்க்கவும் (இது சிங்களவர் மத்தியில் மட்டுமேயாகும்.)

கொவிகம எனப்படும் குலத்தைச் சார்ந்தோர் சனத் தொகையில் 36% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போதிலும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் 58.9% வீதத்தை உரித்தாக்கியுள்ளனர். கொவிகம குலத்துக்கு சமமான மட்டமாக கருதக் கூடிய தெற்கின் கராவ எனப்படும் குலத்தவர் பத்கம போன்ற குலத்தவருடன் ஒப்பிடும் போது ஒடுக்கப்பட்ட குலத்தவர்கள் எனக் கருத முடியாது. கராவ சலாகம போன்ற குலத்தவர்களை ஒன்றாக சேர்க்கும் போது இவர்கள் சனத்தொகையில் 6.4% வீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் ஆனால் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் 14.2% வீதத்தை கொண்டுள்ளனர். ஒடுக்கப்பட்ட குலங்கள் எனக் கருதப்படுகின்ற குலங்களைச் சார்ந்தவர்கள் சனத்தொகையில் 28.8% வீதத்தை பிரதிநிதித்துவம் செய்வதோடு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் 6. 4% வீதத்தை மட்டுமே கொண்டுள்ளனர். அரசியல் பிரதிநிதித்தவம் பெலவீனமானதாக இருக்குமாயின் ஏனைய சகல உரிமைகளும் நசுக்கப்படும் என்பது தெளிவான ஒன்றாகும்.

இவ்வாறன குலரீதியான அநியாங்களும் ஜேவிபியை நோக்கி சனம் இழுபட்டுவருவதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியது எனக் கூறமுடியும். ஒடுக்கப்பட்ட குலத்தவர்களது கிராமங்களின் இளைஞர்களும் யுவதிகளும் மட்டுமன்றி வயது வந்தவர்களும் பரந்த ரீதியில் ஜேவிபியுடன் தொடர்பாக இருந்தார்கள் என்பதை இது தொடர்பாக ஆராயும் போது தெளிவாக தெரிகிறது. ஒடுக்கப்பட்ட குலத்தவர்களை கொண்ட கிராமங்கள் அப்படியே முழுக் கிராமங்களாகவே ஜேவிபியை நோக்கி இழுபட்டு வந்தன.

உதாரணமாக கூறுவதாயின் குருநாகலை மாவட்டத்தில் மல் சிறிபுர, மடகஹபொல கந்த, தொடன்கஸ்வந்த, மதுராகொடை, ரன்தெட்டிகந்த, புஞகொட, பொதுவாப்பிட்டிய (பொத்துவாபிட்டிய குருனாகலை மாவட்டத்தில் பிரதான மையமாகும். அனேக ஆயுதக் குழுக்கள் இப் பிரதேசத்தை அடித்தளமாகக் கொண்டு செயல்பட்டன.) பொத்தேவெல, வேவகம, தியதொற, கட்டுபொத்த, தெகிகம, ஆகிய பிரதேசங்கள் சிலவற்றைக் காட்டமுடியும் இக் கிராமங்களில் ஜேவிபி மிகவும் உச்சமட்டத்தில் செயல்பட்டதோடு இக் கிராமங்களில் ஒடுக்கப்பட்ட குலங்களைச் சார்ந்த மக்களே வாழ்ந்தனர்.

கேகாலை மாவட்டத்தில் பரப்பே,

அட்டவணை;14

| குலம் | சனத்தொகை | வீதம் |
|---|---|---|
| கொவிகம | 4,500,00 | 36.0 |
| கராவ/சலாகம/ ஏனையவை | 800,000 | 6.4 |
| பத்கம/வஹூம்புர/ ஏனையவை | 3,600,000 | 28.8 |
| மொத்தம் | 8,900,00 | 71.2 |

அட்டவணை ;15

| குலம் | 1947 | 52 | 56 | 60 | 65 | | |
|---|---|---|---|---|---|---|---|
| பொதுவாக கொவிகம | 50.5 | 60.5 | 58.9 | 57.6 | 61.6 | 62.4 | 58.9 |
| கராவ /சலாகம/ நுவரெலிய | 14.7 | 13.7 | 15.8 | 16.5 | 11.9 | 12.5 | 14.2 |
| பத்கம/ வஹூம்புர/ஏனைய | 6.4 | 5.3 | 4.2 | 7.2 | 8.0 | 7.2 | 6.4 |

இத்தகவல்கள்; விக்டர் அய்வனால் எழுதப்பட்ட இலங்கையின் நவீன கிளர்ச்சிக்காரர்களின் சமுகப் பின்னணி' என்னும் நூலில் இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டவணை 16

| குலம் | மொத்த சனத்தொகையில் வீதம் | பாராளுமன்ற பிரதிநித்துவ வீதம் |
|---|---|---|
| கொவிகம | 36.0 | 58.9 |
| கராவ/சலாகம/துராவ | 6.4 | 14.2 |
| பத்கம/வஹும்புர ஏனைய | 28.8 | 6.4 |

ஹேவாதிவெல, குடாகம, தலம் பிட்டிய, தீவல, அட்டுகொட, புளத் கொஹூபிட்டிய, ஊரவெல, வல்கம்பத்த, தொரவக்க, கொஹொலதெனிய, மெனிக்கடவர, பல்லபான, தேவாலேகம ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். மாத்தறை மாவட்டத்திலும் எல்லேவெல, கெட்டன்வில வெலிகெட்டிய, பங்கம, பேனேகம, கியன்துவ, கனகே போன்ற கிராமங்கள் இதற்கு உதாரணங்களாகும். இரத்தினபுரி மாவட்டத்திலும் கொலன்ன பிரதேசம் இதற்கு உதாரணமாகும்.

ஜேவிபி பரவுவதற்கு குலக் காரணி கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் காண முடிகிறது. 1971 கிளர்ச்சியின் போதும் ஒடுக்கப்பட்ட குலங்களைச் சார்ந்த இளைஞர்களும் யுவதிகளுமே கூடுதலாக உயிர் இழந்தனர் எனவும், கிளர்ச்சி காலகட்டத்தில் நீண்டதும் உக்கிரமுமான போர் இடம்பெற்றதும் ஒடுக்கப்பட்ட குலங்களைச் சார்ந்த மக்கள் பரவலாக வாழ்ந்த பிரதேசங்களிலேயே எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (விக்டர் அய்வன் அவர்களின் 'இலங்கையில் நவீன கிளர்சிக்காரர்களின் சமூக பின்னணி" நூலைப் பார்க்கவும்)

1987...89 கிளர்ச்சியை நோக்கும்போது 1971 கிளர்ச்சியையும் விட குலக் காரணி செயல்பட்டுள்ளது என்பது தெரிகிறது. ஜேவிபியின் செயற்பாடுகளில் மிகவும் மும்முரமாக செயற்பாடுகள் நிலவிய பிரதேசங்களை நோக்கும்போது இதனை நாம் தெளிவாகக் காணமுடியும். மேலே நாம் காட்டியது இதற்கான சில உதாரணங்கள் மட்டுமேயாகும்.

விக்டர் அய்வன் தனது "இலங்கையின் நவீன கிளர்ச்சிக்காரர்களின் சமூக பின்னணி" என்னும் நூலில் காண்பிக்க முயற்சிப்பதன்படி 80 தசாப்தத்தில் ஜேவிபியின் வளர்ச்சியை நோக்கும் போது கிராமிய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட குலத்தவர்கள் வாழ்ந்த கிராமங்களில் ஜேவிபியின் நிலமை மிகவும் சக்திவாய்ந்ததாகவும் உயர்ந்த என்று கருதப்படுகின்ற குலங்களைச் சார்ந்ததாகவும் உயர்ந்த என்று கருதப்படுகின்ற குலங்களைச் சார்ந்தோர் வாழும் கிராமங்களில் அதன் நிலமை பெலவீனமானதாகவும் கலந்து வாழ்ந்த கிராமங்களில் பொதுவாக பலமானதாகவும் காணப்பட்டதை தகவல்களை ஆராயும் போது காணக் கூடியதாகவுள்ளது. ஜேவிபியினால் கொல்லப்பட்டவர்களில் அனேகர் உயர்ந்த எனக் கருதப்படும் குலங்களைச் சார்ந்தவர்கள் என்பதையும் ஜேவிபியினர் எனக் கொல்லப்பட்டவர்களில் அனேகர் ஒடுக்கப்பட்ட குலங்களைச் சார்ந்தவர்கள் என்பதையும் காணக் கூடியதாயுள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

குலக்காரணி ஜேவிபி யின் வளர்ச்சிக்கு கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது சந்தேகத்துக்கு இடமற்றதாகும். ஆனாலும் அது பொருளாதாரக் காரணியை விட இரண்டாவது பாத்திரத்தையே வகித்துள்ளது. ஒடுக்கப்பட்ட குலங்களைச் சார்ந்த மக்கள் பொருளாதார ரீதியாகவும் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்தனர். அவர்கள் ஜேவிபியை நோக்கி இழுபட்டு சென்றதற்கான தீர்க்கமான காரணி இதுதான். குலக்காரணி இதனுடன் சேரும் போது ஜேவிபிக்கும் இவர்களுக்குமிடையே நிலவிய பிணைப்பு மிகவும் பலம் வாய்ந்ததாக மாறியது. சமுதாயத்தில் மிகுந்த தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்ததும் இவர்களேயாதலால் இவர்களுடைய நடவடிக்கைகள் மிகவும் வன்முறையானதாக இருந்தது.

ஜேவிபியின் தோற்றத்துக்கும் அவ்வாறே 1971 இலும் 1987 89 காலகட்டத்திலும் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கும் மேலே காட்டப்பட்ட பொருளாதார சமூக காரணிகளைத் தவிர அரசியல் காரணியும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மென்மேலும் ஆழமடைந்து வந்த சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணவேண்டுமாயின் அரசியல் மாற்றம் அவசியம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

பாராளுமன்ற முறை பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவியது. ஆனால் அதன் மூலமாக பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் என்பது தெரியக் கூடியதாக இருக்கவில்லை. நாற்காலி மாற்று முறை போன்று கட்சி மாறினாலும் இடையிடையே ஒரு சிலவற்றைத் தவிர படிப்படியாக பிரச்சனைகள் உக்கிரம் அடைந்ததே தொடர்ச்சியாக ஏற்பட்டதாகும். ஒருபுறம் பாராளுமன்ற முறை நமது பிரச்சனைகளுக்கு தீர்வு அளிக்காததாலும் மறுபுறம் பாராளுமன்ற முறை ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் அவசியங்களைப் பூர்த்தி செய்யும் கருவியாக மாறியிருந்ததாலும் இது தொடர்பாக விசேடமாக ஒடுக்கப்பட்ட இளம் சந்ததியினர் மத்தியிலே விரக்தியே நிலவியது.

இருந்த அரசியல் கட்சிகள் எதுவும் நாட்டின் எரியும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் திறமையை காட்டவும் இல்லை. யூஎன்பி யும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மாறி மாறி நாட்டை ஆண்ட போதிலும் அதில் எந்தவொரு கட்சியும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக சரியான முயற்சியில் ஈடுபடவும் இல்லை. இதற்குப் பதிலாக தாம் பதவியில் இருக்கும் போது அரசியல் அடக்கு முறைகள் மூலமாக பிரச்சனைகளை அமுக்கியதே இவ் இருகட்சிகளும் செய்த வேலையாகும். இதனால் இவ் இருகட்சிகளையும் குறித்து இளைஞர் மத்தியில் விரக்தியே உருவாகியிருந்தது.

முதலாளித்துவக் கட்சிகளின் நடவடிக்கைகள் காரணமாக விரக்தியும் மனவேதனையும் அடைந்திருந்த பகுதியினரை தமது பக்கம் இழுத்தெடுக்கக் கூடிய அளவு திறமை இக்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கத்திடம் இருக்கவும் இல்லை. இடதுசாரிகள் தாம் இழைத்த தவறுகள் குறைபாடுகள் காரணமாக பெலவீனப்பட்டிருந்தனர். தமது தவறுகள் குறைபாடுகளைத் திருத்துவது தொடர்பாகவும் அவை அக்கறை செலுத்தாத கொள்கையையே கடைப்பிடித்தன. இருந்த அரசியல் கட்சிகள் ஏறக்குறைய அனைத்துமே மக்களின் அவசியத்தை ஈடேற்ற முடியாத நிலைக்கு வீழ்ச்சியுற்றிருந்ததால்

27ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொடர்கதை

# வேலிகள்

### கடற்புத்திரன்

சுரேஷும் அவனும் சொலுசன் பூசி சிறிய கொம்பவுண்ட் துண்டை வைத்து உலர விட்டார்கள் சுரேஷ் றபர் துண்டை எடுத்து அதேமாதிரி கத்தியால் பிராண்டி தூசை ஊதிவிட்டு சொலுசன் பூசி உலரவிட்டான்.

ஒரு நொடியிலே வேலையை முடித்து காத்தடித்து சைக்கிளை கொடுத்தார்கள்.

முத்தனின் கஜானப் பெட்டியில் வந்தவர்கள் தந்த 1 ஐ போட்டார்கள்.

2.00 மணிக்கு யார் வரப்போகிறார்கள். பிரித்த சைக்கிள் பகுதிகளுக்கு ஒருத்தன் கிறீஸ் வைத்து போல்ஸ் வைக்க அவன் கழுவாத பகுதியை மண்ணெய்த்துணியால் கழுவிக் கொண்டும் இருக்க. பாபு பூட்டிய பகுதிகளை சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

இடையிடை "ச்சு" "ச்சு" என்று சொல்லிக் கொண்டார்கள்.

"என்னடா" என்று முத்தன் கேட்க. 'ஈ விரட்டுகிறோம்' என்றார்கள். "உங்களுக்கு வேற வேலை இல்லை" என்று விட்டு வேலையில் கவனத்தை பதித்தான்.

வந்த கண்ணப்பன் அவர்களைப் பார்த்து ஆச்சரியமாய் கேட்டான்.

"எப்ப தம்பியன் வந்தனீங்கள்?"

"அக்காட்ட தண்ணி வைக்கச் சொல்லனை" என்று அவனிடம் முத்தன் சொன்னான் கண்ணப்பன் போன பிறகு அந்த 'செய்தி' வந்தது.

'செட்டியாமடத்து வயல் கிணற்றிலே பூபதி தன் 3 குழந்தைகளையும் போட்டுவிட்டு தானும் விழுந்து செத்து விட்டாளாம்" அச்செய்தி அவர்களை உலுப்பியது.

கைகளை அவசரமாக துணியில் துடைத்துவிட்டு கடையை மூடி விட்டு ஓடினார்கள்

'பூபதிக்கு 20 வயசிருக்கும். இளம் பெண் 16 இலே கட்டியிருப்பாள். காட்டுப் புஷ்பங்களாக அழகான குழந்தைகள். ஒருத்தன் பெடியன்.

இருவர் சிறுமிகள் நண்பகலிலே குதித்து விட்டாள் ஆள்நடமாற்றிருந்த வேளை!

ஓரிருவர் நடமாடியபோதும் கிணற்றை யாரும் வயல்பக்கமாகவே இறங்கி எட்டிப்பார்க்கவில்லை. பின்னேரம் பள்ளியாலே வயலுக்கு அப்பாலிருந்த வறிய சிறுவர்கள் வீதியிலும் வயல் வரப்பிலுமாக விளையாடிக் கொண்டு போன போது. கண்டிருக்கிறார்கள். செய்தி காட்டுத் தீயாகியது

★ ★ ★

"கட்டியவன் ஒழுங்காய் இருந்தால் இவள் ஏன் சாகப் போறள்?" என்றும்

"உழைச்ச காசை குடிச்சிட்டு வாறதாலே உவன் 3 நாளாய் வீட்டிலே பட்டினியோட கிடந்தாள் பிள்ளைகள் அழுவதைப் பார்க்க முடியல்லை கொஞ்சம் கஞ்சி வடிச்சுக் கொடுத்தேன் பெட்டச்சி மனக வெறுத்து இப்படி முடிவை எடுத்திட்டாளே" காவேரியக்கா அழுது கொண்டிருந்தாள்.

"குழந்தைகளை விட்டு அவனால் வயல்வேலைக்கு வரமுடியவில்லை" சினேகிதி ஒருத்தி கரைந்தாள். தண்ணியிலே சிறிது பலவீனமாக நின்ற அவனும். முதல் ராத்திரி சாப்பாடில்லை என்ற போது அடித்து துவைத்திருக்கிறான் அச்செய்தியும் வதந்தியாக வந்தது பலவித விமர்சனங்கள்.

அவளை விரும்பி (காதலித்து) கட்டியவன் குடியினால் உள்ள நிலைமையை உணரத்தவறிவிட்டான் எதிரே மூழ்கி கிடந்த பிரேதங்கள் அவனை பைத்தியம் பிடிக்க வைத்தன.

யார் மேலே குற்றம் சொல்வது? "எதற்கும் சாவு தீர்வில்லை" என்று வாதாடும் அவர்களுக்கும்.. என்ன சொல்றது என்று தெரியவில்லை. சோகத்துடன் நின்றார்கள்.

"எங்கட சமுகத்திலே நெடுக இப்பிரச்சனைகள்" சலித்துக் கொண்டான் முத்தன்

இரவிலும் தென்னோலை தோரணம் கட்டி 7. 30 மணிக்கு சவத்தை எடுத்தார்கள்.

சிவில் சேவையாளர். பொலிசார் இல்லையா? நடுநிலை தவறிய 'ஆட்சியாளர்களால் மக்களுக்கும் அவர்கள் மேல் நம்பிக்கையற்று விட்டது. வடபகுதியில் யாரும் அவர்களை நாடுவதில்லை.

சிறிய மழைத் தூறலில் புருஷன்காரன் சட்டியை காவ, 2 பாடையில் உடல்களை கிடத்தி காவிச் சென்றார்கள். சவப்பெட்டி உபயோகிக்கிறதெல்லாம் மற்றச் சாதியினர்தான். குறுகிய நேரத்தில் எவர்க்கும் இரக்கம் பொத்திக் கொண்டு வராது! கனநேரமாய் நீரிலே கிடந்ததாலும். எம்பாம் பண்ணாததாலும் உடனேயே எடுத்தார்கள்.

நீண்ட தூரத்தைக் கடந்து சென்ற சவம் பாலத்தடி சுடலையை அண்மியது. மனிசர்களில் 'தேவர்கள்' இருந்து தொலைந்து விட்டார்களே!' அச்சாதியினரை அச்சுடலையில் எரிக்க முடியாது காவிச் சென்று வாடிப்பக்கமாகவிருந்த சுடலையிலே எரிக்க முடியும். நீண்ட தூரம். மற்றச்சாதிகள் கூட அதைப்பற்றி அக்கறைக் கொள்ளவில்லை. ஒவ்வொன்றும் 'தான் ஒடுக்கப்படுகிறோம்' என்ற பதாகையை வைத்திருந்ததே தவிர. தமக்கு கீழ் இருப்பவர்களை ஒடுக்கியே வந்தது.

பள்ளிக் கூடத்தடியைச் சேர்ந்த பெடியன் சற்று துணிச்சல் உடையவர்கள் கணிசமானவர்கள் நகர வேலையை நாடியதால் குடிமை வேலைகள் வேண்டியிருக்கவில்லை. பெற்றோரும் பெண்களுமே அதிலே சிக்குப்பட்டிருந்தார்கள். வாசிகசாலை ஐக்கியம் பேணி அம்மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரங்களாகவிருந்தார்கள் தவிர அதிபருடன் சேர்ந்து சிறுவர்களை படிக்க தூண்டி வந்தார்கள் அப்பெடியன்னே செத்த வீட்டை நடத்துற பொறுப்பை ஏற்றிருந்தார்கள்.

மழைத்தூறல் சிறிது வெலக்க.. தாவி வந்த நகுலன் "டேய். சவத்தை உந்த சுடலையிலே எரித்தால் என்ன?" என்று கேட்டான்.

பேச்சு சல சலத்தது.

"பாடையை திருப்பு" முத்தனின் மச்சான் குணத்தான் உரத்துச் சொன்னான். கிட்டடியில் தான் பள்ளிக்கூடத்துப் பெட்டையை முடித்து அப்பகுதிக்கு போயிருந்தான்.

பழசுகளும் நடுத்தர ஆட்களும் பயந்தார்கள். விறகு போய்க் கொண்டிருந்த ஒற்றைத் திருகல்வண்டியை சஞ்சயன் திருப்பிக் கொண்டு வந்தான்.

தயங்கிவர்கள் மெதுவாக சுடலைக்கு வந்தார்கள். மணியம் சட்டியை உடைத்து எரி மூட்டினான்....

★ ★ ★

அரைகுறை மழையிலே குளித்ததால் சனி பிடித்திருந்தது. அதிகாலை 6.00 மணிக்கு மழை அடித்து ஊத்த தொடங்கிவிட்டது. காலையிலே காடாத்தோடு (சாம்பல்) எடுத்திருக்கமாட்டார்கள் மழை அடித்துக் கொண்டு போயிருக்கும் போலப்பட்டது. பூபதி ஆண் இனத்தின் மீது சாபம் போட்டுவிட்டாளோ? அவளை விட 4 வயது வித்தியாசமாகவிருந்ததால் அவன்ர பட்ச் என்ற நினைப்பு. அவள் சார்பாக நின்று எல்லார் மீதும் குமுறும் போக்கு ஏற்பட்டிருந்தது. 2 தரம் தும்மினான். வீட்டிலே பள்ளிக்கூடம் ஒருத்தரும் போகவில்லை நண்பர்களும் போயிருக்க மாட்டார்கள் என்று பட்டது.

10 மணி போல மழை சிறிது நிற்க- குலனைக்கு வெளிக்கிட்டான். ஒழுங்கையின் சமனின்மையால் கலங்கள் தண்ணீர் வெள்ளமாகவிருந்தது. சைக்கிள் வாறி அடித்தபடி. மட்காட் டயர் கழுவுப்பட சென்றது. குலனைப்பாதையை அடைந்த போது திகைத்துப் போனான் விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துச்சென்ற பாதையை காணவில்லை வெள்ளம் மூடியிருந்தது. ஏற்கனவே பாதை சரியில்லை. மழை பெய்தால் சேறும் சகதியுமாக மாறிவிடும் எப்படி மக்கள் போய் வருகிறார்களோ? பாபு வீட்ட





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போற எண்ணத்தை கைவிட்டான்.

அப்படியே மடத்தடி ஒழுங்கையாலே ஏறி வயல் வெளிகளை பார்த்தபடி... எங்குமே சுமார் 3 மணி நேரமாக அடித்து ஊத்தியதில் எங்குமே வெள்ளக்காடாகவிருந்தது. சிலர் வரம்புகளை உடைத்து நீரை பாய விட்டார்கள். என்ர காணித்துண்டுக்க எப்படி விடுவாய் என சண்டை பிடிப்பவர்களும் நின்றார்கள் பரந்த மனப்பான்மையும் அறிவியல் வேட்கையும் அற்றவர்களாகவேயிருக்கிறார்கள் அதனாலேயே அரைக்கரைவாசி துன்பங்களை பெறுகிறார்கள்.

பின்னேரம் பேரல பாபு வீட்ட வந்தான் "ஒழுங்கை பரவாயில்லையா?" கேட்டான் வெள்ளம் வடிந்து விட்டது. கூலாய் சறுக்கிறதாகவிருக்கிறது" போனவருஷமும் இந்த பிரச்சனை வந்தது விசி ஐக் கொண்டு திருத்தலாம் என்று பெரிசுகள் தட்டிக் கழிச்சு விட்டினம். அரச நிறுவனங்களில் பேரினவாதமும் சாதியமும் விளையாடுகிறபோது சுயமாக வாழ்றதே சரி போல இருக்கிறது பெடியனாய் சேர்ந்து திருத்துவதாக முடிவு செய்திருக்கிறோம்" என்றான்.

'நல்ல முயற்சி" என்றான் அவன்

பொறி தட்ட "AM 47 (ரேடியோவில் சனலற்றதாகவிருந்த மீற்றர்) இலே அறிவித்தல் செய்தனியா" கேட்டான். புன்முறுவல் பூத்தான்

"இந்த அடைமழை பல பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வந்து விட்டது. பெடியன் அணி இந்த கிழமையில் ரோட்டை திருத்துவதாக 'மார்' தட்டி எழும்பிவிட்டார்கள் என்ற நற்செய்தியை அறியத்தருகிறோம். ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிக்கு ரோடு போடுவது பற்றிய செய்திகளை கேட்கலாம்". என்று அறிவிப்பாளர் போல பேசினான்

அவ்விடத்து பெடியன் புத்திசாலிகள். ஒரு விசயத்தில் இறங்கினார்கள் என்றால் கச்சிதமாக முடித்தே விடுவார்கள். எப்ப தொடங்கப் போறீர்கள்? கேட்டான் கொஞ்சம் தரை காய நாளைக்கு நாளன்றைக்காய் இருக்கும்!" என்று பதிலளித்தான்.

தொடரும்

## எச்சத்தால்...

வந்தனியடி பிறகு அக்கா சொன்னது மயிர் சொன்னது என்று என்னடி பிலாக்கிணம் வைக்கிற"

"என்ர அம்மாவைக் கதைச்சு இப்ப என்ர அக்காவையும் இழுத்து கதைக்க வந்தாச்சா?"

"எடியே பொத்தடி வாயை. ஆம்பிளைக்கு அடங்கி ஒடுங்கிப் போறவள் தான்ரி பெண். பல்லுடைச்சு கையில தருவன்ரி. நீ பெண்ணடி? நான் இல்லாட்டி உன்ன ஒருத்தரும் கட்டியிருக்கானுங்களடி"

"ஐயோ! இருதயத்தைப் படிச்சு அதில பட்டம் வாங்கினனே! இந்த அறுவான்ர இருதயத்தை அறியாம இவனைக்கட்டி இப்படிக் கிடந்து அலவாய்ப்படுறனே."

"எடியே நீ செத்த இருதயத்தைத் தான்ரி படிச்சனி. காஞ்ச இருதயத்தைத் தான்ரி படிச்சனி என்ர ஈர இருதயத்தைப் படிக்க உன்ர படிப்பு போதாதடி. நீ இருதயத்தை கீறி கிளிச்சுப் படிக்கத்தான்ரி லாயக்கு. அப்போதே சொன்ன உன்ர தலையில நெருப்பை கொட்டிற்ற என்று. இப்ப சொல்லிறன்ரி நான் என்ர இருதயத்தில நெருப்பைக் கொட்டிற்றன்னென்று"

"இப்பயும் காலம் போகல உன்ன விட்டிற்று என்னொருத்தனை கட்டியன்று வடிவா வாழத் தெரியும். ஊர் உலகத்துக்கு சங்கேனம் என்றுதான் உன்னோடை வாழுறன்"

"எடியே உன்னத் தெரியுமடி இப்ப மட்டும் என்னோட மட்டுமாடி வாழுற. பத்தினியாட்டம் பதை பதைச்சு கதைக்காதையடி"

"இப்ப என்ன நடந்திட்டுது என்று பத்தினியா மற்றதா என்று புலம்பிறேங்க"

"எடி மச்சாள் ஊடுதல் காமத்துக்கு இன்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்"

"சபாஷ், சபாஷ்"...

"என்ன தம்பிமார் இவ்வளவு நேரமும கதவுக்கையா நின்றனீங்க நீங்க ஆரு? எங்கட நாடகம் எப்படி? இளைஞர்களுக்குப் பிடிக்க வேணும். நாடகம் முடியேற்க எப்படி சபாஷ் சொன்னேங்க இதில இருந்து எனக்கு விளங்குது இந்த நாடகம் வெற்றி பெறும் எண்டு. மச்சாள் பெரிய நடிகையடி"

"ஏ பெரியவர் எங்களுக்கு நடிக்காதையும் பெண்களை அடக்குறது ஒடுக்கிறது எல்லாம் மலையேறிப் போச்சு. உங்களைப் போல சிலருக்கு படிப்பிச்சா தான் பெண்கள் விடுதலை பெறுவார்கள். நாங்க இப்படி வீடு வீடா ஒட்டுக் கேட்டு பெண்ணை ஒடுக்கிற உங்களப் போன்ற சிலருக்கு தக்க தண்டனை கொடுக்கிறம் நடவுங்க எங்களோட"

"தம்பிமார் அவர் என்ர மனுசன் நாங்க நாடகம் போட்டு பிழைக்கிறனுங்க. அவர் விட்டுடுங்க தம்பி ராசமார் இரண்டு கையெடுத்து கும்பிறன் அவரை ஒன்றும் செய்யாதையுங்க"

"கையும் மெய்யுமாய் பிடிச்சிட்டம் இனி ஒன்றும் செய்ய முடியாதம்மா நீங்களே இப்படி ஒளிச்சா நாட்டில பெண் அடிமையை ஒளிக்கிறது என்றிறது கஷ்ரம் தான் நாம் தக்க தண்டனை கொடுத்துத்தான் தீருவம்."

"ஐயோ ராசாக்கள் அவரை விட்டுடுங்க ஐயோ என்ர குருக்களை ஒன்றும் செய்திடாதையுங்க என்ர ஐயோ என்ர ஐயோ"

"நடவையா கோயில் மாடுமாதிரி நிற்கிற. எப்படி பெண்களை அடக்கி ஒடுக்கி நடத்தியிருக்கிற என்பதை அந்த அம்மா நடிக்கிற நடிப்பைப் பார்த்தா தெரியேலயா? உன்னையெல்லாம் சும்மா விடக் கூடாது"

'ஐயோ! ஐயோ"!

"செவ்விழி விரித்து
கங்கை நீர் போல
பொங்கிப் பொழிந்தான்"

யாவும் கற்பனையே

## ஜே.வி.பி..

பொருளாதார சமூக பிரச்சனைகளால் தாக்குதல்களுக்குள்ளாகியிருந்த மக்களை அதிலிருந்து கடையேற்றக்கூடிய பாதையை காட்டும் அரசியல் இயக்கம் ஒன்றின் தேவை காணப்பட்டது. இவ்வாறன தேவையொன்று நாட்டில் வளர்ந்து வரும்போதே ஜேவிபி மீண்டும் நடவடிக்கைகளில் இறங்குகிறது.

தொடரும்

ஏப்பிரல் 15 இதழில் 27 ம் பக்கம் 1வது கலம் 7வது வரியில் "அவ்வாறே தொழில்களைச் செய்யாமலும் அல்ல" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை தயவு செய்து "அவ்வாறே கீழ் மட்ட வர்க்கங்களைச் சார்ந்த எவருமே உயர்மட்ட தொழில்களைச் செய்யாமலும் அல்ல" எனக் கொள்ளவும் அதே பக்கம் 2 வது கலம் 47 வது வரியில் "உயர்ந்த எனக் கருதப்பட்ட குலத்தைச் சாராத மக்களுக்கு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் படிப்படியாக அழிந்து கொண்டு போனாலும்" என்பதை தயவு செய்து " உயர்ந்த எனக் கருதப்பட்ட குலத்தைச் சாராத மக்களுக்கு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் மத்தியிலும் இரண்டாம் இடமே கிடைத்தது. இந்நிலமை படிப்படியாக அழிந்து கொண்டு போனாலும்" எனக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2 (22)

1983 ஆடிக் கலவரத்துக்குப் பின் இந்தியாவின் வற்புறுத்தலினால் பார்த்தசாரதியின் உதவியுடன் ஜே. ஆர் தயாரித்து விவாதிக்கப்பட்ட "சீ" இணைப்பு இருநாடுகளும் இணைந்து இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண எடுத்த முதற் பகிரங்க நடவடிக்கையாகும். ("சீ" இணைப்புடன் இன்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய சிங்கள தமிழர் உடன்படிக்கைகள் இத்தொடர் முடிவில் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட விருப்பதனால் "சீ" இணைப்பின் சரத்துக்கள் பற்றி இங்கு குறிப்பிடவில்லை.

"சீ" இணைப்பின் தோல்விக்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக அது ஈழத்தமிழ் மக்களின் பரந்த அபிலாசைகளை குறிப்பிடக் கூடிய அளவுக்கேனும் ஈடு செய்யவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் சம்பந்தன் ஆகியோரும் இன்னும் பல தமிழ் பிரதிநிதிகளும் பங்குபற்றிய போதும் இது உளப்பூர்வமானதா என்பது கேள்விக்குறியாக இருந்தது. ஏனெனில் த.வி.கூ. பிரதிநிதிகள் தமிழர்களின் பிரதிநிதிகளா? அல்லது இந்திய அபிலாசைகளின் பிரதிநிதிகளா என்ற சர்ச்சை தமிழ் போராளிக் குழுக்கள் மத்தியில் இருந்தது.

இதனால் இத்தகைய ஒரு குறைந்த தீர்வுக்கு செல்லும் போது இளைஞர்களினால் எழும் பிரச்சனைகள் பற்றி கூட்டணி கரிசனை கொண்டிருந்தது. ஆகவே கூட்டணி முழுமனதுடனான பங்களிப்பை செய்யமுடியாத சூழலில் இருந்தது குறிப்பிடக்கூடியது. அடுத்ததாக இந்தியாவின் பங்களிப்பும் இங்கு இணைப்பு பற்றி பிரதமர் இந்திரா, ஆர்.என்.காவ், ஜீ பார்த்தசாரதி ஆகிய மூவர் மட்டும் பூட்டிய அறையில் பல மணித்தியாலங்கள் விவாதித்தார்கள் எனத் தெரியவருகிறது.

அவர்கள் விவாதித்தவை என்ன என்பது பற்றி யாருக்கும் தெரியாத போதும் முக்கியமாக "சீ" இணைப்பு வெற்றியளித்தால் இந்தியாவின் நிலை என்ன என்பதே முக்கியமானதாகவிருந்திருக்கும். "சீ" இணைப்பை இலங்கை அரசும், தமிழர்களும் ஏற்றுக் கொண்டு ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படுவதுடன் இந்தியாவின் பிரசன்னமும் தேவையற்றதாகிறது. ஆகவே இந்தியாவின் பகை நாடுகளான அமெரிக்க, இஸ்ரேல், சீன பாகிஸ்தானிய தொடர்புகளை துண்டிக்க இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்க இந்தியா வேறொரு பிரச்சனையை உருவாக்க வேண்டிய நிலையில் இருந்தது. அந்த நேரத்தில் இதற்கு மார்க்கங்கள் இல்லாதிருந்தது.

ஆகவே அரசியல் தீர்வின் தோல்வி இந்தியாவினால் மறைமுகமாக விரும்பப்படக் கூடியதாகும். இதே போன்ற சூழல் பங்களாதேஷ் பிரிவினையின் போதும் இந்தியாவுக்கு ஏற்பட்டது. அசோகா ரியனா வின் கூற்றுப்படி (INSIDE RAW- THE STORY OF INDIA'S SECRET SERVICE VIKAS NEW DELHI 1981ஐ பார்க்கவும்) பங்களாதேஷில் "ரோ" வின் உளவு அறிக்கைகளின்படி அரசியல் தீர்வைத் தவிர்த்து இராணுவத்தீர்வுக்கு (Surgical intervention) செல்லுமாறு பிரதமர் அறிவுறுத்தப்பட்டார். இதன்படி ஒவ்வொரு ஆறுகிழமைக்கும் 2000 இளைஞர்கள் வீதம் பங்களாதேஷ் எல்லைகளில் (hit and run warfare) தாக்கிவிட்டு ஓடிமறைதல் யுத்தப்பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த இளைஞர்கள் "முக்தி பாஹினி" யை சேர்ந்தவர்கள்.

இந்த விதமான இரகசிய இராணுவ நடவடிக்கைகள் பாகிஸ்தானை ஆத்திரம் கொள்ளச் செய்து டிசெம்பர் 3ம் திகதி 1971ல் பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிரான யுத்தத்தை பிரகடனம் செய்தது. இதையே இந்திராவும் "ரோ"வும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். இந்த யுத்தத்தின்போது காவ் உளவுதுறைக்கும் ஜெனரல் சாம் மனெக்ஷா ராணுவத்துக்கும் தலைமை வகித்தனர், ஜெனரல் மனெக்ஷா 12 நாட்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்

இலங்கை விடயத்தில எடுக்கப்படும் அரசியல் தீர்வானது இந்தியாவுக்குச் சாதகமாகவும் இல்லையேல் அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் இந்தியா கரிசனை கொள்ளமாட்டாது. "சீ" இணைப்பு விடயத்தில் அத்தகைய நிலைமைகளே இருந்தன.

அடுத்து இலங்கையின் நிலையைப் பார்ப்போம். ஜே.ஆர் "சீ" இணைப்பை அறிமுகம் செய்யவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த இனவாதிகள் ஜே.ஆருக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். இதையே சாட்டாக வைத்து ஜே.ஆர் "சீ" இணைப்பை வாபஸ் வாங்கிய போதும் இதன் பின்னணியில் வேறு பல காரணங்கள் இருந்தன. ஐ.தே கட்சிக்குள் இருந்த இனவாதிகள் ஜே. ஆருக்கு அழுத்தம் கொடுத்ததில் "ரோ" வின் பின்னணி இருந்திருக்க முடியும். ஜே.ஆர் தமிழருக்கு எதுவும் கொடுப்பதில்லை என்று முடிவுடன் இருந்திருக்கலாம். ஏனெனில் அந்நிய தரகு முதலாளித்துவ சிந்தனாவாதியான ஜே. ஆர் அத்தகைய சிந்தனாவாதிகளைப் பாதுகாப்பதற்கு இலங்கையில் இனவாதம் தொடர வேண்டும் என்பதுடன் இனவாதம் அற்றுப்போனால் சோஸலிச சித்தாந்த வளர்ச்சிக்கும், நடவடிக்கைகளுக்கும் இடமளிப்பதாகும் என்பதை அறிந்து வைத்திருந்தார்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.ஆர் அமெரிக்கா விரித்த வலைக்குள் விழுந்து நன்றாகவே சிக்குண்டு போனார் என்பதே பிரதான கருவாகும். அமெரிக்கா இலங்கை போன்ற ஒரு சிறுநாட்டை தமது வலைக்குள் வீழ்த்திய காரணம் என்ன? அமெரிக்க ராஜதந்திரிகள் இலங்கை விஜயம் மேற் கொண்டது ஏன்? இதுபற்றி சோவியத் இந்திய சார்பு சஞ்சிகையான பிளிட்சில் (பெப் 26,194) தொன் மிதுன் என்ற எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தென்னாசியாவின் இராணுவ தந்திரோபாயங்களை வகுப்பதில் "பென்ரகன்"

**சின்னத்தம்பி வேலாயுதம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சத்திய வசனம் வானொலி நிகழ்ச்சி

மே மாதம் முதல்
கீதவாணி 88.9 எப்.எம் அலைவரிசையில்
கொழும்பு சத்திய வசனம் வழங்கும் நற்சிந்தனையைக்
கேட்டு தேவ ஆசீர்வாதத்தை பெறுங்கள்

**ஞாயிறு காலை 6.15 மணி தோறும்**

**சஞ்சிகை, தியான நூல், இலவச தேவ பாடப் பயிற்சி, பாடல்கள், செய்திகள், ஆவிக்குரிய ஆலோசனைகள்**

செய்தியாளர்கள்
டாக்டர் புஷ்பராஜ், கலாநிதி கமலேசன்
சுவிசேசகர் பிரகாஷ் இயேசுவடியான்
பாகவதர் தேவநாயகம் சாஸ்திரியார்

தொடர்புகளுக்கு;
ராஜன் (416) 754 3041
கீதவாணி (416) 447 9031

இலங்கையில்
தொடர்புகளுக்கு;
த.பெ.இல 1012, கொழும்பு,
தொலைபேசி;695441
தொலைநகல்;698843

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550 -CALL MIKE or RAJAN**





**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறிலங்காவை தேர்ந்தெடுத்து மிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. திருகோணமலைத் துறைமுகத்தை தனது கடற்படைத் தளமாக அபிவிருத்தி செய்ய ஆர்வம் கொண்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வெயின்பேர்கர் அவர்களின் அண்மித்த இலங்கை விஜயத்தில் அமெரிக்க இராணுவ, அரசியல் பொருளாதாரத்தில் அதிக அர்ப்பணிப்பு செய்யுமாறு இலங்கையை வேண்டிக்கொண்டார். இதன் நோக்கம் தென்னாசியாவில் இராணுவ, அரசியல், பொருளாதாரத்தில் ஊடுருவல் செய்ய இலங்கையைப் பாவிப்பதே. திருகோணமலையில் தளம் அமைக்கப்பட்டதும் தென்னாசிய மத்திய கட்டுப்பாட்டகத்தை திருமலைக்கு மாற்றவும் வெயின்பேர்க்கர் திட்டம் வைத்திருந்தார்" இவ்வாறு ஒரு நீண்ட கட்டுரையில் இன்னும் பல அமெரிக்க நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடுகிறது.

அடுத்து 1983 கலவரத்தின் பின் தமிழ் நாட்டின் ஊடாக "ரோ" தமிழ் இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சி வழங்கிய அதே வேளை முன்பு நடைமுறையிலிருந்த திட்டமான இலங்கை இராணுவ, பொலிஸ் படைகளுக்குச்சிறப்பு பயிற்சி இந்திய படைகளால் வழங்குதல் என்பது இந்திய இலங்கை உறவு சீர் கெட்டதனால் தடைப்பட்டுப்போனது. இதனால் ஜே.ஆர் இலங்கை இராணுவத்திற்சிறப்பு பயிற்சிகளுக்கு பாகிஸ்தான் சீனா, இஸ்ரவேலை நாடினார்.

அமெரிக்க ராஜதந்திரி வேர்ணன் வால்ரஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின் பின் கொழும்பிலிருந்த அமெரிக்க தூதரகத்தின் இஸ்ரேல் நலன் பிரிவு திறக்கப்பட்டது இதன் முக்கிய நோக்கம் அமெரிக்காவின் இலங்கைக்கான இராணுவ உதவிகளை இந்த நலன் பிரிவின் ஊடாக அனுப்புவதே. இந்தப்பிரிவு ஊடாக மொசாட் இலங்கை இராணுவத்தினருக்கு ஆலோசனைகளையும் பயிற்சியையும்வழங்கியது. ஜே.ஆரின் மகன் ரவி ஜயவர்த்தன உட்பட பல உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இஸ்ரேல் சென்று பிரதமர் யிற்சாக் சமீர் மற்றும் மொசாட்டின் தலைவர் ஆகியோரை சந்தித்து வந்தனர் பயங்கரவாதத்தை ஒளிக்க சமீர் உதவி செய்வதாக உறுதியளித்தார்.

இந்திரா காந்தி ஜே.ஆருடன் தொடர்பு கொண்டு இஸ்ரேல் நலன் பிரிவை முடிவிடும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு ஜே.ஆர் பின்வருமாறு கூறினாராம். "15000 க்கு மேற்பட்ட இந்திய யூதர்கள் இஸ்ரேலில் வசிக்கிறார்கள் அதேபோல அத்தகைய எண்ணிக்கையில் யூதர்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். என்னை முடிவிடுமாறு கேட்பதானால் முதலில் பம்பாயிலுள்ள இஸ்ரேல் consulate அலுவலகத்தை மூடவும்."

1984 மே அல்லது யூனில் ஜே.ஆர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி றொனால்ட் றேகனுக்கு ஒரு யானைக் குட்டியைப் பரிசளித்து இலங்கையில் பயங்கரவாதத்தை (தமிழ் இளைஞர்கள் போராட்டம்) ஒழித்துக் கட்ட இராணுவ உதவி வழங்குமாறு வேண்டிக் கொண்டார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதே காலகட்டத்தில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து தமது இராணுவ ஒத்துழைப்பும் பயிற்சிக்கான உதவிகளும் தருமாறு ஷியா உல் ஹக்கைவேண்டிக்கொண்டார். ஷியா மனப்பூர்வமான சம்மதம் தெரிவித்துக் கொண்டார். "கறுப்புச்சட்டை" இராணுவப் பிரிவே பாகிஸ்தானால் பயிற்சி வழங்கப்பட்ட இலங்கை இராணுவமாகும்.

இதைவிட லலித், பின்னர் ஜே. ஆர் சீனாவுக்கு விஜயம் செய்து இராணுவ ஒத்துழைப்பை வேண்டிக் கொண்டனர். பீரங்கிப் படகுகள், தாங்கிகள் வரை சகல உதவிகளையும் சீனா வழங்கியது.

இத்தகைய நடவடிக்கைகளை இலங்கை கையாண்ட விதம் இந்தியாவை மேலும் ஆத்திரமூட்டியது. இதனால் இளைஞர்களுக்கான இராணுவப் பயிற்சி தீவிரப்படுத்தப்பட்டது.

தொடரும்.

## ஒரு அஞ்சலி

சகோதரி மொனிக்காவின் அன்புத் தந்தையின் இறப்புச் செய்தி கேட்டு, அவருடைய துயரங்களில் பங்கு கொள்வதுடன் அவரது தந்தையாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக் கிறேன்.


## உதைபந்தாட்டப் போட்டி

**கனடா மொன்றியல் யாழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7வது ஆண்டு 7 பேர் கொண்ட நொக் அவுட் முறையிலான ஒரு நாள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி**

**காலம்; 22.05.94 ஞாயிறு**

**பங்குபற்ற விரும்பும் உதைபந்தாட்ட கழகங்கள் 14.5.94 க்கு முன் விண்ணப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.**

**தொடர்புகளுக்கு**
**(514) 276-8778 குகா**
**345-8445 லிங்கம்**
**342-9634 குணம்**


**மொன்றியல் வாசகர்களுக்கு:**


**கடந்த வாரம் மொன்றியல் வாசகர்களுக்கு தாயகம் அனுப்பி வைக்கப்படவில்லை. தாயகம் பிரதிகள் தேவைப்படுவோர் திரு சின்னத்தம்பி வேலாயுதத்துடன் தொடர்பு கொண்டு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 8வது ஆண்டு நினைவு அஞ்சலி (6 மே 1994)



## தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர்
## சிறி சபாரத்தினம்

தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றின் முத்ததலைவர்கள்
தங்கத்துரை, குட்டிமணி வழிவந்த தன்னலமற்ற தங்கத்தலைவனே!
"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்பதே தாரக மந்திரமாக
தமிழீழத் தாயகத்தின் விடுதலையொன்றே வாழ்வின் இலட்சியமாக
சுயசரிதையில் திருமண அத்தியாயத்தையே இடம் பெறாமல் செய்து விட்டுப்
புரட்சிக்குப் பொட்டிட்டுக் களத்திலே போராட்டத்தை முன்னெடுத்துக்
கொண்டிருந்த வேளையில் ஒற்றுமையின் பெயரால் ENLF என்ற போர்வைக்குள்
ஒளிந்துகொண்டு ஸ்ரீலங்கா அரசு செய்து முடிக்க வேண்டிய வேலையைத்தாமே செய்து
முடித்து எதிரியின் கைகளைப் பலப்படுத்திப் போராட்டத்தைப் பின்நோக்கி நகர்த்திய
தமிழின விரோதசக்திகளால், படுகொலைசெய்யப்பட்ட வீரத்தலைவனுக்கும்,
"அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவருக்கு ஒரு மரணம்" என்பதற்கமைய களத்திலே
வீர மணத்தைத் தழுவிக் கொண்ட சகதோழர்களுக்கும்,

### எமது வீரவணக்கங்கள்

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"
ஒன்றுபடுவோம் உட்பகை விடுவோம்!! வென்று நிமிர்வோம்!!!

**தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)**

www.tamilarangam.net

> 'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'

# வாழ்க்கையே வெறுத்துப் போச்சு! இல்லாத மானத்திற்கு நஷ்டமா?

அறிஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூரியஸ்

கொஞ்ச காலமாக நடைபெறும் விடயங்களால் எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. சமீபத்தில் வயதான ஒரு மாதுவைக் கண்டேன். ஒரு டீச்சராக அல்லது ஆசிரியரின் மனைவியாக இருக்கக் கூடியவர். நான் லிப்டுக்கு காத்திருக்கும் போது வந்தார். அவரைத் தாங்கி கூட்டி வந்தது இன்னொரு இளைஞர். இளைஞர் இந்த மாதை உள்ளே விட்டு வெளியே சென்று விட்டார். கதவு பூட்டப் பட்டதும் வெளியே சென்ற இளைஞர் சத்தமாக எதையோ கேட்க, அதற்கு பதில் சொன்னார் மாது. பையன் புரிந்ததும் புரியாததுமாக சென்று விட்டான். என் பக்கமாக திரும்பிய அந்த வயோதிப மாது சொன்னார்.. can under-stand ஒ தெரியாது!

இதன் கருத்து 'விளங்கியிருக்குமோ தெரியாது' என்பதாகத் தானே இருக்கும். கிழிந்தது போ! வாழ்க்கை வெறுத்தே போச்சு.

★ ★ ★

இதே மாதிரி முன்பு மொன்றியலில் வேலை செய்த போது சாந்தோ டொமினிகோ தீவைச் சேர்ந்த ஒரு ஸ்பானிய பையன் என்னோடு வேலை செய்தான். இவனுக்கு ஆங்கிலம் சுட்டுப் போட்டாலும் வராது. எனக்கோ ஸ்பானிய மொழி தலைகீழாய் கட்டினாலும் வராது. ஏதோ சர்வதேசப் பாசையில் கருத்துப் பரிமாற்றம் நடக்கும்.

அங்கே ஒரு கயானியப் பெண் வந்து சேர்ந்தாள். அசல் யாழ்ப்பாணத்துப் பெண் மாதிரி. அவள் கொஞ்சம் கறுப்பு. மயக்கும் கண்கள். ஆண்களைக் கண்டால் வழிந்து கொண்டு நிற்பாள். இவளை இந்த 'அமிகோ'வுக்கு பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை என்றால்... அவளைக் கண்ணில் காட்ட முடியாது. ஒருநாள் பேய் எரிச்சலில் எனக்கு சொன்னான்.

'அமிகோ.. this clare.. (கிளரே என்றால் பெண்ணாக இருக்க வேண்டும்) beautiful.. NO...

நண்பனே, இந்தப் பெண் அசிங்கமானவள் என்பது இதன் கருத்தாய் இருக்க வேண்டும். இவருக்கு ugly என்று சொல்லத் தெரியவில்லை. இதனால்தான் அழகு. இல்லையாம். அறுந்தது போ! அப்போதே வெறுத்த வாழ்க்கை!

★ ★ ★

என் மாஜிக் காதலி சூர்ப்பநகாவை என் நண்பர் ஒருவர் கண்டாராம். இப்போதும் ஆங்கிலம் படிக்கிறாளாம். திருமணம் செய்த பின்பும் ஆங்கிலமா? ஒருவேளை 'வெல்பெயர் அதிகாரி களுக்கு தெரியாமல் இரசியமாக நடத்தப்பட்ட' திருமணமாக இருக்குமோ? காலம் கெட்டுப் போச்சு. பத்து வருசமாக ஆங்கிலம் படித்தால்.. இப்போது ஆங்கில இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் கிடைத்திருக்கும். ஆனால் இப்போது 'ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக' படிக்கும் வகுப்பில் இருக்கிறாள்.

எனக்கு வாழ்க்கை வெறுத்தது வேறு விடயம்.. அவள் என்னைக் கைவிட்ட போது கூட வாழ்க்கை வெறுக்கவில்லை. ஆனால் பத்து வருடங்களுக்கு முன்னர் அவளுக்கு ஆங்கிலம் படிப்பித்ததே நான் தானே. வாழ்க்கை வெறுக்காமல் என்ன செய்யும்?



★ ★ ★

இந்த கம்பியூட்டர் யுகம் மனிதனை உண்மையாகவே குழப்பி விட்டது. user friendly என்ற 'பாவிப்பதற்கு சுலபமான' என்ற பதம் அப்பிள் மக்கின்ரோஷ் உடன் தோன்றியது. ஆனால் ஏன் எதற்கு என்ற காரண காரியமில்லாமல் இந்த user friendly பயன்படுகிறது.

பிரிட்டிஷ் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் சந்தித்துக் கொண்ட போது யார் உண்மையான ஆங்கிலம் பேசுவதாக விவாதம் எழுந்தது. ஆங்கிலேயர் தனது உச்சரிப்பு, பாவனை பற்றி புழுகிக் கொண்டார். அமெரிக்கர் சொன்னாராம்... நீங்கள் ஆங்கிலத்தை உருவாக்கியிருக்கலாம். ஆனால் we made it user friendly...

இந்த user friendly யில் வாழ்க்கை வெறுத்தது.. சமீபத்தில் இங்கேயுள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றின் வெளியே அன்றைய வழிபாடுகள் பற்றி அறிவித்தல் இருந்தது. அதில் எழுதியிருந்தது user friedly sermons என. கிழிந்தது போ!

★ ★ ★

தமிழனுக்கு ஆங்கில மோகம் அந்த மாதிரி... தமிழில் பெயர் வைக்கும் போதுஷா, ஷன், ஷனு, ஷிகா என்று முடியும்படி நியூமரோலஜி கணக்குப்படி வைப்பதுண்டு. இந்த நியுமரோலஜி படுத்தும் பாட்டால் தமிழ் கடைகளும் சரி, பிள்ளைகளும் சரி, அவற்றின் பெயர்கள் சிதைக்கப்படுவது தெரிந்ததே. சமீபத்தில் வீரகேசரி பார்த்தேன். அதில் ஒரு நாட்டியச் சிறுமி பற்றிய செய்தி.. அதில் தர்ஷிகா என்ற பெயரை டர்ஷிக்கா என்று எழுதியிருந்தார்கள். மொத்தத்தில் தமிழ் பெயரை ஆங்கிலப்படுத்தி பின்னர் ஆங்கிலத்தில் இருந்து

## அறு(சு)வை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழிற்கு பெயர்த்திருந்தார்கள். மெல்லத் தமிழினிச் சாகும். தமிழை ரமில் என்று எழுத வெளிக்கிட்டதால் வந்த பயன் இது. வாழ்க ரமில். வாழ்க நியூமரோலஜி.

★ ★ ★

சமீபத்தில் உலகத்தமிழர் பெண்கள் அமைப்பு ஒன்று உருவானது. இதில் அங்கத்தவர் தெரிவு வழமை போல.. தாங்களே முடிவு செய்து வந்து நடந்த விடயம். இதில் ஒரு பெண் முக்கிய பதவி ஒன்றுக்கு தெரியப்பட்டாராம். இவரை தெரிவு செய்யப்பட்டோர் பெயர்களை வாசிக்க சொன்ன போது. . சில பெயர்களை வாசித்து விட்டு இறுதியில் வாசிக்க முடியாமல்... I can't read (tamil) என்று இருந்து விட்டாராம். தமிழ்பெண்கள் அமைப்பு! தெரிவு செய்யப்பட்டவருக்கு தமிழ் தெரியாது. பூப்போன்ற பெண்களே! பொன்னுட்டின் கண்களே! காப்பாற்ற வேண்டியதை கைநழுவ விட்டீரோ.. ஐ மீன்.. மொழியை!

★ ★ ★

இப்போது எனக்கு வாழ்க்கை வெறுத்த விடயம் ஒன்று... இந்த மானநட்ட வழக்கு விவகாரம். (தன்)மானம் இருப்பவர்கள் தான் லாப நட்டக் கணக்கு பார்க்க முடியும். நின்று போன பத்திரிகை ஒன்று மீது நின்று போன பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிருராம். மான நட்டம் ஏற்பட்டதாக! கியூறியஸ் எழுதிய அதே விடயங்களை எழுதிய காரணத்தால் இந்த நோட்டீஸ். கியூறியஸிற்கு வாராத காரணம் என்னவோ தெரியாது. ஒருவேளை மானலாப வழக்குத் தொடரப்படுமோ என்னவோ? குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும் அல்லவா!

இங்கே ஒரு கதையும் அங்கே ஒரு கதையும் எழுதியதன் காரணம் என்ன என்பதற்கான விளக்கம் சொல்வதை விட்டு, வழக்குத் தொடர்வதால் 'இழந்த மானம்' திரும்பி விடுமா? இதை விட அதிகமான மானநட்டம் மொன்றியலில் வெளிவந்த நோட்டீஸால் ஏற்பட்டிருக்குமே? அதற்கு என்ன செய்வதாய் உத்தேசம்?

★ ★ ★

மொன்றியல் நோட்டீஸ் விவகாரம் பற்றி பல ரொறன்ரோ வாசகர்கள் தொடர்பு கொண்டு.. அது பற்றிய முழு விபரங்களும் தேவை என்று கேட்டிருந்தார்கள். அனுமதேய நோட்டீஸ்களை எல்லாம் பிரசுரிப்பதற்கு நாங்கள் என்ன தமிழோசையா நடத்துகிறோம்? ஆதாரபூர்வமற்ற செய்திகளை பிரசுரிப்பது நியாயமானதுமல்ல. ஆனால் இந்த நோட்டீஸ் குறித்து பத்திரிகை ஒன்றுக்கு 'இதைப் பிரசுரித்தால் சட்ட சிக்கல்களை சந்திக்க வேண்டி வரும்' என்று மிரட்டப்பட்டதாக (?) கூறப்பட்டது. இந்த நோட்டீஸில் இருந்து சில பகுதிகள்...

கொழும்பு பத்திரிகையில் இருந்து பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட இவர் பயிற்சியை முடித்துக் கொண்டு இங்கே அகதி தஞ்சம் கோரியதாகவும், வந்து உலகத்தமிழரில் ஒரு நாள் தங்க இடம் கேட்டதாகவும் அங்கிருந்து வெளியேற இரண்டு வருடங்கள் எடுத்ததாகவும் (நாகரிகம் கருதி ஒரு வரி தணிக்கை!) அந்த நாட்களில் உலகத்தமிழருக்கும் அவர்களின் வானொலிக்கும் செய்திகள் எழுதி பிரபல்யத்தை ஏற்படுத்திக் கொண்டு அங்கு பகலில் தூங்கி இரவில் விழித்து உளவு வேலைகள் செய்து, சுயரூபம் தெரிய வர தானாகவே அங்கிருந்து வெளியேறியதாகவும் ஏற்பட்ட முரண்பாட்டினால் 'மேலிடத்திற 'கெல்லாம் மேலிடத்திற்கு தெரியும்' என்று உலகத்தமிழரை மிரட்டியதா கவும் அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒற்றைக்கண் சிவராசன் பற்றி இந்திய உளவுத்துறை திணறிக் கொண்டிருந்த போது படம் போட்டு ஆதாரபூர்வமாக இந்திய உளவுத் துறைக்கு விளங்கப்படுத்தியதாகவும் தாய் நாட்டிற்கு இதனால் துரோகம் செய்ததாகவும்... என்று இன்னோரன்ன விடயங்கள். வெளியிட்டது 'காண்டீபம்'. வில்தான். அம்பு இல்லை என்ற பின்குறிப்புடன்.

ஆனால் அதன் பின்னர் கொழும்பு செய்தி ஒன்றில் நமது விசேட நிருபர் 'காண்டீபன்' என்றிருந்தது. இவரும் வில்தானோ? எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன்? ஒருவேளை அன்றே விளம்பரத்திற்காக இப்படி ஒன்றை எழுதியிருக்கலாமோ? என்னவோ யார் கண்டார்.

★ ★ ★

இதற்குள் திடுக்கிடும் செய்திகளை வெளியிட்ட 'உரசு' பத்திரிகை இப்போது துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடிக் கொண்டிருக்கிறது. வழமை போல் வெட்டி ஒட்டி, தமிழ் மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கும் இப்பத்திரிகை தனது செய்தி ஒன்றில் கிட்டுவின் மாஜி வலதுகரம் பற்றி 'திடுக்கிடும் செய்தி' ஒன்றை வெளியிட்டிருந்தது. ரோ அதிகாரிகள் அவரைச் சந்தித்ததாக வந்த செய்தி. அது உண்மையில் முதலில் கொழும்பின் 'தீவுப்' பத்திரிகையில் வந்தது. அதை 'தீவகத்தார்' பத்திரிகை முன்பக்கத்தில் போட்டு, வானொலி விளம்பரம் வேறு செய்தது. இது பற்றி கியூறியஸ் எழுதியிருந்தான்.

இப்போது அன்னார் அப்பத்திரிகை மீது மானநட்ட வழக்கு நோட்டீஸ். புனைபெயரில் ஒழிந்து கொண்ட நக்கீரனும், தீவகமும் நைசாக மாறி விட, பத்திரிகையில் இப்போது ஆசிரியர், துணை ஆசிரியர் பெயரைக் காணோம். அகப்பட்டது வெளியீட்டாளர்.

★ ★ ★

இதுதான் மூலம் குறிப்பிடாமல் மறுபிரசுரம் செய்வதால் வருகின்ற வினை. தீவுப் பத்திரிகையின் ஞாயிறு இதழில் வரிகளுக்கு இடையில் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அச்செய்தியை மூலம் குறிப்பிடாமல் ஏதோ தங்களுக்கு யுத்தமுனை நிருபர் மூலம் கிடைத்த world exclusive கட்டுரை மாதிரி வெளியிட்டு ஆப்பிழுத்ததால் வால் மாட்டிக் கொண்டு விட்டது.

ஆனாலும் கொத்தலாவலை விவகாரத்திலும் இருவர் 'கொத்தலாவலைக்கு புலிகள் பற்றி விபரங்களை வாரி வழங்கினார்களாம்' என்ற செய்தியால் மானநட்டம் ஏற்படவில்லைப் போலும்.

பேசாமல் ஐலண்ட் மூலத்தைக் குறித்திருந்தால் பிரச்சனை தீர்ந்திருக்கும். அது சரி.. ஐலண்ட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது வழக்குத் தொடராததன் காரணம் என்னவோ? ஜலண்ட்டில் somewhere in North America வில் இருந்து எழுதுபவர்கள் தான் இங்கே இருக்கிறார்களே. அவர்கள் மூலம் ஒரு மறுப்பு?

★ ★ ★

மொன்றியலில் ஒரு கவியரங்கு... முன்பு தாயகம் பொங்கல் வாழ்த்து போடாததை ஒட்டி கவிபாடிய 'கவிராயலிங்கனார்' இப்போதும் கவிதை பாடினார். பாடிய கவிதை யாரைப் பற்றி... 'கிழிந்து போன' எழுத்தாளர் பற்றித் தான். அப்படி என்ன தான் கோபமோ? தமிழன் இப்படித் தான். அங்கே ஏ.கே கிடைத்த தமிழன் குஷி. இங்கே மைக் கிடைத்தாலும் பேனா கிடைத்தாலும் தமிழனுக்கு குஷி...

அவர் இனி தனது சுவரில் 'அறுப்பாரோ? கிழிப்பாரோ?' என்னவோ இன்னொரு மானநட்ட வழக்கு வேண்டாம். போதும் சாமி.

★ ★ ★

இந்த துண்டுப்பிரசுரம் மாதிரி இன்னொரு கடிதம் தாயகம் ஆசிரியருக்கு வந்து சேர்ந்து கியூறியஸ் கையில் கிட்டியது. முன்பு ஒட்டக்கூத்தன் கூத்தடிக்க இடம கொடுத்த பத்திரிகை ஆசிரியர் பற்றியும் அவரது பூர்வீகப் பின்னணி பற்றியும் மோசமான, பிரசுரிக்க முடியாத விடயங்கள். இப்படி ஒரு கடிதம் தாயகம் பற்றி வந்திருந்தால் அன்னார் தயக்கமின்றி பிரசுரித் திருப்பார். தாயகம் என்ன தமிழோசையா? இந்தக் கடிதத்தின் பிரதிகள் பலருக்கு அனுப்பப் பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. அந்தக் கடிதத்தில் அந்த ஊரைச் சேர்ந்த மூவரின் பெயர்கள், விலாசங்கள் குறிப்பிட்டு அவர்களிடம் செய்தியை ஊர்ஜிதம் செய்யும்படியும் கேட்கப்பட்டி ருக்கிறது.

மானத்திற்கு நட்டம் ஏற்படுத்தும் விடயங்கள் அதில் உள்ளன. மானரோசம் இருந்தால் கையில் உள்ள பேனாவைத் தூக்கி எறிந்து விட்டு 'துறவியாகப்' போவது மேல். மணிபல்லவம் அல்லவா? துறவிகளுக்கும் அவர்களின் 'சரணங்களுக்குமா' பஞ்சம்?

முன்பு ஒட்டக்கூத்தன் ஒரு தொலைபேசி இயந்திரத்தில் எதையோ பதிவு செய்து வைக்க, அந்த இலக்கத்தைக் கொடுத்து கேட்டு மகிழுங்கள் என்று சொன்ன பத்திரிகையல்லவா! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். எதற்கும் சம்பந்தப்பட்டவர் இதை வாசித்து மகிழ்வது நல்லது.

எனக்கென்னவோ, இந்த 'இலக்கிய முயற்சியில்' ஒட்டக் கூத்தனின் கரங்கள் இருக்கலாமோ எனப் படுகிறது. முன்பு அன்னாரால் கைவிடப்பட்ட போது இவ்வாறான விசயங்களைச் சொல்லித் தான் அவரும் புலம்பிக் கொண்டிருந்தார்.

★ ★ ★

இலக்கிய முயற்சி என்றதும் இலக்கியச் சந்திப்பு ஞாபகத்திற்கு வருகிறது. இம்முறை இலக்கியச் சந்திப்பு பற்றிய கட்டுரையை எழுதியது ப.குமாரசாமி. (இது கட்டுரையில் விடுபட்டு விட்டது). இக்கட்டுரையில் இங்கே வெளிவந்து நின்று போன ஒரு பத்திரிகை பற்றி அங்கு நடைபெற்ற விமர்சனம் பற்றி குறிப்பிட்டிருக்கிறது. இப்பத்திரிகை சார்பில் அங்கு கருத்துச் சொன்னவர் 'தாயகம் புலி எதிர்ப்பு பத்திரிகை' என்று கண்டுபிடித்திருக்கிறார். இதனால் தான் தாயகம் பல வாசகர்களைச் சேர முடியாமல் இருக்கிறது என்றிருக்கிறார். இலக்கியத்திற்கும் இவருக்குமான தொடர்பை நினைத்தால் வாழ்க்கை வெறுக்கும். எல்லாம் காலம் தான். இ(து)வர் பற்றி பின்னர்...

பிரச்சனை என்னவென்றால், இங்கேயிருந்து சந்திப்பிற்காக அங்கே சென்று விளக்கம் கொடுப்பதற் கிடையில் இங்கே பத்திரிகை நின்று விட்டது. அது அவருக்கு தெரியுமோ என்னவோ? மொத்தத்தில் புலிகளை ஆதரித்தும் சேர வேண்டிய வாசகர்களைச் சேர முடியாமல் போனதில் கியூறியஸ்க்கும் மனவருத்தம்தான். anyway, my heartfelt condolences.

★ ★ ★

condolences என்றதும் ஞாபகம் வருகிறது. சென்ற வாரம் மொனிக்காவின் தந்தையார் காலமாகி விட்டார். இதனால் தாயகம் வெளிவரவில்லை. முன்னறிவித்தல் இல்லாமல் தாயகம் நின்று போனது. 'சக்தி'யும் நின்று போய் விட்டது, தாயகமுமா? என்று சிலர் கேள்வி எழுப்பினர். பெரும்பாலோர் ஞாயிறு வரை இடம் கொடுத்து, ஞாயிறு காலை தொடங்கி விட்டார்கள். தாயகத்தின் நேர ஒழுங்கில் அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு! ஞாயிறு வரை பொறுத்தார்கள். பின்னர் தொடங்கி விட்டார்கள். ஏன் இந்த வாரம் பத்திரிகை வரவில்லை என்று.

விடயம் அறிந்ததும் குடும்ப விடயம் போல, துயரில் பங்கு கொண்டார்கள்.

இதுதான் தாயகம் வாசகர்களுக்கும் மற்றவர்களுக்கு மான வித்தியாசம். தாயகம் நிற்கக் கூடாது என்பதில் உள்ள அக்கறை, தாயகத்தை ஒரு குடும்பமாக நேசிக்கும் பண்பு, எங்களுடையது என்று தாயகத்தின் மீது கொள்ளும் உரிமை... சரிதான். தாயகம் சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டும்தான்.

இந்த வாசகர்களைச் சேருவதே பெருமைக்குரிய விடயம். இந்த வாசகர்களை ஏமாற்றி, தாயகம் வாசிக்காதவர்களுக்காக நிலைப் பாட்டை மாற்றி புலித்தோல் போர்க்க முடியுமா?

★ ★ ★

சென்ற வாரம் நூல் வெளியீட்டு விழா.. பிரதம விருந்தினர் வருகை தரவில்லை. இன்னொரு நோட்டீஸ் வெளிவரலாம் என்ற எண்ணமோ என்னவோ? ஆவலோடு கமெராவுடன் நின்றவர்களுக்கு ஏமாற்றமாய் இருந்திருக்கலாம். நடத்தியவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள். யாரை கைக்குள் போட்டுக் கொண்டால் விசயம் நடக்கும் என்று தெரிந்தவர்கள்.

யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே. அட. அண்டக்காக்கைக்கும் குயில் களுக்கும் பேதம் புரியலே.

★ ★ ★

ரொறன்ரோ சண்ணும் ஸ்டாரும் இப்போது பெண் ஒருத்தி கறுப்பர்களால் கொலையுண்டது குறித்த விவகாரத்தில் கடுமையாக மோதிக் கொள்கின்றன. சுவாரஸ்யமான விடயம் தான். பொலிசார் எடுக்கவிருந்த நடவடிக்கைகள் பற்றி ஸ்டார் செய்தி வெளியிட்டு சிக்கலை அதிகப்படுத்தியது என்று சண் வாதிக்கிறது. தனது வாசகர்களின் அறிந்து கொள்வதற்கான உரிமை பற்றி ஸ்டார் வாதிடுகிறது. மொத்தத்தில் புலிகளும் அரசும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களைப் பாதுகாப்பதற்காக அடிபட்ட மாதிரி... இதில் இன்னொரு சுவாரஸ்யம் வேறு. 'இங்கே சில பத்திரிகைகள் தங்கள் மீது சேறு வாருவதை இந்த ஸ்டார்-சண் விவகாரத்துடன் ஒப்பிட்டு... ஆகா.. . உள்ளூர ஸ்டார் என்ற நினைப்பு. ஆனால் ஸ்டார் ஆசிரியர் அங்கொன்றும் இங்கொன்று மாக வேறுவேறு கதை சொன்னதை நான் காணவில்லை.

ஆனால் இங்கே வருகின்ற எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் இந்தப் பத்திரிகை மீது காதல்.. ஒன்று படம் போட்டது. இன்னொன்று சஞ்சயன் படம் போட்டது. இன்னொன்று 'செய்திகளை வாரிவழங்கியது'. இன்னொன்று சாம, பேத, தான, தண்டத்தில் இறங்கியது. போதாக்குறைக்கு கியூறியஸ் வேறு. எல்லாருக்கும் அப்படி ஒரு காதல். இந்த வேகத்தில் சேறு வீசப் புறப்பட்டால், மலர்வதற்கு செந்தாமரையே இருக்காது.

ஒப்பீடு ஒப்பிடலாம் தான். அதற்காக யாரை ஒப்பிடுவது என்று ஒரு விவஸ்தை வாணும்?

★ ★ ★

சாம, பேத, தான, தண்டம் என்றதும் ஞாபகம் வருகிறது.. சில வருடங்களுக்கு சீக்கியர் ஒருவர் வான்கூவரில் ஒரு சீக்கிய பத்திரிகையாசிரியரைக் கொல்ல முயன்றார். இந்தோ கனடியன் ரைம்ஸ் என்ற பத்திரிகையின் ஆசிரியர் தாரா சிங் ஹேயரை 1988 இல் 23 வயதான ஹர்கிரட் சிங் பாகா என்ற சீக்கியர் சுட்டுக் கொல்ல முயன்றார். தற்போது ஆசிரியருக்கு இடுப்புக்கு கீழ் உணர்ச்சியில்லாத நிலையில் உள்ளார்.

கனடாவில் உள்ள பஞ்சாபியர்கள் மத்தியில் சீக்கிய தனிநாட்டுக் கோரிக்கையாளர்களால் நடத்தப்படும் வன்முறைகள் பற்றி கடுமையான விமர்சனங்களை வைத்தவர் இந்த ஆசிரியர். இவரைக் கொல்ல சீக்கிய தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டுவதாக கனடிய உளவு பொலிசார் இவருக்கு தெரிவித்திருக்கிறார்கள். இவரைக் கொல்ல நடத்தப்பட்ட சர்வதேசச் சதியின் ஒரு அங்கம் தான் இந்த சம்பவம் என்று விசாரணையின் போது அரச தரப்பு சட்டத்தரணி கூறியிருந்தார். இந்திய இராணுவத்தில் மேஜராக இருந்து இளைப்பாறி தற்போது ஒன்ராறியோவில் வசிக்கும் ஒரு சீக்கியரின் மகனை பாகாவை பாகிஸ்தானில் வைத்து கனடாவை மையமாகக் கொண்ட சீக்கிய தீவிரவாதிகள் சேர்த்துக் கொண்டார்களாம். கனடாவிற்கு அகதியாக வந்து சில மாதங்களில் பத்திரிகையாசிரியர் மீது துப்பாக்கிச் சூடு நடந்தது.

தற்போதும் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக வான்கூவரில் வெளியிடப்படும் பஞ்சாபிய பத்திரிகையில் பாகா, திரும்பவும் முயன்று இந்த ஆசிரியரைக் கொல்ல வேண்டும் என்று எழுதப்பட்டிருந்ததாம்.

இந்தக் கொலைக் குற்றச்சாட்டில் 14 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கனடாவில் சிறையில் இருந்த இவரை தற்போது மிகவும் இரகசியமாக இந்தியாவுக்கு நாடு கடத்தியிருக்கிறார்கள்.

★ ★ ★

நம்ம கதை மாதிரித் தான். நம்ம பகுதியிலும் கொஞ்சப் பேரை இந்த மாதிரி கடத்தினால் தான் இங்கே நிலைமை உருப்படும் போல. இதற்காக, பத்திரிகையாளர் தாக்கப்பட்டார் என்றால்.. இந்த சீக்கிய பத்திரிகையாளரோடு தங்களை ஒப்பிடுவதற்குத் தான் ஆளிருக்கும்.

புலிகளை எதிர்த்து எழுதக் கூடாது என்ற மிரட்டலுக்காகவே நிலைப்பாட்டை மாற்றிக் கொண்ட பத்திரிகைகள், உலகத்தமிழரில் இருந்து விரட்டப்பட்டாலும் புலிகளை ஆதரிக்கின்ற பத்திரிகைகள், எதிர்ப்பது மாதிரியும் ஆதரிப்பது மாதிரியும் நடிக்கும் பத்திரிகைகள் எல்லாமே எங்கள் துப்பாக்கிக் கலாசாரத்தின் எச்சங்கள் தானே. இந்த பயமுறுத்தலினால் எடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் தானே.

ஆனால் கியூறியஸ்க்கு எரிச்சல் வருகின்ற விடயம்... பத்திரிகை வாசித்தறியாதவர்கள் எல்லாம் எப்படி எழுத வேண்டும் என்று பத்திரிகையாளருக்கு சொல்ல முயற்சிப்பது தான்.

*This newspaper is published by Georgicka communications. A member of Ethnic Press Council Of Canada. Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net

SIVA'S TRADING CO LTD
321-2739

# ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்**

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

---

# P.S.T.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**Video Transfer (Any system) $8.99**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்